357

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை வடிக்கைக

செயலக வெளியீடு

மார்ச் 27, 1999 தொகுதி 67, எண் ௩

Y2/1/3/1999
N'14 67-3
22/0733

வெளியீடு 01-02-2000

Issued 01-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**சனிக்கிழமை, மார்ச் 27, 1999 - தொகுதி 67 - எண் 3**

**Saturday, 27th March, 1999—Volume 67 - No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

**27- 3 -1999**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


1. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—
தொடர்ச்சி.

| | |
|---|---|
| திரு. ம. அப்துல் லத்தீப் .. .. | 377-393 |
| திரு. ஜி. பழனிசாமி .. .. .. | 393-405 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. | 405-426, 478 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. | 412, 423, 427-477 |

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 480

221 073

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 13, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030,**
**1999 மார்ச் 27, சனிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

*சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.*

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களை நேற்றையதினம் தேடிக் கொண்டே இருந்தேன். அப்பொழுது கிடைக்கவில்லை. நேற்றைய தினம்தான் உங்கள் பெயர் போடப்பட்டிருந்தது. ஆனால், நீங்கள் சொல்லாமல்கூட போய்விட்டீர்கள். நீங்கள் பெயர் கொடுத்ததே நேற்றையதினம் பேசுவதற்காகத்தான் கொடுத்தீர்கள். ஆகவே, தயவுசெய்து இனிமேல் நீங்கள் கொடுத்த தேதியில் பேசுங்கள். இன்றைக்கு இப்பொழுது பேசுங்கள். (சிரிப்பு)*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், 12 நிதிநிலை அறிக்கைகளை*

இந்த அவையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கைகள் எல்லாவற்றையும் அவையில் இருந்து நேரடியாகக் கேட்டு—அநேகமாக ஒருசில நிதிநிலை அறிக்கைகளைத் தவிர— இந்த அவையில் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்த மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய நல்ல வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன் கலைஞர் அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பை அளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, கலைஞர் அவர்கள் மக்களின் நலிவுகளை நீக்கி பொலிவுகளை ஏற்படுத்த என்னென்ன செய்ய வேண்டுமோ, என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டுமோ, எந்த நிதிக் கொள்கையை, வரிக் கொள்கையை முறையாகக் கொண்டு வர வேண்டுமோ அவற்றையெல்லாம் ஆழச் சிந்தித்து அளித்ததைப்போலவே, இந்த நிதிநிலை அறிக்கையையும், முறையாகவும், நிறைவாகவும் சமர்ப்பித்திருக்கிறார்கள்; அதை நான் வரவேற்கின்றேன். வரிக் கொள்கைகளாலும், நிதிக் கொள்கைகளாலும் பொருளாதாரத்தில் நிதிநிலை அறிக்கைகள் சமர்பிக்கப்படும்பொழுதெல்லாம் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மாற்றம் மக்களுக்கு ஏமாற்றங்களாக இல்லாமல் மன நிறைவாக அமைந்திடல் வேண்டும். அந்த வகையில் எப்பொழுதும்போல் இந்த ஆண்டும் கலைஞர் அவர்கள் பெருவெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

மக்களிடத்திலே இருக்கிற பணத்தை அரசு கஜானாவுக்கும், அரசு கஜானாவிலே இருக்கிற பணத்தை மக்களிடத்திலேயும் சேர்ப்பிக்கும்பொழுது இரண்டு நோக்கங்கள் அதற்கு அடிப்படையாக அமைந்திடல் வேண்டும். அதிலே மிக முக்கியமானது விலையேற்றத்தைத் தடுக்க வேண்டும். பண வீக்கத்தைக் குறைக்க வேண்டும். பொருளாதாரத்தில் ஒரு செம்மையையும், செழுமையையும் ஏற்படுத்த வேன்டும். இந்த அடிப்படைகளை நாம் சிந்தித்துப் பார்த்தால் இந்த நிதிநிலை அறிக்கையில் இரண்டு நோக்கங்களும் நிறைவேறுகிற வகையில் கலைஞர் அவர்கள் எங்கெங்கு வரியைக் குறைக்க வேண்டுமோ, எங்கெங்கு வரிகளை உயர்த்த வேண்டுமோ அதையெல்லாம் முறையாகச் செய்திருக்கிறார்கள் என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

முற்பகல் 9-35

நாங்கள் எல்லாம் பொருளாதாரம் ஓரளவுக்குப் படித்திருக்கிறோம். நிதிக் கொள்கை—Public Finance—இதையும் படித்திருக்கிறோம். ஆனால்,



நாங்கள் எல்லாம் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும்தான் படித்திருக்கிறோமே தவிர, பரந்து, விரிந்து கிடக்கின்ற இந்தச் சமுதாயத்தின் பல்கலைக்கழகம், அனுபவபூர்வமான பல்கலைக் கழகத்தில் படித்தவர் அதிலே சிறந்து விளங்குபவர் கலைஞர் அவர்கள். அந்த வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையை எல்லோரும் பாராட்டுகிறார்கள். கற்றவர்களும், மற்றவர்களும், பாராட்டுகிறார்கள். எனவே நானும் பாராட்டுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது பல எதிர்பார்ப்புகள் தனிப்பட்ட உறுப்பினருக்கும் இருக்கும்; நாட்டுக்கும் இருக்கும். அந்த எதிர்பார்ப்புகளை பொது நிலையிலே நின்று பார்க்கும்போது இன்றைக்கு அவை நிறைவேறியிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

என் சார்பாக என் தொகுதி மக்களின் தேவைகள் நிறைவேற வேண்டும் என்ற கடமை உணர்வோடு சிலவற்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இப்போதுதான் நான் கலைஞர் அவர்களிடம் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டிருந்தேன். ஏற்கெனவே இந்த அவையில் தாங்கள் என்னுடைய தொகுதிக்கு இவை செய்து முடிக்கப்படும், தொடங்கப்படும் என்று சொன்னீர்களே, இதிலே அதற்கான குறிப்புகள் இல்லையே என்று கலைஞரிடத்திலே உரிமையோடு கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள், குறிப்புகள் வருங்காலத்திற்கு, ஆனால் ஏற்கெனவே நான் சொன்ன, கொடுத்த வாக்குறுதிகள் தொடங்கப்பட்டுவிட்டன. அவை பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட வேண்டியதில்லை. அவை கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள், நிகழ்காலத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று அவர்கள் சொல்லி கொஞ்சம் கலக்கம் அடைந்திருந்த எனக்கு ஆறுதல் கூறக்கூடிய அளவுக்கு மீண்டும் தன்னுடைய வாக்குறுதியை இங்கே உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதிலே மிக முக்கியமானது வெள்ளக்கல் அணைத் திட்டம் நிம்மியப்பட்டியில் சந்தனத் தொழிற்சாலை, தோல் தொழிற்சாலைகள் செம்மையாகவும், முழுமையாகவும், நிறைவாகவும் செயல்படக்கூடிய வகையிலே முத்தரப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்குப் பிறகு அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், இவை எல்லாம் குறித்து நான் மீண்டும் விரிவாக வற்புறுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. காரணம், கலைஞர் அவர்கள் இது குறித்து

தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் எனக்கு முழுமையான நம்பிக்கை உண்டு.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அருள்கூர்ந்து எங்களுடைய பகுதிகளுக்கு எல்லாம் வந்து பல இடங்களில் சுற்றுப் பயணம் செய்து ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்திற்கான ஒரு விரிவான ஆலோசனை நடத்தி, கலந்துரையாடல் நடத்தி, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை எல்லாம் அழைத்து என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் ஆய்வு செய்து நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதிலே மிக முக்கியமான திட்டமாக அவர்கள் அறிவித்திருப்பது காவிரியில் நீர் எடுத்து, ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதாகும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலுள்ள வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற நகரங்கள் பயன் அடையும், தீராத தாகத்தில் இருந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களுடைய தாகத்தைத் தீர்ப்பதற்கு வழிவகை காணப்படும் என்று அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். இப்போது அந்தத் திட்டத்திலே ஏதோ ஒரு தொய்வு இருப்பதாக, ஒரு மாற்றம் இருப்பதாக நான் அறிகிறேன். அது எங்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாங்கள் மாண்புமிகு அமைச்சர்...

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திட்டத்தை அறிவித்துவிட்டார்கள்; திட்டத்தை அறிவித்துவிட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். திட்டத்தை நானாக அறிவித்து விடமுடியாது. முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி வேண்டும். மற்ற காரியங்களெல்லாம் நடைபெற வேண்டும். ஆனால், கூடி உட்கார்ந்து பேசியதில், இந்தத் திட்டம் மிகவும் வலுவானது, அவசியமானது, நிச்சயம் செய்ய வேண்டும் என்பதை நானும் ஏற்றுக் கொண்டேன். ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அதை முறைப்படி நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே இன்னும் ஆயவுகள் முடியவில்லை. அதற்கு, இரண்டு மூன்று கோணங்களிலே ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. ஆய்வுகள் முடிந்து, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



தீர்மானித்து, முறைப்படி Board-லே வைத்து தீர்மானித்து அதற்குப் பிறகுதான் அறிவிக்கப்படும் என்ற வார்த்தையையே என்னால் கூறமுடியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் பேசும்போது விளக்கங்களை அமைச்சர்கள் கொடுக்கலாம். அமைச்சர்கள் கொடுக்கின்ற விளக்கங்களுக்கு, உறுப்பினர் விளக்கம் சொல்லப் போகிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தில் ஒரு சந்தேகம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, ஒகேனக்கல் திட்டத்தைக் கொண்டு வருவதற்கான அறிவிப்பை இன்னும் தரவில்லை; அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த மாமன்றத்தில், கடந்த பட்ஜெட்டிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுடைய வேலூர் குடிநீர்த் திட்டத்திற்கு, புதிய குடிநீர்த் திட்டத்திற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விளக்கம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுடைய பிரச்சினைக்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். நீங்கள் தனியாகக் கேளுங்கள் இப்போது நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையைத் தொடங்கவில்லை. இது ஒகேனக்கல் திட்டத்துடன் சேர்க்கப்படும்—They say that it will be clubbed with the Hoganekkal scheme....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றை நான் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள். நீங்கள் மிகவும் வேகமாகப் பேசாதீர்கள். எந்த உறுப்பினர் பேசும்போதும், அவருடைய தொகுதி பற்றிய பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்வதற்கு எழுந்திருக்கிறார்கள். நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு எதற்கெடுத்தாலும், வேலூர், சத்துவாச்சாரி என்று பேசிக் கொண்டிருந்தால், நான் எப்படி அனுமதிக்க முடியும்? தமிழ்நாடே அதுதானா? நீங்கள் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசுங்கள்.

[1999 மார்ச் 27

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான்கூட அதைத்தான் சொன்னேன். திட்டத்தை நிறைவுபடுத்தி, அறிவிக்கை தந்துவிட்டார்கள் என்று நான் கூறவில்லை. ஆனால், திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை, அவசியத்தை எல்லோரும் உணர்ந்துதான் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்பட என்றுதான் நான் சொல்லியிருக்கிறேனே தவிர, அவர்கள் அறிவித்து விட்டார்கள் என்று நான் கூறவில்லை. தயவுசெய்து நாங்கள் கேட்டுக் கொள்வது, இது மூன்று நகரங்களுக்கு மாத்திரமல்ல, வட ஆற்காடு மாவட்டத்தினுடைய தலைநகரம் மற்றும் இரண்டு முக்கியமான நகரங்களுக்கும், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சிற்றூர், பேரூர்களுக்கும் முக்கியமான ஒரு திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், என்னைப் போன்றவர்கள் எங்கள் பகுதியிலேயிருந்து வந்திருக்கிறவர்கள், உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, மிகுந்த எதிர்பார்ப்போடு இந்தத் திட்டம் குறித்து, ஒரு முறையான, நிறைவான அறிவிப்பு இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அந்த எதிர்பார்ப்பிலே ஏமாற்றத்தைத் தந்துவிடாதீர்கள் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையே தவிர, வேறு அல்ல.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் — டாக்டர் காஞ்சனா கமலநாதன் — தலைமை)*

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு குறித்து ஒருசிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்; அது தேவை என்று நான் கருதுகிறேன். அண்மையில் திருச்சியில் நடந்த மாநாட்டில், மாண்புமிகு பிரதமர் வாஜ்பேயி அவர்கள் பேசுவதற்கு முன்பு சிலர் பேசியதாகவும், அவர்கள் ஒரு கருத்தை அழுத்தமாகவும், திருத்தமாகவும், அதாவது, தமிழகத்தில் வெளிநாட்டு இரகசியத் துறை ஒன்று வேரூன்றி, இங்கு தீவிரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களை ஊக்குவிப்பதாகவும், அவர்களைத் தமிழக அரசு கட்டுப்படுத்தத் தவறி விட்டது என்றும் அங்கு பேசப்பட்ட பேச்சுக்களை, அதனுடைய கருத்தைத் தானும் ஏற்றுக் கொள்வதாக பின்னர் பேசிய வாஜ்பேயி அவர்கள் அந்த மாநாட்டில் தெரிவித்ததாகவும் நான் பத்திரிகையிலே படித்தேன். எங்களுக்கெல்லாம் ஆச்சரியம் என்னவென்றால், இந்த நாட்டினுடைய சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, உள்நாட்டிலே ஏற்படுகிற குழப்பங்கள் குறித்து நேரடியாக மாநில அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள்



1999 மார்ச் 27] [திரு. ம. அப்துல் லத்தீப்]

கடமையைச் செய்வதிலே தொய்வு ஏற்பட்டிருக்கிறது, குறைவு ஏற்பட்டிருக்கிறது, அல்லது அதிலே தவறிவிட்டார்கள் என்று சொன்னால் எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. வெளிநாட்டிலே இருக்கக்கூடிய ஒரு சக்தியை தமிழகத்திலே கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டது என்ற ஒரு குற்றச்சாட்டை அங்கே பேசியவர்கள் பேசியிருக்கலாம். அது இயல்பு.

முற்பகல் 9-45

ஆனால் ஒரு நாட்டினுடைய பிரதமர் இங்கு வெளிநாட்டு சக்திகள் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதை மாநில அரசு கட்டுப்படுத்தத் தவறி விட்டது என்று கூறியிருப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. ஏனென்றால் அவரிடத்திலே, எல்லா புள்ளிவிவரங்களும்—வெளிநாட்டு சக்திகளைப் பொறுத்தவரையிலே மத்திய அரசாங்கத்திடம்தான் இருக்க வேண்டும். வெளிநாட்டிலே இருக்கக்கூடிய இரகசியத் துறையைச் சார்ந்தவர்களோ அல்லது மற்றவர்களோ இந்த நாட்டிற்குள் புகுகிறார்கள் அதுவும் தமிழகம் வரையிலே வருகிறார்கள் என்று சொன்னால் அதற்கு யார் பொறுப்பு என்பதைப் பிரதமர் அவர்கள்தான் விளக்கிச் சொல்ல வேண்டும். மாநில அரசு அதற்குப் பொறுப்பா? மத்திய அரசு பொறுப்பா என்பதை ஒரு சாதாரண நிலையிலே இருக்கக்கூடியவன்கூட தெளிவாகச் சொல்லிவிடுவான். ஆனால் யாரையோ திருப்திப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசியிருப்பது முற்றிலும் சரியானதல்ல என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். I.S.I. இந்த நாட்டிலே புகுந்திருக்கிறது என்றால் எந்த வழியாகப் புகுந்தது என்பதைப் பிரதமர் விளக்கிட வேண்டும். கடல் வழியாக வந்ததா? அல்லது பல்வேறு மாநிலங்கள்—இந்த நாட்டினுடைய எல்லைக்கும், தமிழகத்தினுடைய எல்லைக்கும் இடையிலே பல்வேறு மாநிலங்கள்—இருக்கின்றனவே அந்த மாநிலங்களை எல்லாம் கடந்து வந்ததா? அப்படி கடந்து வந்திருந்தால் அது மத்திய அரசுக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால் ஏன் தடுத்து நிறுத்தவில்லை? அப்படியென்றால் அந்தக் கடமையிலிருந்து தவறியது மத்திய அரசாங்கமா, அல்லது மாநில அரசாங்கமா என்பதையெல்லாம் நம்முடைய பிரதமர் அவர்கள் விளக்கிடக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அப்படி அவர்கள் தமிழகத்திற்குள் நுழைந்து, இங்கே இருக்கக்கூடிய தீவிரவாதிகள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறவர்களோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் யார், யார் அந்தக்

குற்றவாளிகள்? எந்தெந்த இயக்கங்கள் பிரதமருடைய கருத்தின் அடிப்படையிலே வெளிநாட்டு சக்திகளோடு தொடர்பு வைத்திருக்கின்றன என்பதை அவர்கள் பொறுப்புணர்வோடு இந்த நாட்டுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் இந்த விவரங்கள் எல்லாம் மாநில அரசுக்குத் தெரியாவிட்டாலும், மத்திய அரசுக்கு தெரிந்திருக்க வேண்டும். அது தெரியவில்லையென்று சொன்னால் கடமை தவறியவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு அவர்கள்தான் ஆளாவார்கள் என்பதை நான் தெரிவிப்பதோடு அதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்கள் இந்த நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு சக்திகள் எப்படி வடித்தெடுக்கப்படுகின்றன I.S.I என்ற நிறுவனத்தால் என்பதை அடிக்கடிப் பேசி இதுகுறித்த ஒரு வெள்ளை அறிக்கையை மத்திய அரசு வெளியிடும் என்ற கருத்தை, வாக்குறுதியை ஓராண்டு காலத்திற்கு முன்பே தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையிலே அந்த வெள்ளை அறிக்கை வரவில்லை. ஏன் என்று தெரியவில்லை. எனவே திரு. அத்வானி அவர்களும் பிரதமராக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு திரு. வாஜ்பேயி அவர்களும் பேசும்போது தங்களுடைய கடமையறிந்துப் பேச வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஏதோ மாநில அரசுக்கு விரோதமாக கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்று நாம் விட்டுவிட முடியாது.

இன்னொரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது அவருடைய இஷ்டம். அடுத்து தமிழகத்திலே நாங்கள்தான் ஆட்சியை அமைக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார். அது அவர்களுடைய உரிமை. அதைப் பற்றி நாங்கள் ஆட்சேபிக்க விரும்பவில்லை. ஆனால் இத்தகைய ஒரு கருத்தை, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு கருத்தை, இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கே கேள்விக்குறியை எழுப்பக்கூடிய ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்திருப்பது மிகவும் ஆட்சேபனைக்குரியது. என்னைப் பொறுத்தவரையிலே நான் கேட்டுக் கொள்வது, தயவு செய்து எங்கே யார் அவர்களோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்பதை இனம் காட்டிப் பிரதமர் அவர்கள் பேச வேண்டிய கடமை அவருக்கு உண்டு என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



ஜவ்வாது மலை நாடறிந்த ஒரு மலை, சந்தனம் மணம் வீசும் மலை, அந்த மலையிலே உள்ள காவலூர் என்ற அந்தப் பகுதியை சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

பல ஆண்டுகளாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். காவலூரிலேதான் ஆசியாவிலேயே மிகப் பெரிய observatory என்று சொல்லக்கூடிய Planetary observatory இருக்கிறது. அங்கு சுற்றுலாப் பயணிகள் பலர் வருகிறார்கள். திருவண்ணாமலை பக்கத்திலே இருந்தும், போளூரைத் தாண்டியும் வருகிறார்கள். வாணியம்பாடி, ஆலங்காயம் பகுதியிலே இருந்தும் வருகிறார்கள். அமர்திக்காடு என்ற அந்தப் பகுதியிலே இருந்தும் வருகிறார்கள். சிங்காரப்பேட்டை பகுதியிலே இருந்தும் வருகிறார்கள். நான்கு பகுதிகளிலே இருந்தும் அந்த observatory-யைப் பார்ப்பதற்காக மக்கள் மற்றும் வெளிநாட்டவர் மற்ற மாநிலங்களிலே இருந்தும் வருகிறார்கள். எனவே, தயவுசெய்து அதை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, அந்தப் பகுதியிலே என்னவோ தெரியவில்லை. அடிக்கடி யானைகள் அங்கே வந்துவிடுகின்றன. ஜவ்வாது மலை காட்டெருமை இருக்கின்றதே, அது இந்தியாவிலேயே சிறப்புப் பெற்ற காட்டெருமை. அதுபோன்ற அழகான காட்டெருமை வேறு எங்குமே கிடையாது. இப்பேர்ப்பட்ட மிருகங்கள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே ஒரு சரணாலயம் அமைத்துத் தந்தால், அந்த மிருகங்களைக் காப்பாற்றுவதற்குப் பயனுடையதாக இருக்கும்; அது உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றுப் பகுதியைப்பற்றி இங்கே பேசினார்கள். பாலாற்றிலே ஏற்பட்டிருக்கிற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குப் பூர்வாங்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எங்கள் ஊர் பக்கத்திலே கொஞ்சம் அகற்றினார்கள். ஆனால், அந்தப் பாலாற்று நெடுகிலும் இன்றைக்கும் ஆக்கிரமிப்பு நிறைந்திருக்கிறது. அது எந்த அளவுக்கு என்று சொன்னால், ஆறே மறைந்து விட்டது. ஆறு எங்கே என்று பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கக்கூடிய நிலை சில இடங்களில் இருக்கிறது. அதிலே வீடுகளைக் கட்டுகிறார்கள்; மிச்சப் பகுதி ஏதாவது இருந்தால், அங்கே விவசாயம் செய்கிறார்கள். இதனால் பல பாதகங்கள் ஏற்படுகின்றன.

ஓர் உண்மையைச் சொல்கிறேன். பாலாறு காஞ்சிபுரத்திலேயும் ஓடுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி உட்கார்ந்து, மாலை நேரத்திலே உரையாடல் செய்து கொண்டிருந்த வேகவதி ஆறு; அங்கு நான் 2 மாதங்களுக்கு முன்பு போய் இருந்தேன். வேகவதி ஆறு எங்கே என்று கேட்டேன். அண்ணா உட்கார்ந்த இடமான அந்த ஆறு எங்கே என்று கேட்டேன். ஏதோ வேகவதி ஆறு என்கிறார்கள். ஆனால் அது எல்லாம் புதர் நிறைந்து, காணக்கூடக் கிடைக்காத நதியாக, வேகமெல்லாம் குறைந்து, அடங்கிப்போய், சர்வ நாடியும் ஒடுங்கிப் போய் இருக்கக்கூடிய நிலையிலே அந்த வேகவதி ஆறு இருக்கிறது. பெருகிவருகிற அந்த நகரத்திலே, வேகவதி ஆறே மறைந்துவிட்டு, அதனால் பல சீர்கேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதன் பக்கத்திலேதான் பாலாறு. எனவே, பாலாற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை தயவுசெய்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலாற்றிலே தண்ணீர் வந்த காரணத்தினாலே, வெள்ளம் வந்த காரணத்தினாலே, எங்கள் ஊரிலுள்ள பாலம் — மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பார்த்தார்கள்; — மேற்குப் பகுதியையும், கிழக்குப் பகுதியையும் இணைக்கக்கூடிய ஒரே இருப்புப் பாலம்; அது 1914-லே கட்டப்பட்டது. இப்போது வந்த வெள்ளத்திலே அது அடித்துச் செல்லப்பட்டு விட்டது, இரண்டு பகுதிகளும் பிரிந்து விட்டன. அந்தப் பகுதிகளிலேதான் எல்லாத் தோல் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. கிழக்குப் பகுதியிலேதான் இரயில் நிலையமும், பஸ் நிலையமும் இருக்கின்றன. நாங்கள் முடமாக்கப்பட்டிருக்கிறோம். இத்தகைய சம்பவங்கள் நடந்தால் போர்க்கால அடிப்படையிலே அதைச் செய்ய வேண்டும். அதற்கான திட்டம் நகராட்சி மன்றத்தால் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தபோது, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டாவது அதற்கான ஒரு வழி பிறக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்; தயவுசெய்து செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உருது பள்ளிகளைப் பொறுத்தவரையில், உருது பள்ளிகளில் பாடப் புத்தகம் கிடைப்பதில்லை. பள்ளிகள் இருந்தாலும் அங்கே ஆசிரியர்கள் இல்லை. இல்லை என்றால் வருவதில்லை என்ற பொருளில் நான் சொல்லவில்லை. உரிய உருது ஆசிரியர்கள், உருது பள்ளியிலே இல்லை. அது மட்டுமல்ல; அந்த உருதுவைப் பற்றிக் கேட்பாரற்ற நிலைமை இன்றைக்கு வந்துவிட்டது. பல்லாண்டுகளுக்கு



முன்பே, கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, Urdu Academy ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருந்து, அந்த Urdu Academy ஏற்படுத்தப்படும் என்று அரசு கொள்கை முடிவு எடுத்து, இதுவரையிலும் ஏனோ அந்த Urdu Academy பிறக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. பத்து மாதம் ஆகிவிட்டது; 10 வருடங்களும் ஆகிவிட்டன. குழந்தை பிறக்கவில்லை. எனவே, தயவுசெய்து, நாங்கள் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இந்த Urdu Academy-ஐப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

முற்பகல் 9-55

எனக்குச் சில கடிதங்கள் ஒவ்வொரு நாளும் வருகின்றன. கலைஞர் அவர்கள் மன்னிக்க வேண்டும். எனக்கு இருக்கிற சிக்கல் உங்களுக்கும் இருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றனவோ அந்தச் சிக்கல்கள் எனக்கும் இருக்கின்றன, எங்களுடைய சமுதாயத்தைப் பொறுத்தவரையிலே. நான் இங்கே பேசுவதால் நீங்கள் வருத்தப்படுகிறீர்கள், அடிக்கடி இந்த முகாரி ராகத்தை இவன் பாடுகிறானே என்று. ஆனால், வெளியிலே என்ன பேசுகிறார்கள் என்றால், சமுதாயம் இப்படி பாதிக்கப்படுகிறதே, சமுதாயப் பிரச்சினையை பேசுகிறேன் என்று சபையிலே இருக்கக்கூடிய இவன் வாய்மூடி மௌனியாக இருக்கிறானே என்று பேசுகிறார்கள். எங்களுடைய சமுதாயத்திற்காக, பேசுவதற்காக இங்கே 11 பேர் இருக்கிறோம். ஆனால் 11 பேரிலே ஒரு சிலர்தான் பேச வேண்டும், சில பேர் வருவதேயில்லை, சில பேர் பேசுவதேயில்லை, அப்படிப் பேச விரும்பினாலும் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை.

பேசுகின்ற ஒருவனுக்கு; அடியும் எனக்குத்தான், தடியும் எனக்குத்தான், சொல்லும் எனக்குத்தான் என்ற முறையிலே இப்போது நான் தவித்துக் கொண்டிருக்கின்றேன். வெளியே போனால் இந்தப் பிரச்சினையை கேட்கிறார்கள். அதற்கு என்ன சொல்வது. எனக்குத் தெரியும். உங்களோடு உங்களுடைய கைகள் ஒத்துழைக்க வேண்டும், கால்கள் ஒத்துழைக்க வேண்டும். அந்த ஒத்துழைப்பு குறைவாக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். சமுதாயத்திற்கு திருப்தி ஏற்படுத்த வேண்டும். திருப்தி வெறும் திருப்தி மட்டுமல்ல. அவர்கள் அல்லல்படும்போது அந்த அல்லல்கள் நீக்கப்பட

வேண்டும். அவர்கள் துயருறும்போது, அவதிகள் நீக்கப்படவேண்டும். இதுதான் முக்கியமானதே தவிர, நான் பேசவேண்டுமென்பது முக்கியமானது அல்ல.

காயல்பட்டினத்திலே ஒரு பெண்கள் பள்ளியிலே மிக மூர்க்கத்தனமாக, பெண் ஆசிரியர்கள் உள்ளிட்டு சோதனையிடப்பட்டு இருக்கிறார்கள். எனக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அவற்றிலே இந்தக் கடிதமும் வந்திருக்கிறது. உங்களுடைய அனுமதியுடன் அதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரிடம் கொடுக்கிறேன்.

சில இடங்களில் முஸ்லீம்களுக்கு அத்தாட்சிப் பத்திரத்தை கொடுக்கிறார்கள். அத்தாட்சிப் பத்திரம் என்றால் சான்றிதழ். இதில் விசித்திரமான காரியங்கள் எல்லாம் இருக்கின்றன. உங்களுக்கும் தொல்லை கொடுக்கிறார்கள்; எங்களுக்கும் தொல்லை கொடுக்கிறார்கள். வாணியம்பாடியிலே ஒரு உயர்நிலைப் பள்ளி. அந்தப் பள்ளியிலே முஸ்லீம் மாணவன் ஒருவன் படிக்கிறான். அந்த முஸ்லீம் மாணவனுடைய தகப்பனார் பெயர் சாதுல்லா. தாயாரின் பெயர் ரசியா. Nationality என்ற இடத்திலே Indian என்று போட்டு இருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே அடைப்புக் குறிக்குள் Hindu என்றும் போட்டிருக்கிறார்கள். Indian என்றால் Hindu இது அங்குள்ளவர்களுடைய கணிப்பு. இப்பேர்பட்டவர்கள்தான் இந்தத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். Indian என்றால் Hindu தானா? முஸ்லீம்கள் இல்லையா? கிறிஸ்துவர்கள் இல்லையா? மற்றவர்கள் இல்லையா? இப்படிக் கொடுமைகள் நடந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இப்படி ஒரு சான்றிதழைக் கொடுக்கலாமா? இது நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய துறையைச் சார்ந்தது அல்ல. சான்றிதழ் கொடுத்தவர்கள் வேறு துறையைச் சேர்ந்தவர்கள், பதிவுத் துறையைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள். Indian என்றால் அடுத்து அடைப்புக் குறிக்குள் போட வேண்டிய அவசியமென்ன வந்தது? அவர்களுக்கு நன்றாகத் தெரியும் பெற்றோர்களின் பெயர் சாதுல்லா என்றும் ரசியா என்றும் இருக்கிறது. Indian என்று போட்டால் அதோடு விட்டுவிட வேண்டும். அடைப்புக் குறிக்குள் Hindu என்று போட்டிருக்கிறார்கள். அதுவும் எங்கள் ஊரிலேயே போட்டிருக்கிறார்கள். ஒரு வேளை இந்தப் பயல் இருக்கிறான், அவனுக்குச் சரியான வேலை கொடுக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு வேளை தெரியாமலும் கொடுத்திருக்கலாம். ஏனென்றால் இந்தமாதிரியான விளக்கம் இருக்கிறதே, இது யாருடைய விளக்கம். இந்தியர் என்று சொன்னால், ஹிந்துதான் என்பது யாருடைய விளக்கம். அப்படிப்பட்டவர்கள்தான் எங்களுடைய ஊருக்கு வருகிறார்கள்; தொந்தரவு கொடுக்கிறார்கள்.

பெண்களுடைய பெயரையும் பதிவு செய்ய மறுக்கிறார்கள். ஜனக் கணக்கெடுப்பு நடக்கும்போது பல பெண்கள் கோஷாவில் இருப்பார்கள்; அவர்கள் ஏதாவது சொல்ல மறுத்தால் யாரும் இல்லை என்று பதிவு செய்கிறார்கள்.

எங்களுடைய ஜனத்தொகையினைப் பற்றி தவறான கணக்குகள் வந்து கொண்டிருக்கின்றன. எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போதும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். போலீஸ் மானியத்திலே ஜனத்தொகை எவ்வளவு என்று சொன்னால் 5.8 என்று சொன்னார்கள். 1996-ல் உங்களுடைய மானியத்திலே நீங்கள் கொடுத்திருக்கிற விவரப்படி 5.6 அப்போது. அதாவது, 0.2 குறைந்துவிட்டது. அதனால் கலைஞர் அவர்களிடத்திலே அடிக்கடி கேட்கிறேன். எது உண்மை? 5.6 என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் நான்கு பெண்டாட்டிகளைக் கட்டி, 40 பிள்ளைகளைப் பெற்றுக்கொள்கிற முஸ்லீம்களுடைய மக்கள் தொகை உயர்ந்துதானே இருக்க வேண்டும். (சிரிப்பு) குடும்பக் கட்டுப்பாடு... (குறுக்கீடு).

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, இஸ்லாமியப் பெருமக்கள் ரொம்ப பண்பு உள்ளவர்கள்; ரொம்ப உயர்ந்த குணம் உள்ளவர்கள். 4 பெண்களை எல்லோரும் திருமணம் செய்துகொள்வதில்லை. ஒரு மனைவியுடன் சிறப்பாக வாழ்கிறார்கள். அது அவர்களுக்குப் பெருமை அளிக்கிறது. அந்தச் சமுதாயத்தைப்பற்றி அவரே ஏன் இப்படிச் சொல்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நானே சொல்லவில்லை. இப்படிச் சொல்லப்படுகிறது என்று சொல்கிறேன். மாண்புமிகு அருணா அவர்களுக்கு நான் கொடுக்கிற விளக்கம் இப்படி சொல்லப்படுகிறது என்றுதான் சொல்கிறேன். சொல்பவர்கள் வேறு. அது அருணாவிற்கு

நன்றாகத் தெரியும். அந்த உண்மை அவருக்கு அருணோதயம் ஆக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) இதை நான் சொல்லவில்லை. இன்றைக்கு ஒரு பெண்டாட்டிக்கே அவதிப்படுகிறார்கள். 4 பெண்டாட்டிகளைக் கட்டிக் கொண்டு 40 பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் — அப்படிதான் இருக்கட்டும். நாங்கள் 5.6 தான். 5.6 என்று திரும்பத் திரும்பச் சொல்கிறோம். எங்களுக்கு நியாயங்கள் கிடைக்கவில்லை. உண்மையிலேயே, யதார்த்த நிலையிலே எங்களுக்கு நியாயங்கள் கிடைக்கவில்லை. ஆகையினாலே, 5 சதவிகிதமாவது கொடுங்கள் என்று திருப்பித் திருப்பிக் கேட்கிறோம். 5 சதவிகிதமாவது கொடுங்கள். எங்கள் கணக்குப்படி நாங்கள் 11.8 சதவிகிதமாக இருக்கிறோம். நானாகவே சொல்லவில்லை. Statistical Department-லிருந்து வாங்கித்தான் சொல்கிறேன். ஆனால், இங்கு இப்படிச் சொல்லப்படுகிறது. தயவுசெய்து கலைஞர் அவர்களே, நாங்கள் மற்றவர்களைக் கேட்போமா? என்னைப் பொறுத்தவரையிலே யாராக இருந்தாலும் 20 சதவிகிதம் கொடுத்தாலும் நான் கேட்கக்கூடத் தயாராக இல்லை. நீங்கள் 5 சதவிகிதம் கொடுப்பதாக இருந்தாலும், நல்ல கையிலே இருந்து வாங்க வேண்டும் குஷ்டரோகிகள் கையிலேயிருந்து வாங்கத் தயாராக இல்லை. (சிரிப்பு) நீங்கள்தான் கொடுக்க வேண்டும். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை நீங்கள்தான் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனவே அதைத் தயவுசெய்து நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னிடத்திலே ஒரு துறையை நீங்கள் ஒப்படைத்திருக்கிறீர்கள், வஃக்ப் துறை. அது குறித்து ஒருசில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், அதற்கு மானியம் வருவதில்லை. வஃக்ப் துறை எப்போதும் கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று இலங்கை வேந்தனாகவே இருக்கிறது. அதற்கு வருகிற வருமானம் 48 சதவிகிதம். செய்கிற செலவு 100 சதவிகிதம். நீங்கள் வேறு சும்மா இருப்பதில்லை. அகவிலைப்படி, அகவிலைப்படி என்று ஏற்றிக் கொண்டே போகிறீர்கள். நாங்கள் எங்கே போவது, கொடுப்பதற்கு? இருப்பதே இவ்வளவுதான் அகவிலைப்படி ஏறும்போதெல்லாம் எங்களுடைய உற்சாகமே இறங்கிக் கொண்டே போகிறது, inverse proportion-லே. நாங்கள் கடன்காரர்களாக இருக்கிறோம். போன வருடம் 45 இலட்சம் நீங்கள் மானியமாக வழங்கினீர்கள். வழங்கப்பட்ட மானியம் ஏறுமே தவிர இறங்குமா என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது 30 இலட்சமாகக்



குறைந்திருக்கிறீர்கள். ஏன் குறைத்தீர்கள்? வஃக்ப் போர்ட்டுக்கு ஏதாவது வருமானம் அதிகமாக வந்துவிட்டதா? அப்படி ஏதாவது இருந்தால் என்னைக் கேட்டால், நான் உண்மையைப் பேசிவிட்டுப் போகிறேன். ஆனால், இந்த வருடம் என்ன கொடுத்தீர்கள்? போன வருடம் 45 இலட்சம் கொடுத்தீர்கள். இந்த வருடம் 30 இலட்சம் கொடுத்திருக்கிறீர்கள். ஏன் அப்படி? என்ன காரணம் என்பதை நான் அறிய வேண்டாமா? என்னிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள். நான் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டாமா? அந்தக் கட்டடத்தை வந்து முதலமைச்சர் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பக்கத்திலே இருக்கிற சுவர் பிடியைப் பிடித்தாலே பயம், எங்கே நாமும் சேர்ந்து போய்விடுவோமோ என்று, ஒரு வாடகைக் கட்டடத்தில் ஒரு Statutory Body இருக்கிறது. எங்களிடத்திலே பணம் இல்லை. முதலமைச்சர் அவர்களே, என்னிடத்திலே நீங்கள் பொறுப்பு கொடுத்திருக்கிறீர்கள் என்ற காரணத்தினாலே அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்ற வேண்டும். எங்களுக்குச் சிறப்பு மானியமாக ஒரு மானியத்தை அளியுங்கள், அந்தக் கட்டடம் எங்களிடத்திலே இருக்கிறது. அந்த இடத்திலே நாங்கள் கட்டடம் கட்டிக்கொள்கிறோம் என்று சொன்னோம். என்னவோ தெரியவில்லை, எல்லாவற்றிற்கும் பணம் கிடைக்கிறது. எங்களுக்குக் குணம்தான் கிடைக்கிறதே தவிர பணம் கிடைக்கவில்லை. குணத்திற்காக நன்றி சொல்கிறேன். பணம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, குணம்தான் எங்களுக்கு வேண்டும். ஆகவே, உங்களுடைய கனிவுப் பார்வையை அதன் பக்கம் நான் ஈர்க்கிறேன்.

இன்னொன்று, கடைசியாக நம்முடைய மாண்புமிகு தமிழ்க் குடிமகனார் அவர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். கோயில், மசூதி, தர்கா இதனுடைய நிலங்கள் எல்லாம், இதனுடைய சொத்துக்கள் எல்லாம் ஏறக்குறைய 85 சதவிகிதம் கோயில்களிடத்திலே இருக்கிறது. மசூதிகளிடத்திலே இல்லை. அதற்கு ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அதனாலே, இந்த நிலங்களை எல்லாம் முடக்க வேண்டும் என்று நான் சொன்னால் சட்டத்திலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் Collector, வருவாய்த் துறையினுடைய active support வேண்டும். அந்தச் சட்டத்திலே என்னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், Collector-ம், R.D.O.வும் காவல் துறையும் உள்ளிட்ட — அதிகாரிகள் — they are Officers of the

concerned bodies- நாங்கள் ஒரு order போட்டு இந்த நிலத்தை எல்லாம் மீட்டுத் தர வேண்டும் என்று சொன்னால், இந்த அறநிலையத் துறை Officer அல்லது Board-னுடைய Officer ஆகியோர் தயவுசெய்து எங்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

முற்பகல் 10-05

இவற்றையெல்லாம் மீட்பதற்கு என்ன வழியோ, அதைக் காணவேண்டும். அதற்குப் புதிய சட்டம் ஒன்று தேவையாக இருந்தாலும் — இப்போது இருக்கின்ற வக்ஃப் சட்டமே நிறைவாக இருக்கிறது. ஆனால் அதற்கு வருவாய்த் துறை, காவல் துறையினுடைய ஒத்துழைப்பு வேண்டும். அந்த ஒத்துழைப்பை இந்தத் துறை பெறும் வகையில் நீங்கள் நிர்வாக அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். நெறிமுறைகளை புதிதாக உருவாக்க வேண்டும் இல்லாவிட்டால் கோயில்களையும், குளங்களையும், மசூதிகளையும், தர்காக்களையும் செம்மையாக நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அண்மைக் காலத்தில இல்லை, இல்லை. அவை எல்லாம அழிவை நோக்கித்தான் செல்லுமே தவிர, மீண்டும் தலை நிமிர்ந்து தனக்குக் குறிக்கப்பட்ட தர்ம காரியங்களைச் செய்ய முடியாது என்பதை எடுத்துச் சொல்லி, இவை எல்லாம — அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பதற்காக சொல்லப்படுகின்ற கருத்து. இந்த இடத்தில் நாம் அழுத்தினால்தான் நீர் சுரக்கும் என்ற நம்பிக்கையில், அதனால்தான் நாங்கள் அழுத்துகிறோம்., நீர் சுரக்குமென்ற நம்பிக்கையில். மற்ற இடங்களிலே எல்லாம் நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம். பாறைகளிலே மோதினால் எங்களுடைய மண்டைகள்தான் உடையும். ஆனால் உங்களிடத்தில் நாங்கள் எடுத்துச் சொன்னால் பலன் கிடைக்குமென்ற நம்பிக்கையில் நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். கலைஞர் அவர்களே, உங்கள் காலத்தில் உங்களுடைய கையால் இந்தச் சலுகைகள் எல்லாம் கிடைத்தால் எங்களுக்கு மன நிறைவு ஏற்படும். வேறு காலத்திலே நாங்கள் கேட்கவும் மாட்டோம். வந்தாலும் பயனும் படாது என்ற வகையிலே, 2,3 கோரிக்கைகள் வைக்கின்றோம். அந்தக் கோரிக்கைகளை தயவுசெய்து முறைப்படுத்தி நடத்திக் கொடுங்கள், செய்து கொடுங்கள்.

சிக்கல்களை நான் அறிவேன், சூழ்நிலைகளை நான் அறிவேன். இருந்தாலும் உங்களுடைய உள்ளம் — நீங்கள் ஒரு காலத்தில் சொன்னீர்கள். சட்டத்தில் இடம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னுடைய இதயத்தில் இடம் இருக்கிறது என்று. அந்த இதயம். அந்த இதயத்தைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



(சிரிப்பு) அதைச் செய்து கொடுங்கள். இது விஷயமாக, ஏற்கெனவே நடந்தவற்றிற்காக நாங்கள் நன்றி செலுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே பயன் ஏற்பட வேண்டும். இப்போது சொன்ன கருத்துக்கள் எல்லாம் என் தொகுதியைப் பற்றியது. கொஞ்சம் கவனித்துச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டு, நேரம் அதிகமாகி விட்டதோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஆகையினால் நன்றி சொல்லிக் கொள்கிறேன். மாற்றுத் தலைவரான நீங்கள் தலைமை பீடத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள். உங்களுக்குச் சிக்கலை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஆகையினால் உங்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்):** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12-ஆவது நிதிநிலை அறிக்கையை 1999-2000 ஆண்டிற்கு இம்மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கை குறைந்த வரி விதிப்பும், அதிகமான வருவாயும், சந்தைப் பொருளாதாரத்தைக் கணக்கிலே கொண்டும் தயாரிக்கப்பட்டிருக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கை. மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் மக்கள் வாங்கி சாப்பிடக்கூடிய பொருட்கள் அனைத்திற்கும் புதிய வரிச் சுமைகளை ஏற்படுத்தியிருந்த போதிலும்கூட, நம்முடைய மாநிலத்தில் ஏழையெளிய மக்களுக்கு வரிச்சுமை இல்லாத அளவிற்கு நம்முடைய மாநில முதலமைச்சரவர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

அதிலே பிரதானமாக நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு இருக்கக்கூடிய, கல்வி மற்றும் கணினி பாடத் திட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருகின்ற இளைய சமுதாயத்தினருக்கு ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இந்தக் கல்வியிலே கணினி பயிற்சிப் பாடத் திட்டத்தையும், தமிழ் வளர்ச்சியையும், தொழில் நுட்பங்களையும் தமிழகத்தில் மட்டுமின்றி உலகத்தில் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் பயன்படுகின்ற விதத்தில் ஒரு முற்போக்கான சிந்தனையை, இன்றைய தினத்திலே கொண்டு வந்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-10

அதேநேரத்தில் நிதிநிலையைப் பொறுத்தமட்டில், நிகரப் பற்றாக்குறையாக ரூ.790.13 கோடி ரூபாய் இருந்தாலும், 261 கோடி

ரூபாய் புதிய வருவாயை ஈட்டித் தந்து இறுதிப பற்றாக்குறையாக 529.13 கோடி ரூபாய் உள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது

அநேகமாக, இதற்கு முன்பாக இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு திட்டமிடப்பட்ட சில திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் நடைமுறையிலே இருக்கின்றன. ஆக, திட்டச் செலவுகள் மிகாமல் இருப்பதற்குச் சிக்கன நடவடிக்கையை உருவாக்கி இந்த நிதி ஆண்டிலேயே ஒதுக்கப்பட்டிருக்கிற திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்கள் என்று நான் கருதுகிறேன். அதேபோன்று என்னுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் கருதுகிறோம என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்கான கல்வித் தகுதியை, 8-வது வகுப்பிலேயிருந்து 10-வது வகுப்பு என உயர்த்தியிருப்பது கிராமப்புற ஏழையெளிய மக்களைப் பெரிதும் பாதிக்கும். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பெண்களுக்குத் திருமண உதவி கிடைப்பது என்பது அரிதாகிவிடும். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். திருமணத்திற்கு உதவித் தொகை என்பது, அதிலே வருமானச் சான்றிதழை அல்லது வருமானத்தைக் கணக்கிட்டு இதைக் கொண்டுவர முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், ஏற்கெனவே கொடுத்திருக்கிற ஐயாயிரத்தை வழங்கலாமா என்பதைக்கூட பரிசீலிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் ஆதிதிராவிட மக்கள், ஆயிரக்கணக்கான மனு கொடுத்தவர்கள் ஏமாற்றம் அடையக்கூடிய அளவுக்கு கல்வித் தகுதியை 10-வது வகுப்பு என்று உயர்த்தியிருப்பது பாதிப்புக்கு உள்ளாக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.... (குறுக்கீடு).

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரேயொரு clarification. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 10-வது வகுப்பு என்று உயர்த்தியதால் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார். 10-வது வகுப்பு என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால் 8-வது வகுப்பிலே கல்வியை நிறுத்தக்கூடியவர்கள் இந்த உதவித் தொகையைப் பெறவேண்டும் என்ற



நோக்கத்தோடு 10-வது வகுப்பு வரையிலாவது நாம் படிக்க வேண்டும் என்று அவர்கள் 10-வது வகுப்பு வரைப் படிப்பதற்கு இது உற்சாகமாக அமையாதா? அதற்கு என்ன கருத்துச் சொல்கின்றார் என்பதை Clarification ஆகத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே ஏற்கெனவே இது சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இருக்கக்கூடிய கிராமப்புறத்தினுடைய மாணவ மாணவியர் படிப்பு என்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது திருமண உதவித் திட்டம் இல்லையென்று சொன்னாலும்கூட, இதுபோன்று 8-வது வகுப்பு படித்திருக்கிற ஆயிரக்கணக்கான ஏழையெளிய குடும்பங்களைச் சார்ந்திருக்கிற பெண்கள் 8-வது வகுப்பு வரையிலே, இதுவரையிலே படித்து கிராமப்புறங்களிலே அதோடு வறுமையின் காரணமாக மேல் படிப்பு படிக்க முடியாத அளவுக்கு, தங்களுடைய உழைப்பைக் கொண்டே வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய குடும்பங்களாக இருக்கக்கூடிய காரணத்தினாலேதான் இதை நான் சொல்ல விரும்புகின்றேனே தவிர இதன்மூலமாக, இந்தத் திருமண உதவித் திட்டத்தின் மூலமாக அவர்கள் தங்களுடைய படிப்பை விட்டுவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. அதற்கான பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. வேலைவாய்ப்பை உருவாக்குவது, மேலே படிக்க வைப்பதற்கான குடும்பத்தினுடைய சூழ்நிலை இதுபோன்ற பல விவரங்கள் அதிலே அடங்கியிருக்கின்றன. ஆகையினாலே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களது முடிவிற்கே அதை விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அதிக அதிகாரங்கள் வழங்குவது பரிசீலனையில் உள்ளது. அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற, உள்ளாட்சி அமைப்புகளிலே தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் அதிக அதிகாரம் வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையினால், அதை விரைவிலே அவர்கள் அமல்படுத்தவேண்டும்.

தமிழ்நாட்டிலே உள்ளாட்சி அமைப்புகளிலே குடிநீர்த் திட்டம் என்பது சிறந்த முறையிலே நிறைவேற்றப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. ஓரளவிற்கு தட்டுப்பாடில்லாத அளவிற்கு அந்தந்தக் குடிநீர்த்

திட்டப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலேகூட, கூட்டுக் குடிநீர் திட்டம்; அதைக் காலம் தாழ்த்தாமல் விரைந்து நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திட்டமிடுகிற அதிகாரம் தங்களுக்கு வேண்டுமென்று உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் கூறுகிறார்கள். (குறுக்கீடு) கல்வி இலாகாவைக் கொடுத்துவிட முடியாது. இருந்தாலும்கூட ஒரு திட்டத்திலே ஈடுபடுகிற அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது, அந்த அதிகாரம் அதிகாரிகளிடத்திலேயிருக்கிற காரணத்தால் திட்டமிடுவதிலே, பணிகளைச் செய்வதிலே தாமதம் ஏற்படுகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகையினாலேதான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

*முற்பகல் 10-15*

10 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்கள் குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை வழங்குகின்ற நல்ல திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இது நீண்டகாலமாக சிக்கல் நிறைந்த பிரச்சினையாக இருந்தது. இப்போது கல்வி நிலையங்களிலேயே அவற்றை வழங்குகிற மாபெரும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

அதேபோல், ஏழு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் கட்டுவது, அதிலும், நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியொதுக்கீடு இந்த ஆண்டு செய்திருப்பதன் மூலம் நீண்ட காலப் பிரச்சினை நிறைவேற்றப்பட்டிருக்கிறது; இது பெரிய மகிழ்ச்சிக்குரியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நேரடியாக வந்து தொடங்கி வைக்க வேண்டும் என்று எங்களது மாவட்ட மக்கள் விரும்புகிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தந்தை பெரியார் பெயரால் உள்ள சமத்துவபுரம்



போன்ற திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இவை மக்களுக்கு மிகவும் நன்மை அளிக்கக்கூடிய திட்டங்களாக இருக்கின்றன. இவற்றிலேகூட, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த நன்மையான திட்டத்தின்கீழ் முற்றிலும் பயன்பெறாத கிராமங்களை ஆண்டுதோறும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்று எடுப்பது சரியாக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1,500 பேர் மக்கள்தொகை இருக்கக்கூடிய பஞ்சாயத்துகளுக்கும், 1,000 பேர் மக்கள் தொகை கொண்டிருக்கிற கிராமப்புறத்திற்கும் நபார்டு வங்கி மூலமாகச் சாலைகளையும் பாலங்களையும் வழங்குகின்ற திட்டம் அற்புதமான ஒரு திட்டம். இதிலே என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், 1,500 பேர் மக்கள் வசித்தால்தான் சாலைப் பணியை எடுத்துக்கொள்ள முடியும் என்று நபார்டு வங்கியிலே கூறுவதாக அந்த R.R. Department-லே கூறுகிறார்கள். ஆனால், ஒரு பஞ்சாயத்து என்று எடுத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை எடுத்தோம் என்று சொன்னால் முழுமையாகப் பயனடைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். 1,500 மக்கள் தொகை ஒரே இடத்திலேகூட இருக்க முடியாது. அந்த மக்கள்தொகை அளவு இல்லாத காரணத்தால் பல மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையினாலே ஒவ்வொரு பஞ்சாயத்தாகக் கணக்கு எடுத்துக் கொண்டால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கொள்கைகளை இங்கே பேசுவதற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாடுகள் குறித்து பேசுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டாலும்கூட, கடந்த கூட்டங்களிலே சட்டம் ஒழுங்கைப் பற்றி பேசக்கூடியவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே கடந்த 3 தினங்களாக சரியாக நடந்து கொள்ளாததன் காரணமாக முழுமையாக நிதிநிலை அறிக்கையின்மீது அனைத்து உறுப்பினர்களும் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு திசை திருப்பப்பட்டுவிட்ட மோசமான நிகழ்ச்சி நம்முடைய சட்டமன்றத்திலே நடந்திருக்கிறது. இதையெல்லாம் நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

விவசாயிகளுடைய பிரச்சினைகளிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்திலே பல்வேறு தொழிற்சங்கங்களின் அமைப்புகளைக் கூட்டி, இங்கே இருக்கக் கூடிய வர்த்தக அமைப்புகளை அழைத்துப் பேசி, அந்த வர்த்தகர்கள் நிதிநிலை அறிக்கையின் மூலமாகத் திருப்தி அடையக்கூடிய அளவிற்கு நல்ல செயல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் இது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியது. அதேபோல் விவசாயிகள் சங்க அமைப்புகள், தொழிற்சங்க அமைப்புகள் போன்ற அமைப்புகளை அழைத்துப் பேசி இதுபோன்று, நிதிநிலை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்பாக அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்தால் நல்லது என்று நாம் கருதுகின்றோம். அந்த அளவிற்கு இதைச் செய்திருந்தால், பல பிரச்சினைகளிலே தீர்வு காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

*முற்பகல் 10-20*

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அநேகமாக உணவு தானிய உற்பத்திக்கு இது மிகவும் பாராட்டுக்குரிய, தமிழகத்திலே உதவி அளிக்கக்கூடிய திட்டமாக அமைந்துள்ளது. பத்தாயிரம் ஹெக்டேர் நிலங்களை மேம்படுத்தி தானிய உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேநேரத்தில் சாகுபடியான நிலங்கள் சுமார் 36 ஏக்கருக்கு மேலாக இப்போது பல்வேறு கட்டடங்களாக மாறியிருக்கின்றன. ஆக, அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விவசாய உற்பத்தியிலே 65 சதவீதம் மக்கள், அநேகமாக விவசாயத்தைச் சார்ந்திருப்பவர்கள் இப்போது அதிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 85 இலட்சம் டன்களாக இருந்தது. அதை 95 இலட்சம் டன்களாக உயர்த்துவதற்கான முயற்சிகளிலே நம்முடைய மாநில அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுத்திருக்கின்ற நடவடிக்கை பாராட்டுக்குரியதாக இருந்தாலும், அதேநேரத்தில் வேறு தொழிலுக்கு வாய்ப்பு இல்லாமல், வழி இல்லாமல், விவசாயத்தையே நம்பியிருக்கிற அந்த விவசாயிகள் அவர்களுடைய வாழ்க்கையில் மிக மோசமான அளவுக்கு நலிந்திருக்கிறார்கள். கடந்த காலங்களிலே பெற்றிருக்கிற கூட்டுறவுக் கடன் மீது ஏற்பட்டிருக்கிற வட்டியினால் துயரங்கள் ஏற்பட்டு விவசாயிகள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். எங்களுடைய



மாவட்டத்தில்—ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால்—மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உலகத்தைப் பற்றியெல்லாம் இன்றைக்குச் சிந்திக்கிறார்கள்; இந்தியாவைப் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்கள், நம்முடைய மாநிலத்திலே விவசாயிகள் நாளுக்குநாள் நலிந்து கொண்டிருக்கின்ற நிலையை அவர்கள் ஏன் விட்டு விடுகிறார்கள் என்கிற ஒரு ஏக்க நிலைமையில் நம்முடைய விவசாயிகள் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே பட்டிருக்கின்ற கடன் இன்றைக்குப் பெரிய அளவுக்குப் பாதித்திருக்கிறது. பல கோடிக்கணக்கான ரூபாய்களை வங்கிகளிலே கடன் வாங்கியிருக்கிற பெரும் முதலாளிகளுக்குக்கூட வங்கிகளில் “வராத கடன்” என்று தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கிறபொழுது, அப்பாவி விவசாயிகளின் நிலைப்பற்றி நாம் கவனித்து, பல மடங்கு பெருகியிருக்கின்ற இந்த வட்டி, அபராத வட்டியிலேயிருந்து அந்த விவசாயிகளை எப்படியாவது பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று பெரும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். குறைந்தபட்சம் அந்த வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவிற்கு அவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகையால் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று சொல்லிக் கொண்டிராமல், இயற்கைச் சீற்றங்களால் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்ற எல்லா விவசாயிகளுடைய வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட நீங்கள் ஒரு வழி காண வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த விவசாயிகள் பட்டிருக்கின்ற கடன் பிரச்சினை மட்டுமல்ல; அவர்களுக்கு இருக்கக்கூடிய மற்ற பிரச்சினைகளைப் பற்றி ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக அந்த விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண்பது நல்லதாக இருக்கும் என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைவிட முற்போக்கான ஒரு திட்டம், மனிதக் கழிவை மனிதனே சுமக்கின்ற ஒரு இழிவான செயலிலேயிருந்து பாதுகாக்கின்ற —

இந்தியாவிற்கு ஒரு வழிகாட்டியாக இருக்கக்கூடிய நல்ல திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

தென் மாவட்டங்களிலே ஏற்பட்டிருக்கின்ற சமீபத்திய ஜாதி, மதக் கலவரங்கள் சம்பந்தமாக, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, முன்னாள் நீதிபதி மோகன் தலைமையில் அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழுவினுடைய சிபாரிசை நிறைவேற்றக்கூடிய விதத்தில் தென் மாவட்ட மக்களுடைய வாழ்க்கையில் ஒரு முன்னேற்றம் காண, வேலையற்ற நிலையைப் போக்குவதற்காக எடுத்திருக்கின்ற நடவடிக்கை உண்மையிலேயே பாராட்டுக்குரியது, வரவேற்கக்கூடியது.

இன்றைக்குத் தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை, நீங்கள் திட்டமிட்டிருப்பதைப் போன்று, விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம் போன்ற பகுதிகளில் தொழிலிலே ஈடுபட முடியாத அளவிற்கு வேளாண்மையை நம்பியே தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருககிற அந்த விவசாயிகளுடைய பகுதிகளில் சிறு தொழில்களை நீங்கள் உருவாக்கித்தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நலப் பணியாளர்களுககு ரூ. 500, ரூ. 750 வரை இப்போது சம்பள உயர்வு மட்டும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அந்த வேலை முறைகளுக்கு ஒரு வழிவகை காண வேண்டும். அது ஒரு பொருத்தமான வேலையாக, பணியாக இருப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது மக்கள் நலப் பணியாளர்களை நியமித்தார்கள். அதற்குப் பின்னாலே ஆட்சிக்கு வந்தவர்கள், அவர்கள் அத்தனை பேர்களையும் நீக்கினார்கள். ஆகவே, அவர்களுக்குப் பணி உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் என்றைக்கும் அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபடுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போன்று, சமீபத்திலே பாரதிய ஜனதா கட்சியினுடைய மாநாடு திருச்சியிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிலே நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் கலந்துகொண்டு உரையாற்றுகின்றபொழுது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தமிழகத்திலேதான் சட்டம் ஒழுங்கு இப்போது கெட்டுப் போய்விட்டது என்று அவர்கள் அன்றையதினத்திலே பேசினார்கள். அவர்கள் யாரைத் திருப்திப்படுத்துவதற்காகப் பேசினார்கள் என்பதற்காக அல்ல. இன்னும் சொன்னால்கூட அந்தக் கட்சியிலே கூட்டணியாக அங்கம் பெற்றிருக்கின்ற ஜெயலலிதா அவர்கள் அந்த மாநாட்டிலே யாரும் கலந்துகொள்ள மாட்டோம் என்று பேசியபோதுகூட, அங்கேயிருக்கின்ற பாரதிய ஜனதா கட்சியினுடைய மாநிலச் செயலாளர் இல. கணேசன் உள்பட, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லி வாழை மரத்திற்குத் தங்கப்பூண் கட்டி அழகு பார்ப்பது போன்ற முறையில் உரையாற்றியிருக்கிறார்கள். எந்த அளவிற்குத் தமிழகத்திலே சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் வராமல் பாதுகாக்க வேண்டுமென்பதிலே கடும் முயற்சிகளை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்பது பெரிதும் வரவேற்கத்தக்க விஷயம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்கூட, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு பற்றி வெளியிலே பேசுகிறார்கள். அங்கே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று பேசிவிட்டு, தமிழக சட்டமன்றத்திலே சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கின்ற அளவிற்கு அவையினுடைய இறையாண்மையை கேலிக் கூத்தாக்குகின்ற அளவிற்கு ஒரு சட்டமன்றத்தினுடைய நிதிநிலை அறிக்கையைப்பற்றி முழுமையாக அதனுடைய உறுப்பினர்கள் விவாதங்களிலே பங்கு கொண்டு விவாதிக்க இயலாத நிலையை நிகழ்ச்சிகளைப்பற்றி உருவாக்கியதையெல்லாம் நாடு அறிந்திருக்கும்.

முற்பகல் 10-25

அந்தவகையிலே அவர்களைப் போன்றவர்கள் இப்போது பேசக்கூடிய நிலைமைகள் இங்கே வந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் நான் இறுதியாக ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு. அந்த துப்பாக்கிச் சூட்டில் வீரம்மாள்பட்டினம் என்ற கிராமத்தில்

குடிநீருக்காக தோண்டப்பட்ட இடத்தில் மண்ணுக்குள் இருந்து கிடைத்த ஒரு சிலையை மீட்பதில் காவல் துறைக்கும் அங்கேயிருந்த பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் துப்பாக்கிச்சூடு ஏற்பட்டு, மூன்று இளைஞர்கள் பலியானார்கள். அந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட பலர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட ஒரு பெண்ணுக்கு ஒரு கையை எடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒருவருக்குக் கண் பழுதடைந்த நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஒருவருக்கு ஒரு கையே முழுமையாகப் பழுதடைந்த நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. துப்பாக்கிச் சூட்டில் கையில் காயம் பட்டவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. கை போனவருக்குச் செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்தத் துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவாகியிருக்கிறது. ஆகவே அந்தக் குடும்பங்களுக்குக் குறைந்தபட்சமாக 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் ரூபாய் நிதியை வைத்தியச் செலவுக்காக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் சாதிக் கலவரத்தின் பெயரால் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நாம் வழங்கியிருக்கிறோம். ஆனால் இது சாதிக்கலவரத்தால் ஏற்பட்டதுகூட அல்ல. காவல் துறையினரே அங்கே துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிற காரணத்தால், அதேபோன்று 2 இலட்சம் ரூபாயை அவர்களுடைய குடும்பங்களுக்கும் வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவு திட்டத்தில் பெருமளவு பணம் நாம் செலவழிக்கிறோம். இது வரவேற்கப்படவேண்டியதுதான். சுமார் 520 கோடி ரூபாயை நாம் செலவழித்தாலும் அங்கே நடக்கிற ஒருசில சம்பவங்களைக் குறிப்பிடுவதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற முட்டைகள் சமீபத்தில் கெட்டுப்போனதன் காரணமாக, ஆயிரக்கணக்கான முட்டைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே முட்டை வழங்குகிற திட்டத்தின் அடிப்படையில், மாவட்டந்தோறும் முட்டை உற்பத்தியைப்



பெருக்குவதற்கும், கெட்டுப் போகாத முட்டைகளை வழங்குவதற்குமான புதிய திட்டத்தைக் கொண்டுவருவது, பலவகைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இதுபோன்று கல்வி நிலையங்களுக்கு வழங்குவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்று நான் கருதுகிறேன். அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மரியாதைக்குரிய சொக்கர், திரு. வி.பி. இராசன் மற்றும் நான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, ஏற்கெனவே Gauze bandage துணிகளுக்குப் போடப்பட்டுள்ள வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். 50 இலட்சம் ரூபாய் வரைக்கும் வரி கிடையாது. அதற்கு மேலே இருக்கிற ரூபாய்க்குத் தான் வரி என்று சொன்னார்கள். இப்போது ஒரு கோடி ரூபாய் வரை வரி கிடையாது என்று அறிவித்திருப்பதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு கோரிக்கைகளை முன் வைத்து முடித்துவிடுகிறேன். திருத்துறைப்பூண்டியில் உள்ள பள்ளி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன் — முதன்முதலில் தமிழ்நாட்டில் ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்குகிற நிகழ்ச்சி, அந்தப் பள்ளிக் கட்டடத்தில்தான் நடைபெற்றது. அது பார்ப்பதற்கு கல்லூரி போன்று இருக்கும். அதுபோன்ற பள்ளிக் கட்டடத்தை இப்போது கட்டவேண்டுமென்று சொன்னால் சுமார் 20 கோடி ரூபாயாவது தேவைப்படும். அந்த அளவுக்கு இருந்த அந்தப் பள்ளியில் இப்போது பிள்ளைகள் படிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. மூன்றடுக்கு மாடிகளிலும் ஜன்னல்கள் இல்லாமல், அங்கே கதவுகள் இல்லாமல் பெரிய அளவுக்கு இடிபாடுகளுக்கு ஆட்பட்டிருக்கிறது.

இரண்டாண்டுகளாக சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கக்கூடிய நிதியிலிருந்து பல பழுதுபார்ப்புப்பணிகளை அங்கே செய்திருந்தாலும் கூட முழுமையாகச் செய்யமுடியவில்லை. பல்வேறு பள்ளிக் கட்டடங்களை நான் கவனிக்கவேண்டியிருக்கிறது. குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாயாவது செலவு செய்து சீர்செய்தால்தான் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்தக் கட்டடத்தைப் பாதுகாக்கமுடியும். இன்னும்

ஐம்பது ஆண்டுகளுக்காவது அந்தக் கட்டடத்தில் படிக்கிற சுமார் 1500 மாணவர்களுடைய பாதுகாப்புக்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். அந்தவகையில் அந்தப பள்ளிக் கட்டடத்தைப் புனரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-30*

அதுபோன்று, திருத்துறைப்பூண்டி மருத்துவமனை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர், இவர்களிடத்திலே அந்த மருத்துவமனை குறித்து விரிவான அறிக்கை ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கட்டாயமாக அங்கு வந்து அந்த மருத்துவமனையைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அவ்வளவு மோசமான நிலையில் அந்த மருத்துவமனை இருக்கிறது. இப்போது அந்த மருத்துவமனைக்காகப் புதிய இடம் பார்வையிடப்பட்டுள்ளது. கோயிலுக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. என்னிடம் இருக்கக்கூடிய ஒரு ஏக்கர் சாகுபடி நிலத்தைக்கூடக் கொடுத்துவிடுவதாக நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அந்த இடத்திலே புதிய மருத்துவமனையை விரைவில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கட்டடம் கட்டுவதற்கான எல்லா வரைபடங்களும் அரசுக்கு வந்துவிட்டன. விரைந்து அந்த மருத்துவமனையைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. அய்யலுசாமி அவர்கள் என்னிடம் ஒரு கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார். கோவில்பட்டியில் மிகப் பெரிய அளவில் தீப்பெட்டித் தொழில் நடைபெற்று கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எந்த நேரத்திலும் அபாயம் ஏற்படும் என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியிலே மாவட்ட மருத்துவமனையைக் கட்டித்தர வேண்டுமென்று தொடர்ந்து அவர் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) அந்த மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே தொடர்ந்து கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யலுசாமி அவர்கள் அந்த மருத்துவமனையை



வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஒப்புக் கொண்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்த காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினருக்குக் கடுமையான எதிர்ப்பு வந்திருக்கிறது. பத்திரிகையிலே செய்திகள் வந்த காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர் சரியாகச் செயல்படவில்லை என்கிற கோபம் மக்களுக்கு வந்து, கடையடைப்புச் செய்ய இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரைக் கண்டித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த மாவட்ட மருத்துவமனையை தற்போது இருக்கும் இடத்திலேயே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலே அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் மூன்று முக்கியமான பாலங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. நமமுடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் வந்து பார்வையிட்டுள்ளார்கள். மூன்று பாலங்களும் துண்டிக்கப் பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலே 104 பாலங்கள் பணி மேற்கொள்ளப்படப் போவதாகச் சொல்லப்பட்டுள்ளது. அதிலே இந்த மூன்று பாலங்களும் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, அந்தப் பாலங்கள் கட்டும் பணியை இந்த ஆண்டே செயல்படுத்த வேண்டும். திருவாரூர் மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த மூன்று பாலங்களும்—ஆறு இடங்களிலே புதிய பேருந்து நிலையங்களாக மாற்றப்பட்டு—முற்றிலும் துண்டிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற பல்வேறு கட்சிகள் கிளர்ச்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகளை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்):** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான தமிழக நிதிநிலை அறிக்கையில் உள்ள சில நல்ல அம்சங்களை இங்கே நான் பாராட்ட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு குளிர்காலக் கூட்டத் தொடரின்போது நான் சில கேள்விகளை நம்முடைய அரசுக்கு எழுப்பினேன். இராமானுஜம் குழு அறிக்கை என்னவாயிற்று என்று நான் கேட்டேன். அதன்பிறகு

நம்முடைய அரசு துரிதமாகச் செயல்பட்டு, விரைவில் இராமானுஜம் குழு அறிக்கையை இந்த அவையில் வைப்பதாகவும், அதன்மீது நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்.

மாணவ, மாணவிகளுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சாதிச் சான்றிதழ்களை தாசில்தார் அலுவலகம் சென்று, காத்திருந்து, இலஞ்சம் கொடுத்து வாங்க வேண்டுமென்ற அந்த நிலைகளை எல்லாம் மாற்றி, நேரடியாகப் பள்ளிகளிலே கொடுக்கின்ற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு என்னுடைய பாராட்டுக்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அதேபோன்று தரிசு நிலம் என்பது இந்த நாட்டில் மிகவும் கவனிப்பாரற்றுக் கிடந்த சூழ்நிலையில், அதை மாற்றுவதற்காக, தரிசு நில மேம்பாட்டிற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலேகூட 100 கோடி ரூபாய் Waste Land Development-க்காக ஒதுக்கப்பட்டு, அப்படியே செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதையும் பயன்படுத்தி, தரிசு நிலங்களை மேம்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு தடவை, ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்திலே நான் ஓர் அமைச்சரைப் பார்த்துப் பேசினேன். அப்போது அவர், 300 கோடி ரூபாய் பணம் இருக்கிறது, யாராவது பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று எல்லா மாநிலங்களுக்கும் கடிதம் எழுதியிருப்பதாகவும், ஆனால் ஒரு மாநிலத்திலிருந்துகூட பதில் வரவில்லை என்றும் சொன்னார். இப்போதாவது, இந்தச் சூழ்நிலையில் அதைப் பயன்படுத்தி, தரிசு நில மேம்பாட்டிற்கு மத்திய அரசாங்கத்தில் குவிந்து கிடக்கின்ற பணத்தை எடுத்துச் செலவழிக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

பொதுத் துறை நிறுவனங்கள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. இன்று T.I.I.C., SIPCOT என்றெல்லாம் தொழில் தொடங்க கடன் தருகின்ற வெவ்வேறு நிறுவனங்கள் என்றுள்ள சூழ்நிலைகளையெல்லாம் மாற்றி ஒரு துறையின்கீழ் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.



அதேபோல மாணவிகளுக்கு, மாணவர்களுக்கு, 48,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கின்ற வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். தமிழ் மென்பொருள் தயார் செய்ய, வழிவகை செய்ய நிதி உதவி அளித்திருப்பது பாராட்டுக்குரியது. இவற்றிற்கும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி Tender முறையை அமல்படுத்துவதற்காக சட்டம் கொண்டுவர இருக்கிறீர்கள், அதற்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

பொதுவாக, இந்த பட்ஜெட்டிலே ஒருசில முக்கிய அம்சங்கள் தவிர ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பாட்டாளி மக்களுக்கு பயன்தரத்தக்க வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமையவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக வரவு-செலவுத் திட்டத்தில் மூல மதிப்பீடுகளுக்கும் திருத்திய மதிப்பீடுகளுக்கும் இடையேயுள்ள ஏராளமான வித்தியாசம் வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பு முறைகளில் ஒரு நம்பிக்கையை நமக்கு ஏற்படுத்தவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பட்ஜெட்டை, ஒரு நீண்ட தொலைநோக்கோடு உள்ள பட்ஜெட்டாக நான் கருதவில்லை. இன்னும் 10 ஆண்டுகளில் 100 சதவிகிதம் கல்வியறிவு என்றவொரு கருத்தைத்தவிர வேறு எதுவும் எதிர்காலச் சிந்தனையோடு போடப்பட்டு இருப்பதாக இதில் ஒரு இடத்தில்கூட இடம்பெறவில்லை.

அதேநேரத்தில் நமக்குப் பக்கத்தில் இருக்கிற ஆந்திர மாநிலம், அவர்களுடைய பட்ஜெட்டில் என்ன சொல்கிறார்கள் என்றால் 2020-ல் இந்த நாடு எப்படியிருக்கும், எந்தெந்தத் துறைகளில் நாம் வளருவோம் என்று ஒரு பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதுபோன்று ஒரு பட்டியல் நம்முடைய பட்ஜெட்டில் இடம் பெறவில்லை.

அடுத்தது, சென்ற ஆண்டு மொத்த மூலதன ஒதுக்கீடு 5,143 கோடி ரூபாய், செலவு செய்யப்பட்டது ரூ. 4,166 கோடி, செலவு செய்யாமலேயே விட்டுவிட்டது 977 கோடி ரூபாய். இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். ஏனென்றால் இதெல்லாம், ஏன் இப்படி இருக்கிறது என்று ஒன்றும் புரியவில்லை.

அடுத்தது, ஆண்டு நிதிநிலை அறிக்கை—Annual Financial Statement—பக்கம்-5. இதிலே மொத்த வருவாய்க்கான பட்ஜெட் 15,000 கோடி ரூபாய், திருத்திய மதிப்பீடு ரூ.14,000 கோடி. வருவாய் இழப்பு ரூ 1,000 கோடி. இதுவும் ஒன்றும் புரிய மாட்டேன் என்கிறது. ஏன் இதெல்லாம் போடுகிறீர்கள், அப்புறம் சும்மா குறைத்துவிடுகிறீர்கள். என்ன அர்த்தம் என்று ஒன்றும் புரியவில்லை.

ஆண்டு நிதிநிலை அறிக்கை—Annual Financial Statement வருவாய் கணக்குச் செலவுகள், நுகர்பொருள் வழங்கல்—அதற்கு Budget Estimate ரூ. 1,028 கோடி. Revised Estimate ரூ. 540 கோடி, 488 கோடி ரூபாய் என்ன ஆயிற்று? ஏன் செலவழிக்கவில்லை? இதை மிச்சப்படுத்தி விட்டீர்களா? நுகர்பொருள் வழங்கல் என்பது அன்றாட ஏழையெளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு நிதி ஒதுக்கீடு.

***மாண்புமிகு கலைஞர் மு கருணாநிதி:** தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கல் பற்றி குறிப்பிட்டார்கள். 1,000 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள்; ஐநூற்று சொச்சம் கோடிதான் வழங்கப்பட்டிருக்கிறது என்று. ஏற்கெனவே முன்கூட்டியே நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால் அதைக் கழித்து இதிலே போடப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்து, 'பொருளாதாரப் பணிகளுக்கு'—General Economic Service— பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. 1,094 கோடி, திருத்திய மதிப்பீடு வெறும் ரூ.608 கோடி. மிச்சப்படுத்தியது ரூ.486 கோடி. ஒவ்வொரு பட்ஜெட் மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் அதிகப்படியான மாறுபாடுகள் இருக்கும்போது பட்ஜெட்டைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வரவு-செலவுத் திட்ட உரையில் இணைப்புப் புத்தகத்திலே பக்கம் 68-லே செலவுகள் விவரங்களைக் காட்டும் அறிக்கையில் வரிசை 1-ல்—Agriculture and allied services—என்ற தலைப்பில் Crop Husbandry எனப்படும் பயிர் வளர்ப்பிற்காக பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கவில்லை. ஆனால் திருத்திய மதிப்பீடுகளில் 135 கோடியே 26 இலட்சம் ரூபாய் என்றிருக்கிறது.



முற்பகல் 10-40

ஆனால், 1999-2000-க்கு 83 கோடியே 26 இலட்சம் ரூபாய் என்று இருக்கிறது. நம்நாட்டில் உயிர்நாடியாக இருக்கின்ற கிராமப்புறங்களில் வலியுறுத்துகின்ற விவசாயிகள் பிரச்சினைக்காக ஒதுக்கப்பட்ட ரூபாயில் பயிர்ப் பாதுகாப்பில் மட்டும் 52 கோடி ரூபாயை எப்படிக் குறைத்தீர்கள் என்பதற்கு விளக்கம் இல்லை. இதுபோன்று, காட்டுவளம், கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, நவீன எரிசக்தி ஆதாரங்கள், இதிலே எல்லாம்கூட குறைத்து குறைத்துத்தான் வருகிறது. இவற்றையெல்லாம் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது Power Development, மின்சக்தி மேம்பாட்டிற்கு 1998-99-இல் ரூ. 903 கோடியே 41 இலட்சம் என்றும், திருத்திய மதிப்பீட்டில் ரூ.780 கோடியே 55 இலட்சம் என்றும் செலவழிக்காதத் தொகை ரூ.223 கோடி என்றும் இருக்கிறது. ஏற்கெனவே மின்சாரப் பற்றாக்குறையினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழ்நாட்டில் ஒதுக்கிய தொகையையாவது செலவழிக்க வேண்டாமா? அதிலே 223 கோடி ரூபாயை செலவழிக்காமல் விட்டால் இது உங்களுடைய கையாலாகாத்தனத்தைத்தான் காட்டுகிறது என்பதைத்தான் சொல்ல வேண்டும்.

வரவு-செலவுத் திட்ட வெளியீடு—Capital Outlay on Public Works-Buildings என்ற ஒரு Book வந்திருக்கிறது. இதில் பக்கம் 55, வரி எண் 8-இல் பார்த்தால் தெரியும், இதை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் காண்பிக்கிறேன். இதில் "Details of works for Demand—55-Capital Outlay on Public Works-Buildings" என்று இருக்கிறது. வரவு-செலவுத் திட்ட வெளியீடு-66-ல் — இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடமும் இருக்கிறது, இதிலே பார்த்தால்—ஏராளமான குளறுபடிகள் இருக்கின்றன. இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள், மருத்துவமனை கட்டுவதற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதாவது Public Works Department Building Section, Construction and Maintenance என்று அந்தத் துறைக்குப் பெயர். நான் எல்லாத் தொகுதிகளைப் பற்றியும் சொல்ல முடியாது. என்னுடைய தொகுதியிலே நடக்கின்ற குளறுபடியை மட்டும்தான் சொல்லலாம். நீங்களும் இதைப் படித்துப் பார்த்தால் உங்கள் ஊரிலே நடந்திருக்கிறதா என்பது தெரியும். அதாவது என்னுடைய தொகுதியில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் அபிராமம் என்ற ஊரில் கட்டுவதற்கு, 18 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் அளவுக்கு

G.O. போட்டிருககிறார்கள். G.O. எப்போது போட்டிருக்கிறார்கள் என்றால் 22 ஜூன் 1998-ல் போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி இன்னும் ஒன்று, இன்னொரு இடத்தில் Construction of Police Station at Abiramam 1,25,000 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். இதை எப்போது கட்டப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இதுமாதிரி இன்னும் பள்ளிக்கூடங்கள் என்றெல்லாம் நிறைய வருகிறது. பரமக்குடியில் ஒரு D.D.O. ஆபீஸ் கட்ட வேண்டுமென்று G.O.Ms.No.981/RD (P.1) Department 20-12-1990-ல் போட்டிருக்கிறார்கள். 17,94,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. நான் பரமக்குடியில்தான் குடியிருக்கிறேன். அங்கு இன்னும் இரண்டு எம்.எல்.ஏ.க்கள் குடியிருக்கிறார்கள். அந்தக் கட்டடம் வரவில்லை, வாடகைக் கட்டடத்தில்தான் அந்த அலுவலகம் இருக்கிறது. இந்த 17,94,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு 8 வருடம் 9 வருடம் ஆகியும்கூட அந்தக் கட்டடம் என்ன ஆகியது. அந்தப் பணம் என்ன ஆகியது என்ற விவரம் இல்லை. இதேமாதிரி ஏராளமாகச் சொல்லலாம். நான் என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொல்கிறேன்.

*முற்பகல் 10-45*

பிறகு உயர்நிலைப் பள்ளிகளுக்கு, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, JE. Construction of Laboratory Building for Higher Secondary School என்று 9th Five Year Plan-இல் ஏராளமான பள்ளிக்கூடங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன, கிட்டத்தட்ட 200 பள்ளிக்கூடங்களை எடுத்திருக்கிறார்கள். இதிலே, இராமநாதபுரம் Division அது என்னுடைய Division—இதை எல்லோருக்கும் தெரிவிக்கிறேன்—கடலாடி பஞ்சாயத்து யூனியனில மேலகிடாரம் என்ற ஒரு சின்ன ஊர். 150, 200 மாணவர்கள்தான் அந்த High School-ல் படிப்பார்கள். அது Higher Secondary அல்ல. இருந்தாலும் அதற்கு 9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் Laboratory-க்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அதிலே என்ன பிரச்சினை வருகிறதென்றால், இன்னொரு மேலகிடாரம், அதற்கு ரூ. 4 இலட்சத்து 84 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருவேளை Spelling mistake-ஆ? இது எந்த ஊர்? இது 9-வது பிளானில் போட்டிருக்கிறார்கள். இந்தமாதிரி குளறுபடிகள் நிறைய இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கை என்னவென்றால், இதை நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து, உங்கள் தொகுதிகளில் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள், எந்தெந்தக் கட்டடம் கட்டி முடித்திருக்கிறார்கள் என்று பார்த்து, வருகின்ற மானியக் கோரிக்கையில்



அத்தனை பேரும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு பெரிய விஷயம் பாருங்கள். அதாவது Secondary Education-லே Vocationalisation of Secondary Education at +2 level, Buildings under the control of Director, Technical Education என்ற ஒரு column இருக்கிறது. அதிலே Construction of work sheds in various schools under Vocationalisation of Secondary Education. இதற்கு 1991-ல் அரசாணை போட்டிருக்கிறார்கள். கமுதியிலே-கமுதி என்பது என்னுடைய தொகுதி. அதிலே Christian Mission Higher Secondary School for Girls at Kamudhi 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அதற்கென்று ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே என்ன வேடிக்கை என்றால் அப்படி ஒரு பள்ளிக்கூடமே அந்த ஊரில் கிடையாது. 'Christian Mission Higher Secondary School for Girls' என்ற ஒரு பள்ளிக்கூடமே அந்த ஊரில் இல்லை. இது என்னவென்று எனக்கு விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தமாதிரி நிறைய இருக்கின்றன. இந்தப் புத்தகத்தை எல்லோரும் பார்த்து இதிலே அவரவர் தொகுதியிலே என்னென்ன வந்திருக்கின்றன என்று பார்த்து நம்முடைய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். இதிலே நான் அரசை தவறாகச் சொல்லவில்லை. அந்த அதிகாரிகள் எவ்வளவு கவனக்குறைவாக தயார் செய்கிறார்கள் என்பதற்காகத்தான் இந்த உதாரணத்தை நான் சொன்னேன்.

அடுத்து, ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 11-ல் வருவாய்க் கணக்குத் தலைப்பில் இன்னொன்றும் வருகிறது. அதாவது பயிர் பாதுகாப்பிற்கு, பயிர் வளர்ப்பிற்கு 532 கோடி ரூபாய், அப்படியென்று நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. திருத்திய மதிப்பீடு 872 கோடி ரூபாய் என்று இருக்கிறது. அப்படியென்றால் அதிக செலவு 340 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது என்று அர்த்தம் ஆகிறது. இந்த விவரமும் எனக்குத் தெரியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இந்த ஆட்சி பொறுப்பேற்றது 1996-லே, அதற்கு முன்பிருந்த நிலையிலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதிகள் பள்ளிகளே இல்லாத ஊர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எந்த ஆட்சிக்

காலத்தில் என்பதைத் தெளிவாக்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஆட்சி மாறினாலும் அதிகாரிகள் அவர்களேதான் இருக்கிறார்கள். அதனால், அந்தக் குறையை கவனிக்க வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய கடமை என்பதாலே நான் சொன்னேன்.

அடுத்து, வேளாண்மையில் விரிவான மானியக் கோரிக்கை புத்தகம் எண் 20, பக்கம் 273-ல் உதவித் தொகை என்ற தலைப்பில்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பயிர் வளர்ப்பு Crop Husbandry என்ற அந்தத் தலைப்பில், 1998-99-லே திட்ட மதிப்பீடு, Budget Estimate 532 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள், பிறகு 872 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீடு வெளியிட்டிருக்கிறீர்கள். இப்படி அதிகமாகியிருக்கிறதே என்று கேட்டார்கள். பயிர் வளர்ப்பதற்காக அதிகமாக செலவிட்டதுகூட குற்றமா? அது கையாலாகாத்தனமா என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது, உண்மையிலேயே செலவிடப்பட்டிருந்தால் நான் பாராட்டுகிறேன். ஆனால், அதிலே ஏராளமான புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதால்தான் இங்கே நான் சொன்னேன். அந்தமாதிரி எந்தவிதமான செயல்பாடுகளும் நடவடிக்கையில் இல்லை என்று ஏராளமான புகார்கள் வந்திருக்கின்ற காரணத்தால் நான் இதை நம்முடைய முதலமைச்சருக்கு விளக்கிச் சொன்னேனே தவிர...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் இவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு நேரத்தை அப்போது வீணாக்க விரும்பாத காரணத்தால் இடையிடையிலே சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். எல்லாவற்றையும் நினைவிலே வைத்துக்கொண்டு பதில் சொல்வதும் இயலாத காரியம்.

முற்பகல் 10-50

எங்கெங்கே எந்த இடத்தில் என்ன ஒரு காரியத்திற்காக செலவழிப்பதாகச் சொல்லி தவறு நடைபெற்றிருக்கிறது என்று



குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின்போது நான் விரிவாக அதைச் சொல்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விரிவான மானியக் கோரிக்கை புத்தகம் எண் 20, பக்கம் 223-ல் உதவித் தொகை என்ற தலைப்பில், 1998-99 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்காமல், 1998-99 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் மட்டும் 370 கோடி ஒதுக்கி செலவழித்ததாகக் காட்டியுள்ளீர்கள். இதைப்பற்றியும் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே புத்தகம் பக்கம் 188-ல் போக்குவரத்து என்பது இன்று நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளர்ந்து வருகின்ற மிகப் பெரிய துறையாகும். சாலைகள் பாலங்களுக்கு பட்ஜெட் ஒதுக்கீடு 492 கோடி; திருத்திய மதிப்பீடு 350 கோடி. இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், 1999-2000-ல் ஒதுக்கியது 571 கோடி. சென்ற ஆண்டே ஒதுக்கிய பணத்தை செலவழிக்காதபோது, மேலும் அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை; அதையும் செலவழிக்க வேண்டும்; இதையும் செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே பக்கத்தில் சாலைப் போக்குவரத்து, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து—இதற்கென்று ஒதுக்கிய தொகை ரூ. 202 கோடி. இந்த ரூ. 202 கோடியும் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இந்த ஆண்டு ஒதுக்கி இருப்பது வெறும் ரூ. 102 கோடி. செலவழிக்கிற துறைக்கு பணத்தைக் குறைத்து, செலவழிக்காத துறைக்கு பணத்தை அதிகமாக ஒதுக்கி இருக்கிறீர்கள்.

அடுத்து சென்னை மாநகரம். நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் நம்முடைய சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் வந்துவிடுவார்கள் என்று கருதுகிறேன்; சென்னை, அண்ணா நகரில் மாநகராட்சிக்குச் சொந்தமான 35 கிரவுண்டு இடத்தில், 15 கிரவுண்டு நிலத்தினைத் தனியாருக்குக் கொடுப்பதாக அறிந்து அந்தப் பொதுமக்கள் எல்லாம் அங்கே கொதித்துப் போய் இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே I.A.S. அதிகாரிகள்—ரொம்ப பேர் இருக்கிறார்கள்; குறிப்பாக ஓய்வுபெற்ற I.A.S. அதிகாரிகள் அங்கே ஏராளமாக இருக்கிறார்கள்;

அவர்கள் எல்லாம் அரசுக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்த நிலத்தை தனியாருக்குக் கொடுக்கக் கூடாது. ஏற்கெனவே அதை ஜெயலலிதா காலத்திலும் கொடுக்க முயற்சி செய்தார்கள். கடைசிக் காலமாக இருந்ததால், அவர்கள் விட்டுவிட்டார்கள். இப்போதும் அதே குரூப் இன்றைய அரசாங்கத்திலும் முயற்சி செய்து, 15 கிரவுண்டு இடத்தை தனியார் வாங்கிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்; அதைத் தடுத்தாகவேண்டும்.

அதேமாதிரி My Lady's Park என்பது கவனிப்பாரற்று கிடக்கிறது; ஒரு காலத்தில் அது அதிக செல்வாக்கு மிக்க Park-ஆக இருந்தது; இன்று மோசமான நிலையில் இருப்பதாக ஏராளமான புகார்கள் வந்திருக்கின்றன. அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நம்முடைய பெருந்தலைவர் காமராசருடைய ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து இருந்தது. இன்று 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நம்முடைய அரசாங்கம் ஒரு G.O போட்டு இருக்கிறது. இப்போது பள்ளிகளில் எல்லாம் ஒரே கூட்டம். ஆனால் அங்கே ஆசிரியர்களே கிடையாது. அதேநேரத்தில் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றால் படிக்கவே முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது; இந்த விஞ்ஞான உலகத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது சரியல்ல: 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றுதான் இருக்க வேண்டும்; எனவே, திட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில உண்மைகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்களானால், ஒன்றுபட்ட எண்ணங்கள் ஏற்பட முடியும். 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவிக்கப்பட்டு நடைமுறையில், 65 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அளவுக்கு, ஆசிரியர்களுடைய எண்ணிக்கை குறைந்து போய்விட்டது. இடையிலே 5 ஆண்டுகளில் இந்தக் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கவில்லை. சில பள்ளிகளில் 70 மாணவர்கள், 75 மாணவர்களுக்கு ஒரே ஆசிரியர், ஒரே வகுப்பு இருக்கிறது. அதனுடைய மிச்ச சொச்சம், அண்மையிலே நான் பார்த்த ஒரு இடத்தில் ஒரே வகுப்பில் 120 மாணவர்களுக்கு



முற்பகல் 10-55

ஒரு ஆசிரியர்; ஆகவே அந்த நிலையிலேயிருந்து, 70 மாணவர்கள் சராசரியாக இருந்த நிலையிலேயிருந்து இன்றைய புள்ளிவிவரத்தின்படி 35,000 ஆசிரியர்கள் இந்த 3 ஆண்டுகளில் நியமனமாகி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய சராசரி கணக்கின்படி—இன்றைக்கும் நிர்வாகத்திலே ஆயிரம் குறைகள்; அதையும் நிவர்த்திக்க எத்தனையோ முயற்சி—இருந்தாலும்கூட, சராசரி கணக்கின்படி இப்போது 45 மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் என்ற அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

இன்னொன்று நிர்வாக முறையில் ஓர் இடத்தில் 4 ஆசிரியர்கள் 160 மாணவர்கள்; ஓர் இடத்தில் 3 ஆசிரியர்கள் 90 மாணவர்கள்; ஓர் இடத்தில் 4 ஆசிரியர்கள் 200 மாணவர்கள்; என்ற புள்ளி விவரங்கள் இருக்கின்றன. பிள்ளைகளுடைய எண்ணிக்கையும் ஆசிரியர்களுடைய எண்ணிக்கையும் எல்லா இடங்களிலும் ஒரே விகிதாச்சாரத்தில் வரவில்லை. நடைமுறையில் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 3,4,5 வகுப்புகளிலிருந்து வெறும் 100 மாணவர்கள் இருந்தால்கூட குறைந்தது 3 ஆசிரியர்கள் இருக்க வேண்டுமென நிர்வாக முறையில் ஆணையிட்டு, செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நடைமுறையில் 1:20 என்ற விகிதாச்சாரத்தில் கல்வித் துறையை நடத்துவது என்பது இயலாத காரியம். சொன்னவர்கள் செய்யவில்லை என்பதைப் புள்ளிவிவரங்கள் மூலமாக நான் எந்த நேரத்திலும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டுக்கு முன்னால் சில கிராமங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். பல கிராமங்களில் இருக்கிற பள்ளிகளில் ஏராளமான பிள்ளைகள் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஒருவர் அல்லது இருவர் இருக்கிற சூழ்நிலையைப் பார்த்ததன் காரணமாக இதைக் குறிப்பிட்டேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இதைப் புள்ளிவிவரங்களோடு தரத் தயாராக இருக்கிறேன். அதையெல்லாம் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறுபட்ட கருத்தல்ல, உடன்பட்ட கருத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதைப் போல இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளூர் ஆசிரியர்கள் கிடைக்காமல்

வெளி மாவட்டங்களிலேயிருந்து ஆசிரியர்களை நியமிக்கிற நிலைமை தொடர்ந்து ஏற்பட்டு, அந்த ஆசிரியர்களும் 6 மாதம், 3 மாதம் பணியில் இருந்துவிட்டு போய் விடுகிறார்கள். அந்தக் குறையை நிவர்த்தி செய்ய இந்த ஆண்டு எந்த மாவட்டத்தில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகிறார்களோ அந்த மாவட்டத்தில் குறைந்தது 5 ஆண்டுகள் பணியாற்ற வேண்டுமென்ற நடைமுறையை ஏற்படுத்தி, அதைச் செயல்படுத்துகிறோம். இப்படிப்பட்ட குறைகளைப் போக்க தொடர்ந்து முயற்சிப்போம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள், B.Ed., படித்தவர்கள் ஏராளமான பேர் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். 6,7,8 ஆம் வகுப்புகளுக்காவது அவர்களை நியமிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கலாம். இதில் இரண்டு இலாபம் இருக்கிறது. ஒன்று கல்வியின் தரம் நன்றாக இருக்கும். அவர்களுக்கும் வேலை கிடைக்கும். இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக ஊராட்சி மன்றங்கள். எங்களுடைய தலைவர் மூப்பனாரோடு உதகைக்குப் போயிருந்தேன். உதகையினுடைய Municipal Chair person சகுந்தலா அவர்களை அங்கேயிருக்கிற ஆணையாளர் ஒரு பியூனைப் போல நடத்துவதாக மிக வேதனையோடு கண்ணீர் விட்டுச் சொன்னார் தாழ்த்தப்பட்ட பெண் என்ற காரணத்தால் மிக இழிவாக நடத்துவதாகச் சொல்லி கண்ணீர் விட்டார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவர்களுக்கெல்லாம் தகவல் கொடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அல்லது தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும், உயர்ந்தவராக இருந்தாலும், அவர்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற சுற்றறிக்கையை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று ஒருசில நகராட்சிகளில் குறை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியைச் சேர்ந்தவர்களே என்னிடத்திலே தெரிவித்து, உடனடியாக அதற்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாற்றப்பட்டிருக்கிறது. இந்தத் தகவலை முன்கூட்டியே சொல்லியிருப்பாரேயானால் அன்றைக்கேகூட நடவடிக்கை எடுத்திருப்பேன்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ. 1,000-லிருந்து ரூ. 1,500 -ஆக உயர்த்தப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். அவர்களும் பாராட்டுகிறார்கள். இதிலே ஒரே ஒரு குறை என்ன சொல்கிறார்கள் என்றால், பத்திரிகையாளர்கள் என்றால் நாம் இங்கேயிருக்கிற நிருபர்களை வைத்து மட்டும் பார்க்கக் கூடாது. நிருபர்களுக்குக் கொடுக்க வேண்டியது நியாயம்தான். அவர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். இந்தப் பத்திரிகைகள் வெளிவருவதற்குக் காரணமாக இருக்கிற ஊழியர்களுக்கும் இது தொடர வேண்டும். இன்றைக்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் நிருபர்களுக்கு, அந்தப் பத்திரிகையினுடைய ஆசிரியர்கள் என்ற அந்த அளவோடு இந்தப் பயன் நின்றுபோய்விடுகிறது என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கும் இந்தப் பயன் சேர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

மக்கள் நலப் பணியாளர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். சம்பளத்தை உயர்த்த வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அந்தச் சம்பளத்தை இன்னும்கூட 500 ரூபாய் சேர்த்து 1,500 ரூபாயாகக் கொடுக்கலாம். இந்த மாதம் நான் 8 ஆம் தேதியிலிருந்து 16 ஆம் தேதி வரை என்னுடைய தொகுதி முழுமையும் சென்றேன். நான் தொகுதிக்குப் போகும்போது என்ன செய்வேன் என்றால், பெரிய கிராமங்களுக்கு மட்டும் போகாமல், சின்ன கிராமங்களுக்கும்கூடச் செல்வேன். அப்பொழுது அங்கிருக்கிற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களிடம் சொல்லி, அவர் ஒரு நிகழ்ச்சி நிரல் போட்டு, இந்த மக்கள் நலப் பணியாளர்களை அழைத்து. "கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 30 கிராமங்கள் போகிறோம், எல்லா கிராமங்களுக்கும் போய் நீங்கள் தகவல் சொல்லிவிடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். நான், B.D.O., Chairman அங்கிருக்கிற Councillors என்று எல்லோரும் அதிகாரப் பூர்வமாக, அரசியல் கலப்பில்லாமல் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். எந்த ஊருக்கும் தகவலே வரவில்லை, நீங்கள் வருவது தெரியவில்லையே என்று சொன்னார்கள். 'Notice' கொடுத்தேனே, மக்கள் நலப் பணியாளர்களிடம் கொடுத்தோமே என்றால், யார் மக்கள் நலப் பணியாளர்கள் என்று கேட்கிறார்கள். இதனால் அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதாக இருந்தால், அவர்கள் ஏதாவது வேலை செய்ய வேண்டும். இல்லையென்றால், தியாகிகளைப் போல, மொழிப் போர் தியாகிகளைப்

போல அவர்களை மாற்றிவிட வேண்டும் வேலை செய்யக்கூடியவர்களாக இருந்தால் அழைப்பிதழைக் கொண்டுபோய் கொடுக்க வேண்டும் இல்லையா? அதுகூடக் கொடுக்கவில்லை. எனவே, அவர்களை நீங்கள் ஏதாவது ஒரு வகையில் வேலை வாங்கவேண்டும். ஏனென்றால், ஒரு ஊரில் நிறைய பிரச்சினை இருக்கிறது. குறைந்தபட்சம் தகவலாவது சொல்லக்கூடியவர்களாக அவர்களுக்கு நீங்கள் ஏதாவது ஒரு பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது குடிநீரின் அளவை 55 லிட்டராக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக நம்முடைய பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறீர்கள். பாராட்டுக்கள். ஆனால் உலக சுகாதார நிலையம் என்ன சொல்கிறது என்றால், 200 லிட்டர் ஒரு தனி மனிதனுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. நாம 55 லிட்டரில்தான் இருக்கிறோம். அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும்.

என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் நம்முடைய அமைச்சர் (குறுக்கீடு) உங்களைப் பாராட்டத்தான் போகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இல்லை, இல்லை தகவலுக்காகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 லிட்டர் கிடைக்காத இடம்கூட தற்பொழுது இருக்கிறது. 40 லிட்டர்தான் என்று Norms நியமித்திருக்கிறார்கள், மத்திய அரசின் நீர்வளத் துறையிலே. ஆனால் நாம் வீட்டு இணைப்பை, தமிழ்நாட்டில் மட்டும்தான், கிராமப் பஞ்சாயத்துக்களில் கொடுக்கப்போகிறோம். ஆக, அதிகப்படி செலவாகும் என்பதை எண்ணித்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை 55 லிட்டராகக் கொடுக்கலாம் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் அதற்காக புதிய திட்டங்கள் வருகிறபோது, அவற்றை அப்பொழுது செய்ய முடியுமே தவிர, தற்போது இதற்கு முன்னால், சென்ற ஆண்டு, 6 மாதங்களுக்கு முன்னால் திட்டப்பட்ட திட்டங்களைக்கூட நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நாம் மிகுந்த நன்றி சொல்லவேண்டும். ஏனென்றால், பல தடவை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். நான்கூட கடுமையாக சட்டமன்றத்தில் குறைபட்டுக்கொண்டேன். அவர் வருத்தப்பட்டு இப்படி பேசுகிறீர்களே



என்றார். அதனுடைய பலன், இப்பொழுது நன்றாக இருக்கிறது. அவர் பல தடவை சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அதிகாரிகளை விரட்டி வேலை வாங்கி இப்பொழுது குடிநீர்ப் பிரச்சினை என்பது ஓரளவிற்கு முழுமையாக என்று சொல்லமாட்டேன். 60 சதவிகிதம் பரவாயில்லை. மற்ற இடங்களிலும் அவர்கள் செயல்பட வேண்டும். நல்லமுறையில் அமைச்சர் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். கடுமையாக வேலை செய்கிறார், வெயில் பாராமல், இரவு என்றும் பாராமல் மிகக் கடுமையாக வேலை செய்கிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுக்கள். ஏனென்றால், குடிநீர் என்பது இந்த நாட்டினுடைய மிகப் பெரிய பிரச்சினை. அவருக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

என்னுடைய தொகுதியில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, ஊரில் மனுக்களெல்லாம் கொடுத்தார்கள். அதில் ஒரு மனுவில் பாருங்கள், அதை முதலில் சொல்லிவிடுகிறேன், மற்றது பிறகு வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால் என் தொகுதி என்பதால் "எங்கள் கிராமத்தில்—அதாவது கமுதி ஒன்றியம், நீராவி என்ற கிராமத்தில்-பெரும்பாலும் நெசவுத் தொழில் செய்கின்ற ஏழை நெசவாளர்கள் அதிகமாக உள்ளோம். அரசால் வழங்கப்படும் இலவச வேட்டி சேலை மூன்று ஆண்டுகளாக எங்கள் கிராமத்தில் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக, தாங்கள் எதிர்க்கட்சித் தலைவராக வந்த பிறகு, இலவச வேட்டி சேலை கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். இது தங்களுக்கு மிகுந்த கெட்ட பெயரை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று எழுதி, ஊர் முழுவதும் கையெழுத்து போட்டு கொடுத்தார்கள். நாம் ஏன் போனோம் என்று எனக்கு ஆகிவிட்டது. இப்படிப்பட்ட குறைபாடுகள் சேலை கொடுப்பதில் ஏன் ஏற்படுகிறது?

முற்பகல் 11-05

முந்தைய அரசாங்கத்தில் என்ன செய்தார்கள் என்றால், மோசமான வேட்டி சேலைகளை, குட்டையான வேட்டி சேலைகளைக் கொடுத்தார்கள். ஆனால் வீட்டுக்கு வீடு கொடுத்துவிட்டார்கள். அவர்களும் சரி, இலவசமாகத்தானே கிடைக்கிறது என்று வாங்கி குப்பையில் போட்டுவிடுவார்கள். ஆனால், நம்முடைய அரசாங்கம் நல்ல வேட்டி சேலைகளைக் கொடுக்கிறது. ஆனால் ஊருக்கு 10 பேருக்குக்கூட கொடுப்பதில்லை. வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். ஊரிலே

எடுத்துச் சொன்னால், 'நாங்கள் எல்லாம் ஏழைகள் இல்லையா, அவர்கள்தான் ஏழைகளா' என்று கேட்கிறார்கள். பெரிய தொல்லையாக இருக்கிறது. இதை வேறு வகையிலே செய்ய வேண்டும். நான் திடீரென்று யோசனை சொல்லக்கூடாது. ஏனென்றால் அது பத்திரிகையில் வந்துவிடும். அதனால் தனிப்பட்ட முறையில் என்னுடைய கருத்துக்களை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இப்போது குறைந்த எண்ணிக்கையினருக்கே கொடுப்பதனால் அரசுக்கு மிகப் பெரிய கெட்டபெயர் ஏற்படுகிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுக் கடன் பற்றி கூறவிரும்புகிறேன். தஞ்சை விவசாயிகள் எனக்கு நிறைய கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற Central Bank தலைவர் இவர்கள் எல்லாம் பணக்காரர்கள் என்று ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். இதை அந்த விவசாயிகள் மிகுந்த வேதனையோடு தெரிவித்திருக்கிறார்கள். பணக்காரர்கள் எல்லாம் தஞ்சையை விட்டுச் சென்றுவிட்டார்கள். சிறு விவசாயிகள்தான் இப்போது இருக்கிறோம், அதனால் இந்தக் கடனை எல்லாம் இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நபார்டுடன் பேசி இரத்து செய்யமுடியாத அளவுக்குப் பழைய அரசாங்கம் சட்டம் போட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆந்திராவில் இதற்கு ஒரு வழி செய்திருக்கிறார்கள். ஆந்திர அரசாங்கம் இந்தக் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் எவ்வாறு விவசாயிகளுக்குப் பிரச்சினை இல்லாத அளவுக்குச் செய்தார்கள் என்பதைக் கண்டறிந்து அந்த முறையைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வரிவிலக்கு, கைவினைப் பொருட்களுக்கு வணிக வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தினசரி காலண்டருக்கு 8 சதவிகித வரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ஊர்களிலே காலண்டர் பார்க்காமல் யாரும் வெளியே செல்வதில்லை. இராகுகாலம் எத்தனை மணிக்கு, எமகண்டம் எத்தனை மணிக்கு, நல்ல நேரம் எத்தனை மணிக்கு என்று பார்த்துத்தான் நம்முடைய ஊர்களில் எல்லோரும் காரியங்களை மேற்கொள்கிறார்கள். அதனால் வீட்டுக்கு வீடு காலண்டர் [illegible]



ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும் காலண்டர் இல்லாத வீடுகளே கிடையாது. எனவே, இந்த தினசரி காலண்டருக்குண்டான வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வறுகடலை, கடலை மாவு, பட்டாணி மாவு, கற்கண்டு போன்றவற்றுக்கும் வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இது மிக அருமையான திட்டமாகும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில்—என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொன்னால் மற்றவர்கள் அதை வைத்துக் கணக்கிட்டுக்கொள்ளலாம்—1,94,14,500-ரூபாய்க்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்தார். ஆனால் அதில் நான்கில் ஒரு பங்குகூட செலவழிக்கப்படவில்லை. அது முடிந்துவிட்டது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தால் நடக்காது. அதற்கென ஒரு தனி அதிகாரியைப் போட வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களுக்கெல்லாம் தனி அதிகாரிகளைப் போட்டு அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முழுமையாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அங்கே முடிதிருத்துவோர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைந்த கூலியாக ரூபாய் 2 கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மாணவர்களுக்கு முடிதிருத்தும் கூலியாக இரண்டு ரூபாய் என்றும், இரண்டரை ரூபாய் என்றும் ஒவ்வொரு விடுதிக்கும் ஒவ்வொரு கட்டணமாகக் கொடுக்கிறார்கள் என்றும், சில இடங்களில் 5 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது, சாதாரணமாக 50 ரூபாய் வரையில் முடிவெட்டுவதற்குத் தருகிறோம். எனவே, இந்த முடிதிருத்துவோருக்கான கட்டணத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் பகுதியில் இருந்து மதுரை மாவட்டம், திருமங்கலத்திற்கு பனை ஏறும் தொழிலாளர்கள் காசி நாடார் தலைமையில் வந்து பதநீர் இறக்கியிருக்கிறார்கள். பதநீர் இறக்கினார்களோ, அல்லது கள்

இறக்கினார்களோ தெரியாது. பதநீர் இறக்கியிருக்கிறார்கள். அங்கே ஏற்கெனவே, சாராயக் கடை வியாபாரி இருக்கிறார் அல்லவா, அவர் 'நீ என்ன எனக்குத் தொல்லையாக வந்திருக்கிறாய், உடனே ஊரை விட்டுப் போகிறாயா இல்லையா' என்று மிரட்டியிருக்கிறார். நாங்கள் பதநீர்தானே இறக்குகிறோம் என்று இவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

இரவோடு இரவாக அவர்கள் குடிசையைத் தீ வைத்துக் கொளுத்தி, ஆறு பேர் அந்தக் குடிசையிலே சேர்ந்து எரிந்துவிட்டார்கள். ஆனால், போலீஸ் என்ன சொன்னார்களென்றால், தற்செயலாக நடந்த தீ விபத்து என்று சொல்லி, வழக்கை முடித்துவிட்டார்கள் என்று புகார் மனு வந்திருக்கிறது. அதை தயவுசெய்து கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓய்வு பெற்றவர்களுக்கு, 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காவது, முழு ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்திலிருந்து எனக்கு ஒரு மனு வந்திருக்கிறது. அது உண்மையா, பொய்யா என்பதை நம்முடைய அதிகாரிகள், அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டும்.

The following is the list of details of corruption through broker prevailing in the office of the Elementary Education at Anthanallur, Tiruchirappalli District:—

| | |
|---|---|
| Fresh appointment approval | - Rs.10,000/- |
| Transfer from High School approval | - Rs.2,000/- |
| Audit Objection write off | - Rs.3,000/- |
| Pension proposal: | |
| 1st Instalment | - Rs.1,000/- |
| 2nd Instalment | - Rs.1,500/- |
| P.F closure for retiring teachers | - Rs.250/- |
| P.F. Loan - For part-final withdrawal | - 5% |
| Incentive arrears | - Rs.500/- |
| Petty arrears | - Rs.150/- |
| E.L. Surrender | - Rs.50/- |
| Opening of P.F. Account | - Rs.300/- |



இப்படி நடந்துகொண்டிருக்கிறது என்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதுமாதிரி.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்படிப்பட்ட குறைகள் குறித்த கருத்தை உடனடியாக எங்களுக்குத் தெரிவித்திருப்பார்களேயானால், முடிந்த அளவிற்கு, எங்களுடைய அறிவுக்கு, திறமைக்கு, ஆற்றலுக்கு ஏற்றவாறு ஏதாவது செய்திருக்கலாம். பட்ஜெட்டிலே பேசவேண்டும் என்று இதையெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தால், நாங்கள் என்ன செய்யமுடியும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வேறு பிரச்சினை இது. பட்ஜெட்டிலே ஏதோ ஒன்றிரண்டை மாத்திரம் குறிப்பிட்டுவிட்டு, இந்தப் பட்ஜெட்டே சரியாகப் போடப்படவில்லை என்பதைப் போன்ற ஒரு கருத்தை உருவாக்க நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்கள் இங்கே சொன்னார்கள், உதவித் தொகை என்ற பெயரில், Subsidies என்ற பெயரில் 370 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எந்தவிதமான ஒப்புதலும் பெற்றதாகத் தெரியவில்லை. எப்படித் திடீரென்று அது முளைத்தது என்று கேட்டார்கள். அவர் அதைச் சரியாகப் படித்திருந்தால், அதைப் புரிந்துகொண்டிருப்பார்கள். அது எதற்காக என்றால், — அந்த உதவித் தொகை என்பதை மாத்திரம் படித்திருக்கிறார். மேலே உள்ள ஐந்தாறு வரிகளை அவர் படிக்கவில்லை. — உழவர்களுக்குச் சலுகை வீதத்தில் மின்சக்தி வழங்கியதற்காக தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின் கட்டண வகையில் இழப்பீட்டுத் தொகையில் நிலுவையை வழங்குதல், உதவித் தொகை என்ற பெயரால், 320 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு, இது கடந்த நவம்பர் மாதத்திலே துணை மதிப்பீட்டில் அதற்கான ஒப்புதல் இந்த அவையிலே வாங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால், அது ஒரு பெரிய தவறான கருத்தை நாட்டிலே பரப்பிவிடும் என்பதற்காக இந்த விளக்கத்தை அளிக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர் உப்பளம் என்ற ஒரு உப்பளம் இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முதன்முதலாக முதலமைச்சராக வந்த நேரத்தில் அதற்காக 5,000 ஏக்கர் நிலத்தை எடுத்து, சிறப்பான

முறையில் அந்த உப்பளம் இயங்கி வருகிறது. எத்தனையோ தொழிற்சாலைகளிலே ஏற்படுவது போன்று நஷ்டம் வராத ஒரு தொழில் இது. இதிலே இலாபம் வந்துகொண்டிருக்கிறது. ஆனால், நம்முடைய பழைய அரசாங்கம், அதற்கு ஒரு வரியைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன நினைத்துப் போட்டார்களென்றால், இப்படி ஒரு வரியைப் போட்டால் இதை மூடிவிடுவார்கள்; யாரிடமாவது விற்றுவிடுவார்கள் என்று நினைத்துப் பண்ணியிருக்கலாம். என்ன பண்ணினார்களென்றால், குத்தகைத் தொகை ஏக்கருக்கு இரண்டு ரூபாய் இருந்தது. ஆனால், அந்த அரசாங்கம் 1993 ஆம் ஆண்டிலே அதை 60 ரூபாயாக ஆக்கிவிட்டார்கள். தலைவரி ஏற்கெனவே 90 பைசாவாக இருந்ததை 60 ரூபாயாக ஆக்கிவிட்டார்கள். தலைவரி மற்றும் தலை மேல்வரி ஐந்து ரூபாய். அதை 300 ரூபாயாக ஆக்கிவிட்டார்கள். Royalty 25 ரூபாய். அது 25 ரூபாய்தான். அரசாங்க நிலம்தான் அது. ஆக, அரசாங்கத்திற்குக் குத்தகையாகக் கொடுக்க வேண்டிய ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 32.90-ஐ, 445 ரூபாயாக உயர்த்தி வசூல் செய்கிறார்கள். இது இந்தியாவிலேயே எங்கேயும் கிடையாது.

முற்பகல் 11-15

ஒரிசாவில் ரூ.4.50; குஜராத்தில் ரூ.27.50; ஆந்திராவில் 35 ரூபாய். மத்திய அரசிற்குச் சாதகமான இடங்களில் 22 ரூபாய். தமிழ்நாட்டிலே ஏற்கெனவே ரூ.32.90 பைசாவாக இருந்தது. இப்போது 445 ரூபாய். இந்த உப்பளத் தொழில் மிகச் சிறப்பான முறையில் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. வெள்ளி விழாவிற்கு நானும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. அ. இரகுமான்கான் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. தா. கிருட்டிணன் அவர்களும் சென்று வந்தோம். அங்கே சிறப்பான முறையில் 1,000 பேருக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இப்போது சாதிக் கலவரங்கள்கூட இல்லை. ஏனென்றால் எல்லோரும் வேலைக்குப் போய்விட்டால் எங்கே இருக்கிறது சாதி? அதனால் தான் அங்கு சாதிக் கலவரம் இல்லாமல் இருக்கிறது. மிகுந்த பிற்படுத்தப்பட்ட பகுதியில் அது இருக்கிறது. எனவே அந்த வரியை மறுபடியும் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெசவாளர் பிரச்சினை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தங்கம், வெள்ளி, வைரம் போன்றவற்றிற்கு விலையைக் குறைக்கின்றபோது ஒரு காரணத்தைச் சொன்னார்கள். பக்கத்து மாநிலங்களில் எல்லாம் வரி இல்லை, அதனால் அங்கே போய் வாங்கிவிடுகிறார்கள் என்று. அது நல்ல ஏற்பாடு. நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்திலே சிட்டா நூலுக்கு வரியென்பது ஆந்திராவிலே கிடையாது, கர்நாடகாவிலே கிடையாது, எங்கேயும் கிடையாது. நமது ஊரில் மட்டும் இருப்பதனால் நம்முடைய நெசவாளர்கள் துயரப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கும் அந்த வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



பார்வையற்றவர்கள் இருக்கின்றார்களே சமூகத்தில் மிக மிக பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பில் 1 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கமே உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கம் அதை அமல்படுத்தவில்லை என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள்கூட ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். எங்கள் சங்கம் 1982 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது—பார்வையற்றவர்கள் சங்கம்—எங்கள் சங்கம் பதிவுபெற்றது. எங்கள் சங்கத்தின் மூலம் பார்வையற்ற ஆண், பெண் அனைவருக்கும் சேவை செய்து அவர்களின் மறுவாழ்விற்கும், சுயவேலைவாய்ப்புக்கும் எங்களால் முடிந்தமட்டும் பணி செய்து வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே வேலைவாய்ப்பில் அவர்களுக்கு 1 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் பற்றி. இதையும் கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்வதற்குக் காரணம் இந்தமாதிரி சொல்வதனாலே இது எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதற்காகத்தான். இன்றைய நிலையில் கிராமப்புற பள்ளி ஆசிரியர்கள் எப்படி பணியாற்றுகிறார்கள் என்பது குறித்து இங்கே சொல்கிறபோது சொல்கிறார்கள்—இதனால் ஆசிரியர்கள் எல்லோரும் அநேகமாக கோபம் கொள்வார்கள். கோபம் கொண்டால்கூட இந்த நாட்டின் நலன் கருதி நான் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன் — ஓர் ஆசிரியர் எத்தனை நாட்கள் பள்ளிக்கு வராவிட்டாலும் தலைமை ஆசிரியர் கோடு போடவோ, absent செய்யவோ கூடாது. இது முதல் உத்தரவு அங்கே தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் தலைமை ஆசிரியர் எவ்வளவு தூரத்திலிருந்து, எப்பொழுது

வேண்டுமானாலும் வரலாம். இதைப் பரிசீலனை செய்யக்கூடிய அதிகாரிகளே இல்லையென்பது இரண்டாவது அதிர்ச்சி. ஊராட்சித் தலைவர், டவுன் பஞ்சாயத்துத் தலைவர், ஒன்றிய Chairman அல்லது Councillory சட்டமன்ற உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் யாரும் ஆசிரியர்கள் பணியில் இல்லாதது பற்றிய குறிப்பு எழுதி வைக்க முடியாது என்பது மூன்றாவது அதிர்ச்சி. இப்படி நிறைய சொல்லிக் கொண்டு போகிறார்கள். ஆகவே நம்முடைய ஆசிரியர்களுடைய பணி இன்று மக்கள் மத்தியிலே மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவிற்கு இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதி கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) -- Bandage Cloth-திற்கு அவர் நன்றி சொல்லிவிட்டார்.

கடைசியாக, தொழில் சேவை பற்றி நம்முடைய கோவை கட்டமைப்பு இப்போது கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய நிலைமை இன்று மிகவும் மோசமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக கோயமுத்தூரில் எல்லா தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிட்டன. தொழிற்சாலைகளை மறுபடியும் திறப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றால் அரசு ஆவன செய்ய வேண்டும். எப்படிச் செய்ய வேண்டுமென்றால் விற்பனை வரியில் அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தில் சலுகை கொடுக்க வேண்டும். இதில் எல்லாம் சலுகை கொடுத்து மறுபடியும் தொழிற்சாலைகளைத் திறக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-20*

இறுதியாக ஒன்று; D.D.C கண்டிப்பாக வேண்டுமென்று எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைக்கிறார்கள். காரணம், எங்களுக்கும் அதிலே சட்டப்படி இடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். முதலாவது ஒரு தீர்மானம் போட்டு, D.D.C. நடத்தலாம் என்று சொல்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்குமாறு பணிவன்போடு நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அண்ணா நகரில் உள்ள பூங்காவிற்கு உரிய நிலத்தை யாரோ ஒரு தனி நபருக்குத் தாரை வார்ப்பதற்கு முயற்சி நடக்கிறது என்று சொன்னார்கள். தற்போது எனக்குக் கிடைத்திருக்கிற தகவல், அண்ணா நகரில் உள்ள பூங்காவின் ஒரு பகுதியை, சென்னை மாநகராட்சிக்கு வருவாய் பெறும்வகையில் Theme Park என்ற ஒரு கருத்துப் பூங்காவை உருவாக்கிட ஒப்பந்தப்புள்ளிகள் விதிமுறையின்படி கோரப்பட்டன அதன்மீது முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சென்னை மாநகராட்சியிடம் அது நிலுவையில் உள்ளது. இதற்கிடையில் அண்ணா நகரில் இருக்கும் அதிகாரிகள் சிலர், அதற்கு ஆட்சேபணை தெரிவித்தனர். அந்த ஆட்சேபணையைப் பரிசீலிக்க வேண்டுமென்று முடிவெடுத்து, மாநகராட்சி அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்கி, அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது நிலுவையில் இருக்கிறதே தவிர, ஒரு முடிவுக்கு இன்னும் வரவில்லை. அதனைத் தனியாருக்குக் கொடுப்பதாகவும் இல்லை. ஆகவே, இதிலே ஒரு முடிவே ஏற்படவில்லை. ஒரு நேரத்திலே இதுகுறித்து பத்திரிகையிலே வந்தபோதுகூட, நான் மாநகராட்சியிலே கேட்டு அதன் முடிவைத் தெரிந்துகொண்டேன். எந்தவிதமான அவசரமும் இதிலே இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வழங்கியபோது, அவையிலே இருந்து அதைப் படித்து உணர்ந்து மகிழ்ந்த என்னுடைய அருமைத் தம்பி திரு. ஆல்டன் அவர்கள் அந்த நிதிநிலை அறிக்கைக்கு நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் இல்லையே என்கின்ற ஆழ்ந்த வேதனையோடு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை குறித்து, ஏறத்தாழ 30-க்கும் மேற்பட்ட, சரியாகச் சொல்ல வேண்டுமானால் 34 பேர், கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சுமார் 8 அல்லது 9 மணி நேரத்திற்கு மேலாக கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எத்தனையோ அலைகள், புயல்கள், இவற்றிற்கு இடையிலேகூட 34 பேர் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே தங்களுடைய வாகான கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்புப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அறிக்கை குறித்து, உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும், பாராட்டியும், பாராட்டுக்களுக்கு இடையே குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அரிய கருத்துக்களை எடுத்துரைத்தும் கடமையினை ஆற்றியிருக்கிறார்கள். பல பாராட்டுக்களை இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அவாகள் ஒருசில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, என்ன காரணத்தினாலோ "இது கையாலாகாத சர்க்கார்; இது கையாலாகாதவர்கள் தயாரித்த பட்ஜெட்" என்பதைப் போன்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். சட்டசபையிலே கையால் ஆகின்ற காரியங்கள் எதுவும் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நான்கு, ஐந்து நாட்களாக நாம் இங்கே பலத்த விவாதத்திலே ஈடுபட்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, slip of the tongue என்பார்களே அப்படியோ, அல்லது உள்ளபடியே எண்ணியோ அவர் அந்தக் கருத்தைச் சொல்லியிருப்பாரேயானால், உள்ளபடியே திறமையாக, மேலும் ஆற்றலாக இன்னும் அறிவுபூர்வமாகச் செயல்படுவதற்கு, எதிாக்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தை வரவேற்க நான் தயாராக இருக்கிறேன். எதிாக்கட்சித் தலைவர் இங்கே உரையாற்றுகிறார் எனறால், அவர் இங்கே கூறுகிற அறிவுரைகள், கருத்துக்கள் இவையெல்லாம் என்னுடைய அன்பிற்குரிய நண்பர் திரு. மூபபனாா அவர்களுடைய கருத்துக்களாகவே நான் ஏற்றுக்கொண்டு, அவற்றை இங்கே நான் செயல்படுத்தி வருகின்றேன். ஆனால், இந்த வார்த்தை, திரு. மூப்பனாருடைய வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தை அல்ல என்பதையும் நான் மிக நன்றாகவும் தெளிவாகவும் அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-25*

இந்த விவாதத்தில், பல கருத்துக்கள் என்னுடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே பேசும்போது முதல்வர் இந்த அவையிலே இல்லாவிட்டாலும் கூட, எங்களுடைய பேச்சுக்களையெல்லாம் படித்துப் பார்க்கத் தவற மாட்டார் என்று குறிப்பிட்டார். அது உண்மை. உடல்நலம் இல்லாமல் நான் படுக்கையிலே இருந்த நேரத்தில்கூட, அந்தக் கருத்துக்களை எல்லாம் நான் படித்துப் பார்த்தேன். நேறறையதினமும் எல்லோரும் பேசியதை தொகுப்பாக எடுத்து படித்துப் பார்த்துவிட்டுதான் என்னுடைய பதிலுரையைத் தயாரித்திருக்கின்றேன்.



நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள்கூட, தென்னாலிராமன் கதையைச் சொல்லி இது நான் சொல்கின்ற கதையல்ல, முதலமைச்சர் கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இங்கே சொன்ன கதை என்று சொல்லி எனக்கு Royalty கொடுக்காமலேயே (சிரிப்பு) அந்தக் கதையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார். என்ன காரணமோ சுப்பராயன் அவர்கள் பேசும்போது அழுத்தம் திருத்தமான கருத்துக்கள் எடுத்து கூறக்கூடிய ஆற்றல்படைத்தவர், எதிர்ப்பான கருத்துக்களை அவர் சொன்னாலும்கூட அவற்றை நான் ஆழ்ந்து கவனிப்பது என்னுடைய வாடிக்கை. காரணம் அந்த அளவிற்கு சொல் வேகம், சொல்லில அழுத்தம் — சொல்லுகின்ற வார்த்தையில் ஒரு கனம் இத்தனையும் வாய்ந்த பேச்சு நண்பர் சுப்பராயன் அவர்களுடைய பேச்சாகும். ஆனால், அன்றைக்கு நான் அந்தப் பேச்சைக் கேட்டபோது—எங்கிருந்து கேட்டாய் என்றெல்லாம் என்னைக் கேட்கக்கூடாது—நான் கேட்டபோது, அவருடைய பேச்சில் "தொங்கு சதை", "மூச்சுத் திணறல்," "கவர்ச்சித் திட்டங்கள்" போன்ற அவரே பிறகு நினைத்துப் பார்த்தால் இப்படியா பேசிவிட்டோம் என்று எண்ணக்கூடிய சொற்றொடர்களையெல்லாம் பயன்படுத்தியிருந்தார். தொடக்கத்திலேயே மூச்சுத் திணறலோடு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். உண்மைதான். என்னுடைய நிலையை அவர் உணர்ந்ததற்காக நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்றும், இன்றும் பெரிதும் மதிக்கத்தக்க ஒரு தலைவர் கலைஞர் அவர்கள். நான் மூச்சுத் திணறல் என்று சொன்னதனுடைய பொருள் பட்ஜெட் தாக்கலில், நிதிப் பற்றாக்குறையால் பட்ஜெட் மூச்சுத் திணறுகிறது என்று குறிப்பிட்டேன். மிக எச்சரிக்கையோடு தான் அதைக் குறிப்பிட்டேன் என்பதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் அதை முழுமையாக சொல்லி முடிப்பதற்குள் சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் அளித்துவிட்டார். அந்த விளக்கத்தையும் இந்த உரையிலே, என்னுடைய உரையோடு சேர்த்துக்கொள்கின்றேன். மூச்சுத் திணறல் ஏற்படுவது சில நேரங்களில் தோழமைக் கட்சிகளாலும் ஏற்படுகிறது. எப்படியென்றால் ஒரு வரியைப் போடும்போது, அந்த வரி கூடாது

என்று சொல்வதும் தோழமைக்கட்சிகள்தான். ஏன் வருவாயைப் பெருக்கி நல்ல திட்டங்களை நிறைவேற்றக்கூடாது என்று கேட்பதும் தோழமைக்கட்சிகள்தான்.

சென்னை மாநகரத்தை ஏன் அழகாக வைத்திருக்கக்கூடாது, சிங்காரச் சென்னை, சிங்காரச் சென்னை என்று மேயர் கூறிக் கொண்டேயிருக்கிறாரே, ஏனோ சிங்காரச் சென்னை இன்னும் உருவாகவில்லை என்று கேட்பதும் எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல, தோழமைக் கட்சிகளும்தான் கேட்கிறார்கள். ஆனால், அதற்காக, கூவத்தையோ அல்லது பக்கிங்ஹாம் கால்வாயையோ, ஓட்டேரி நல்லானையோ அழகுபடுத்த வேண்டும், அழகுபடுத்த வேண்டும், அகலப்படுத்த வேண்டும், சென்னையை நாகரிகம் மிகுந்த நகரமாக மாத்திரமல்ல சுகாதாரம் மிகுந்த நகரமாக, கொசுக்கடி போன்ற தொற்று நோயைப் பரப்பக்கூடிய கிருமிகள் உற்பத்தி ஆகாத இடமாக மாற்ற வேண்டும் என்று விரும்பி அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு, அதற்காக இப்போது அங்கு இருக்கின்ற குடிசைகளையெல்லாம் அகற்றி, அவர்களுக்கு வேறு மாற்று இடம் தருகின்ற முயற்சியிலே மாநகராட்சி மன்றம் ஈடுபடுகிற நேரத்திலும் மாநகராட்சிக்குத் துணையாக மாநில அரசு இருக்கின்ற நேரத்திலும்கூட, ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அங்கு வாழுகின்ற குடிசைவாசிகளை அழைத்துக்கொண்டு ஒரு ஊர்வலம் விடுகிறார்கள் என்றால், நான் அங்கு இருக்கின்ற குடிசைவாசிகளுக்கு எதிரானவன் அல்ல. அவர்களுக்கு மாற்று இடம் தரவேண்டும், அவர்கள் நல்லமுறையிலே வாழவேண்டும் என்கின்ற எண்ணம் உடையவர்கள்தான் நாம். ஆனாலும் நாலாயிரம், ஐந்தாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு வருகின்ற காரணத்தினாலே அந்த அழகுபடுத்துகின்ற காரியத்தை அரசோ அல்லது மாநகராட்சி மன்றமோ செய்யலாமா, செய்ய வேண்டாமா என்கின்ற மூச்சுத் திணறலுக்கு ஆளாக நேரிடுகிறது. மத்திய சர்க்காரால் மாத்திரமல்ல, மூச்சுத் திணறல் தோழமைக் கட்சிகளாலும் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கவர்ச்சித் திட்டங்களைப்பற்றியெல்லாம் அவர் சொல்லும்போது தொங்கு சதை என்று குறிப்பிட்டார். அவருக்கே உரிய சில வார்த்தைகள் உண்டு. இந்த அவையிலே எனக்கோ அல்லது பேராசிரியருக்கோ, மற்றவர்களுக்கோகூட தோன்றாத, உச்சரிக்காத அந்த வார்த்தைகளை தலைகென்று. அவருக்கு மாத்திரமே copy right என்கின்ற அளவிற்கு அந்த வார்த்தைகளை அவர் பயன்படுத்துவார். இதிலே ஒரு நியாயமான



உண்மை என்னவென்றால், எனக்கோ அல்லது அவை முன்னவர் பேராசிரியருக்கோ, அவர் குறிப்பிடுவதைப்போல தொங்கு சதை எதுவும் கிடையாது (சிரிப்பு) நாங்கள் ஏற்கெனவே இளைத்த உருவங்கள்.

முற்பகல் 11-30

இந்த அமைச்சரவையிலே உள்ள நாங்கள் தயாரித்த இந்த வரவு செலவுத் திட்டத்தில், கவர்ச்சித் திட்டங்கள் எல்லாம் தொங்கு சதை என்று அவர் குறிப்பிட்டது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொன்னார். யாரோ சத்துணவுபற்றி குறிப்பிட்டபோதும், வேறு சில ஏழைகளுக்கு உணவு வழங்குதல் போன்ற செய்திகளைச் சொன்ன போதும் திரு. சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள், அது என்ன காலையிலே சாப்பிட்டு அல்லது மாலையிலே சாப்பிட்டு, மறுநாள் காலையிலே வெளியே வருவதுதானே என்று குறிப்பிட்டார்கள். விஞ்ஞான ரீதியாக எல்லாம் தெரிந்த சுப்பராயன் அவர்களுக்கு மாலையிலே சாப்பிடுகின்ற உணவோ அல்லது எதுவோ, அது உடலிலே ஊறி இரத்தமாக மாறி உடலுக்கு வலு அளிக்கிறது என்பதுகூடத் தெரியாமலா இருக்கும். நிச்சயமாகத் தெரியும். தெரிந்தாலும்கூட அன்றைக்கு என்னவோ கோபம், வீட்டிலேயிருந்து வரும்போதே கோபத்தோடே வந்திருக்கிறார். (சிரிப்பு) மனைவி மீது இருக்கிற கோபத்தை மகன் மீது காட்டுவதைப்போல என்மீது அல்லது நான் தயாரித்திருக்கிற பட்ஜெட் மீது அதைக் காட்டியிருக்கிறார் மற்றபடி அவர் பேசிய பேச்சுகளிலே மிக ஆழ்ந்த, பொருளாதார தத்துவங்கள், சமுதாய நலன்களுக்காக கூறப்பட வேண்டிய கருத்துக்கள், மிக, மிக இருந்தன என்பதை நான் படித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கின்றேன்.

இங்கே இன்றைக்கு வரவில்லை நம்முடைய நண்பர் உறுப்பினர் அழகிரி அவர்கள். அவரும் அவருடைய கட்சியினுடைய அதிகாரப்பூர்வமான பத்திரிகையிலே எழுதிய கட்டுரையையும் படித்துப் பார்த்தேன். அவர் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி குறிப்பிட்டுவிட்டு, கடைசியாக முடிக்கும்போது இந்த நிதிநிலை அறிக்கையிலே, இலக்கியவாதி கலைஞரைத்தான் காண முடிகிறது. நிதியமைச்சர் கலைஞரைக் காணமுடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். எனக்கு இது ஒரு மகிழ்ச்சி. இலக்கியவாதி கலைஞர் சாகிற வரையிலே வாழ்வார். நிதியமைச்சர் கலைஞர் அப்படி வாழ முடியாது. இடையிலே அந்தப் பதவி போய்விடும். இலக்கியவாதி என்பதுதான்

கடைசி வரையிலே நிலைக்கும். எனவே, அவர் அப்படிக் குறிப்பிட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சிதான்.

நம்முடைய நண்பர் ஞானசேகரனோ அல்லது திருநாவுக்கரசு அவர்களோ, நமமுடைய எதிர்க்கட்சித் தலைவரோ, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் பழனிசாமி அவர்களோ, அல்லது இந்திய தேசிய லீக்கின் தலைவர் அப்துல் லத்தீப் அவர்களோ, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பேசிய மணி அவர்களோ, நண்பர் சந்தானம் அவர்களோ, வெங்கடசாமி அவர்களோ, பேராசிரியர் தீரன் அவர்களோ, இத்தனை பேரும் கூறிய இந்தக் கருத்துககளையெல்லாம் எடுத்து வைத்து, என்னுடைய உரையைத் தயாரித்திருக்கின்றேன. மற்றும் பல உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் சிந்தித்துப பார்த்து, எண்ணிப் பார்த்து என்னுடைய உரை இங்கே வழங்கப்படுகிறது. அதற்கு முன்பு ஒன்றைச் சொல்ல வேண்டும். பேசியவாகள் அனைவரும் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் உள்ளிட்ட அனைவரும் இது 12-வது நிதிநிலை அறிக்கை என்பதைப் புகழ்ந்து பாராட்டிக் குறிப்பிட்டார்கள்.

1969 ஆம் ஆண்டு என்னுடைய இனிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு என் தோள்களிலே சுமத்தப்பட்ட இந்த பெரும் பொறுப்பை நான் ஏற்று 12-வது நிதிநிலை அறிக்கையை படிக்கின்ற வாய்ப்பை உங்கள் அனைவருடைய அன்பான வாழ்த்துக்களோடும், ஆதரவோடும் நான் பெற்றிருக்கின்றேன. 1969 முதல் இதுவரையில் இந்தப பன்னிரண்டு அறிக்கைகளுக்கும் இடையில் உள்ள காலத்தில மாநிலததிறகாக வளர்ச்சித் திட்டங்கள் அன்றாடத் தேவைகளுக்கான திட்டங்கள், நிர்வாகத்திற்கான திட்டங்கள் இவை போக குறிப்பிடத்தக்க திட டங்கள் எவையெவை நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை நினைவிலே வைததுக் கொள்ள வேண்டியதவசியம் என்றே நான் கருதுகிறேன். எனவே, அதை நினைவுபடுததவும் விரும்புகிறேன். 1969-க்கு முன்பு இலவசக் கலவி S.S.L.C. வரையிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் வழங்கப்பட்டது.

முறபகல் 11-35

1969-லேதான அண்ணா அவாகளுக்குப் பிறகு நான் பொறுப்பேற்ற நேரத்தில் P.U.C. வரையிலே இலவசக் கல்வி என்ற நிலையை நீட்டிக்கச் செய்தேன். 1969-லேதான் பிற்படுத்தப்பட்டோருக்கான நலன்களை மேலும் விரிவாக ஆராய்ந்திட சட்டநாதன் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அதனுடைய பரிந்துரைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1969 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும், ஆதிதிராவிடர் நலத் துறையும் ஒன்றாக இருந்தது தனித் தனியே பிரிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோருக்காக பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சகம் ஒன்று உருவாக்கப்பட்டது. 1969-லே R.A. கோபால்சாமி ஐயங்கார், I.C.S அவர்களுடைய தலைமையில் Police Commission தமிழ்நாட்டிலே -- இந்தியாவிலேயே இந்த மாநிலத்திலேதான் முதன் முதலாக போலீசாருடைய தேவைகளை உணர, பரிந்துரைக்க Police Commission அமைக்கப்பட்டது.



1967-க்கு முன்பு 1933 ஆம் ஆண்டு தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது, மின்சாரம். 1933 ஆம் ஆண்டிலிருந்து 1966 வரையில் 20,250 கிராமங்கள் மாத்திரம்தான் மின் விளக்கு வசதி பெற்ற கிராமங்களாக இருந்தன. இன்னும் சொல்லப்போனால் 33 ஆண்டுகள் வெள்ளைக்காரர்கள் ஆட்சியும் சேர்த்து, 1966 ஆம் ஆண்டு வரையிலே 33 ஆண்டுகாலத்தில் சுமார் 20,000 கிராமங்கள்தான் மின் விளக்கு ஒளி பெற்ற கிராமங்களாக இருந்தன. அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர்களுடைய Colony-கள் — மொத்தம் சுமார் 20,000 என்றால் -- 2,000 Colony-களுக்குத்தான் விளக்கு ஒளி வழங்கப்பட்டிருந்தது.

மின் விளக்கு இல்லாத கிராமங்களே தமிழகத்திலே இருக்கக்கூடாது என்ற ஒரு நிலையை உருவாக்குவோம் என்று இந்த அவையிலேயே நான் அறிவித்து, சபதம் செய்து, அதன்படி மொத்தமுள்ள 58,000 பெரிய கிராமங்களிலே 400, 500 கிராமங்கள் தவிர, மற்ற எல்லா கிராமங்களுக்கும் மின் விளக்கு வசதி செய்து தரப்பட்டது, 20,000 ஆதிதிராவிடர் Colony-களில், 18,000 Colony-களுக்கு மின் விளக்கு வசதி செய்து தரப்பட்டது, இது 1969-ல்.

1970 ஆம் ஆண்டு — அதுவரையிலே குடிசைகள் மேம்பாட்டு வாரியம் என்ற ஒன்று இருந்து, குடிசைப் பகுதிகளைச் சீராக, செம்மையாக, சுகாதார வசதிகளோடு வைத்துக் கொள்ள வேண்டுமென்று இருந்த அந்தத் திட்டத்தை அப்படியே மாற்றி குடிசைகளை அகற்றுகின்ற திட்டம் என்ற ஒன்று கொண்டுவந்து, குடிசைவாசிகளுக்கு மாடி வீடுகள் கட்டுகிற அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1960 ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின்படி 30 Standard ஏக்கர் உச்சவரம்புச் சட்டத்தின்படி, ஒரு ஏக்கர் நிலம்கூட உபரி நிலமாக எடுத்து யாருக்கும் வழங்கப்படாத சூழ்நிலையை எண்ணிப் பார்த்து 1970 ஆம் ஆண்டு 15-2-1970-ல் 15 ஏக்கர் நில உச்சவரம்புச் சட்டத்தை இங்கே நிறைவேற்றி, அந்தச் சட்டத்தின் காரணமாக 1,97,900 ஏக்கர் நிலத்தை உபரி நிலமாக எடுத்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர். இதனால் பயனடைந்த உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர். இவர்களில் ஆதிதிராவிடர்கள் 61,985 பேர், பழங்குடி மக்கள் 204 பேர்.

1971 ஆம் ஆண்டு நம்முடைய பழனிசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்களே, அதைப்போல குடியிருப்பு மனைச் சட்டம் என்ற ஒரு தீவிரமான சட்டத்தைக் கொண்டுவந்து, எங்கெங்கே விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிறார்களோ, அந்த மனைகளை எல்லாம், அவற்றை விற்கக் கூட, புதுப்பித்துக் கொள்ள, புதிய கட்டடம் கட்டிக்கொள்ள, அவர்களுக்குக் குடியிருப்பு மனை அனுபோகதாரர்கள் சட்டம் கொண்டுவரப்பட்டு, மணலி கந்தசாமி போன்ற மாபெரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எல்லாம், பலபேருடைய ரத்தம் சிந்தியும் கிடைக்காத இந்தத் திட்டம், கருணாநிதி சிந்திய பேனாவினுடைய ஒரு துளி மையினால் கிடைத்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்று பாராட்டிப் பேசிய அந்தத் திட்டத்தால் மனை பெற்றவர்கள் 1,75,000 பேர். அவர்களிலே தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்கள் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் பேர் பிற்படுத்தப்பட்டோர் 40 ஆயிரத்து 330 பேர். பிற வகுப்பினர் 32 ஆயிரத்து 123 பேர். இது 1971 ஆம் ஆண்டு.

முற்பகல் 11-40

அதே 1971 ஆம் ஆண்டுதான் தொழுநோய் இரவலர்கள் தெருவிலே திரிந்து அவர்களுக்கும் சங்கடம், மக்களுக்கும் சங்கடம் என்ற நிலையை மாற்றி அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டியது அரசின் கடமை என்ற திட்டத்தின்படி மறுவாழ்வு இல்லங்கள் 11 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு ஏறத்தாழ 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லங்களிலே வாழ்கின்றார்கள் என்றால், 1971 ஆம் ஆண்டு இந்த அரசு கொண்டுவந்த திட்டம்.



அதே 1971-ல், ஆதிதிராவிடர்களுடைய இட ஒதுக்கீடு (reservation) 16 விழுக்காடு என்பதை 18 விழுக்காடு ஆக உயர்த்தி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 என்று இருந்ததை 31 விழுக்காடாகவும் உயர்த்தினோம்.

அதே 1971 ஆம் ஆண்டு, பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.

அடுத்த 1972 ஆம் ஆண்டில்தான் தமிழகம் முழுவதும் கண்ணொளி வழங்குகின்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இலட்சக்கணக்கான ஏழை எளியமக்கள், கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்திலேயுள்ள ஏழைகள், பயன் பெற்றார்கள்.

அந்த 1972 ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழகத்தில், அந்த 1972-ல்தான் பல ஆண்டுகாலமாக இருந்த கோரிக்கை, அரசு அலுவலர்களுடைய கோரிக்கை ஒன்றை இந்த அரசு கவனித்து, இரகசியக் குறிப்பு முறை, ஒழிக்கப்பட்டு மீண்டும் 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியிலே நடைமுறைக்கு வந்து, 1990 ஆம் ஆண்டு மறுபடியும் அந்த இரகசியக் குறிப்பு முறையை இந்த அரசுதான் ஒழித்தது. முதலில் 1972 ஆம் ஆண்டு இரகசியக் குறிப்பு முறை ஒழிக்கப்பட்டபோது, இராஜாஜி மண்டபத்திலே அரசு அலுவலர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் எந்த அளவிற்கு அதைப் பாராட்டிப் பேசினார் என்பதையெல்லாம் நான் இங்கே விவரித்துச் சொல்ல விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஒரு பாராட்டினை அன்றைக்கு தந்தை பெரியார் அவர்கள் இந்த அரசுக்கு வழங்கினார்கள்.

1972-ல் 1,500-க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம். அதற்குப்பிறகு 1990-ல் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம், வரும் ஆண்டிலிருந்து 500 முதல் ஆயிரம் பேர்வரை மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம்

1973 ஆம் ஆண்டு கைரிக்ஷாக்களை அகற்றி, கம்யூனிசம் தழைத்தோங்குகின்ற மாநிலங்களிலேகூட இன்னமும் நிறைவேற்றப்படாத திட்டத்தை, கைரிக்ஷாக்களை ஒழிக்கின்ற திட்டத்தை நிறைவேற்றி, மாற்றுத் திட்டமாக இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) அரசும் இந்த அரசுதான்.

அந்த ஆண்டிலேதான் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். முதன்முதலாக பெண் காவலர்படை தமிழகத்திலே நியமிக்கப்பட்டதும் 1973 ஆம் ஆண்டிலேதான்.

1974 ஆம் ஆண்டிலேதான் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படுகின்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரு இலட்சம் வீடு கட்டப்படும் என்று கூறி 40,000 வீடுகள் கட்டப்பட்ட நிலையிலே ஆட்சி கலைக்கப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1974 ஆம் ஆண்டில்தான் கோயம்புத்தூரிலே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டிலேதான், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் இந்த ஆட்சியிலேதான் தொடங்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டிலேதான் கலப்புத் திருமண தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம் வழங்க வேண்டுமென்ற, அண்ணாவினுடைய கருத்தை ஏற்று; அதைத் தொடர்ந்து நடத்தி 1989 ஆம் ஆண்டு, கலப்புத் திருமண தம்பதிகளுக்கு 5000 ரூபாய் நிதி வழங்குவது என்று அறிவித்து நடைமுறைப்படுத்தி, 1996-ல அதை 10,000 ரூபாய் என்கின்ற அளவிற்கு உயர்த்தி, 1997-ல் அந்த கலப்புத் திருமணத்திலே இருவரில் ஒருவர், ஆணோ பெண்ணோ ஆதிதிராவிடர்கள் ஆக இருந்தால் அவருக்கு 20,000 ரூபாய் நிதி என்று அறிவித்திருப்பதும் இந்த அரசுதான்.

1974-ல் அரசு ஊழியர் இறந்தால் 10,000 ரூபாய் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்பதை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிவித்தது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு. அந்தத் திட்டம் 1989-ல் 40,000 ரூபாய் என்று ஆயிற்று.

முற்பகல் 11-45

1996-ல் ஒரு இலட்சம் ரூபாய் என்கிற அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள கல்லூரி மாணவர்களுடைய எண்ணிக்கை பற்றி திரு. அழகிரி எழுதிய கட்டுரையைக்கூடப் படித்தேன். படிப்பிற்காக, கல்விக்காக என்ன செய்தார்கள்? காமராஜருக்குப் பிறகு என்று கேட்டுள்ளார். நான் காமராஜரைக் குறை கூற மாட்டேன். அவர் செய்து முடித்த காரியங்கள், அல்லது அவர் செய்யத் தொடங்கிய காரியங்களை நிறுத்தாமல் தொடருவதே நாங்கள் காமராஜருக்குச் செய்கின்ற மரியாதைதான். (மேசையைத் தட்டும் ஒலி)



1966 வரையில், நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரையில் தமிழகத்திலே கல்லூரி மாணவர்களுடைய எண்ணிக்கை 94 ஆயிரம். நாங்கள் ஆட்சியை விட்டு, கலைக்கப்பட்டு இறங்கிய 1975 ஆம் ஆண்டு அந்த 94 ஆயிரம் கல்லூரி மாணவர்கள் என்பது 2 இலட்சம் கல்லூரி மாணவர்கள் என்ற நிலையை உருவாக்கினோம். (மேசையைத் தட்டும் ஒலி)

1967 வரையிலே இருந்த கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 92. 1975-ல் இருந்த கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 189.

பிறகு, அனாதைச் சிறுவர், மகளிர் மறுவாழ்வுத் திட்டம், ஆதரவற்ற மகளிர்க்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், கருணை இல்லங்கள் தொடங்கும் திட்டம், விதவை மறுமணத் திட்டம், இத்தனைத் திட்டங்களும் 1975-ல் தான் தொடங்கப்பட்டன.

1975-லேதான் மீனவ மக்களுக்கு சிங்காரவேலர் நினைவாக இலவச வீட்டுவசதித் திட்டம் தொடங்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் — 1929-வது ஆண்டு செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நம்முடைய அவைத் தலைவருடைய தந்தையார் P.T. ராஜன் அவர்களும், W.P. சவுந்தரபாண்டியனாரும் கலந்துகொண்ட அந்த மாநாட்டில் பெரியாரால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமான, பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் 1989 ஆம் ஆண்டு இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டது.

பிறகு 1989-ல் சபாநாயகம், I.A.S. தலைமையில் இரண்டாவது Police Commission அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1989-லேதான் நலிந்த பிரிவினருக்கு இலவச வேட்டி சேலை வழங்குகின்ற திட்டத்தைத் தொடங்கினோம். அதிலே ஒரு ஊரிலே கொடுக்கப்படவில்லை என்பதைச் சொன்னார்கள். அதற்குக் காரணமும் சொன்னார்கள். நல்ல வேட்டி சேலையாக இருப்பதால் எல்லோரும் கேட்கிறார்கள் என்பதையும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். 80 இலட்சம் பேருக்கு வேட்டியும், 70 இலட்சம் பேருக்குச் சேலையும் இப்போது தரப்படுகின்றது என்றால் அந்தத் திட்டத்தை 1989-லே இந்த அரசு அறிவித்தது.

1989-லே ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவாக மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம். ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்குள் இருந்தால் என்று தொடங்கி, 1997-ல் 24 ஆயிரம் ரூபாய் என்று அந்த வருமான வரம்பை உயர்த்தி நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும் இந்த அரசுதான்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியினுடைய நினைவாக மகப்பேறு நிதியுதவித் திட்டம் 1989 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றிச் செயற்படுத்தியதும் இந்த அரசுதான்.

மகளிருக்காக அரும்பாடுப்பட்ட மூவலூர் மூதாட்டியார் நினைவாக திருமண உதவித் திட்டம் 1989-லே தான் 5 ஆயிரம் ரூபாய் என்று தொடங்கி 1996-ல் 10 ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு 128 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த மூன்று ஆண்டுகளிலே மாத்திரம் 1 இலட்சத்து 28 ஆயிரம் பெண்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டிலே அதற்காக 70 கோடி ரூபாய ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1989 ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபோது அறிமுகப்படுத்தபபட்டு செயல்படுத்தப்பட்ட திட்டம்.

1989-லேதான அரசுப் பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு என்று அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு எல்லாம் கட்சிப் பணியிலேயே ஒதுக்கீடு என்கிறார்கள். அன்றைக்கு அரசுப் பணியிலேயே 30 விழுக்காடு ஒதுக்கீடு செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

1989-லேதான் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை தொடங்கபபட்டது. அதுவரையிலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று இருந்தது; தாழ்த்தப்பட்டோர் நலத் துறை என்று இருந்தது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று தனியாக தொடங்கப்பட்டதும் 1989-லேதான்.

அதுமாத்திரமல்ல, அந்த 1989-லேதான் அதற்காக இரத்தம் சிந்தி, குண்டடிப்பட்டு உயிரைத தத்தம் செய்தவர்களுக்கு எல்லாம் மரியாதை காட்டுகின்ற வகையிலே சிறப்பு அளித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற வகையில் தனி ஒதுக்கீடாக மிகவும் பிறபடுத்தபபட்டோருக்கு 20 சதவீதம் என்று அறிவித்ததும் இந்த ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11-50

அதே 1989 ஆம் ஆண்டுதான் வேலைவாய்ப்பு பதிவு முன்னுரிமைப்படி, இடைநிலை ஆசிரியர் நியமனத்தில் — பதிவு முன்னுரிமை — வேலைவாய்ப்பு அலுவலகத்திலே எப்படிப் பதிவு செய்திருக்கிறார்களோ அந்த முன்னுரிமையின்படி வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

இங்கே சொன்னார்களே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், எது எதற்கு எவ்வளவு ரூபாய், எது எதற்கு எவ்வளவு ரூபாய் என்று. அவையெல்லாம் இந்த ஆசிரியர்களுடைய வேலைவாய்ப்பிலும் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான், இவர்கள் சொன்னது சரியோ இல்லையோ, நம்முடைய பேராசிரியர் பதில் அளித்திருக்கிறார். அவற்றை விசாரிக்கலாம். அடிமட்டம் வரையிலே எங்கே ஊழல் இருந்தாலும் அதைக் களைய வேண்டியது இந்த அரசினுடைய பொறுப்பு.

பெருந்தலைவர் காமராஜரே சொல்லியிருக்கிறார். ஊழல் ஊழல் என்கிறார்களே, என்ன ஊழல்? திருவள்ளுவர் காலத்திலேயிருந்து ஊழல் இருக்கிறது என்று காமராஜரே சொல்லியிருக்கிறார். புத்தகம் இருக்கிறது. அவர் பேசிய பேச்சு. திருவள்ளுவர் காலத்திலேயிருந்து இலஞ்சம், ஊழல் இருந்துகொண்டுதான் இருக்கிறது, என்ன செய்ய முடியும் என்று பெருந்தலைவர் காமராஜரே கூறியிருக்கிறார். எனவே, பெருந்தலைவர் காமராஜராலேயே அகற்ற முடியாத அந்த ஊழலையும், இலஞ்சத்தையும் நாம் மேல்மட்டம் வரையிலே வராமல் பாதுகாத்துக் கொள்ளலாமே தவிர, கீழ் மட்டத்திலே நமக்குத் தெரியாமல் எங்கேயோ ஒரு மூலையில், ஒரு கோடியில் யாரோ ஒருவர், அவர்களாகத் தருகிற 5 ரூபாயோ, 10 ரூபாயோ வாங்குவதைத் தடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அவ்வளவு நீளத்திற்கு இந்தக் கையால் ஆகாதவர்களுக்குக் கையும் கிடையாது. அதையெல்லாம் கண்டுபிடித்துத் தடுப்பதற்குக் கையும் கிடையாது.

1991-1996-இல் 8,450 இடைநிலை ஆசிரியர்கள். இந்த 1991-இலேயிருந்து 5 வருஷம், இடைநிலை ஆசிரியர்கள் கடந்த கால ஆட்சியிலே 8,450 பேர்தான் நியமிக்கப்பட்டார்கள். அதில் எத்தனை கோடி ரூபாய் ஊழலாக, இலஞ்சமாகப் புரண்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால், 1996-க்குப் பிறகு இந்த 3 ஆண்டுக் காலத்தில் வேலைவாய்ப்புப் பதிவக முன்னுரிமைப்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 5 ஆண்டுக் காலத்திலே கடந்த ஆட்சியிலே — ஜெயலலிதா ஆட்சியிலே — 8450 பேர்.

இந்த 3 ஆண்டுக் காலத்திலே 31,108 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1989 இலே நெல்லையிலே மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்; சென்னையிலே தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்; சென்னையில் தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பலகலைக்கழகம்.

1989 இல் 8 ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை. அது இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டு 12 ஆம் வகுப்பு வரை இலவசப் பேருந்து பயணச் சலுகை.

1989-90 இல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி. 1989-90-இல் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி.

1990 ஆம் ஆண்டில் மலைவாழ் மக்களுக்கு ஒரு விழுக்காடு. தனி ஒதுக்கீடு Reservation-ல். 19 விழுக்காடு ஆக என்று இருந்ததை 18 விழுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டு ஒரு விழுக்காடு S.T.-க்கு மலைவாழ் மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். இந்தியாவுக்கே வழிகாட்டிய மாநிலம் தமிழகம் (மேசையைத் தட்டும் ஒலி) இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு அளித்தது.

1990-91 இல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வருவாய் வரம்புக்கு உட்பட்டு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி.

1996 இல் உள்ளாட்சித் தேர்தல், பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு. 2 பெண் மேயர் உள்பட 44,143 பதவிகளில் பெண்கள் உள்ளாட்சிகளிலே அமர்ந்திருக்கிறார்கள். 44 ஆயிரம் பேர் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே அமர்ந்திருக்கின்றார்கள்.

1996-97-க்குப் பின் மாநில, மாவட்ட அளவில் 10, 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு உயர் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்ற திட்டம்.

1996 இல் பட்டதாரி இல்லாக் குடும்ப மாணவர்களில் ஒவ்வொரு தொழில் கல்வியிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்கும். பட்டதாரியே இல்லாத குடும்பத்திலேயிருந்து, அது பிற்படுத்தப்பட்ட குடும்பமாக



இருந்தாலும் சரி, பிராமணர்கள் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும் சரி, அங்கே பட்டதாரியே இல்லை என்றால் அங்கிருந்து வருகின்ற ஒரு மாணவனுக்கு அவன் எடுக்கின்ற மதிப்பெண்களைப் பொறுத்து 10 மாணவர்களை மதிப்பெண் அடிப்படையில் பொறுக்கியெடுத்து அவர் விரும்புகின்ற தொழிற் கல்வி எதுவானாலும், மருத்துவக் கல்வியானாலும், என்ஜினியரிங் கல்லூரியானாலும், வேளாண்மையானாலும், சட்டப் படிப்பானாலும் அதிலே அவர்கள் சேர்வதற்கான அந்த உரிமை மாத்திரம் அல்ல; அதற்கான கல்விச் செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற திட்டம் அந்தத் திட்டம்.

முற்பகல் 11-55

1996 இல்தான் தமிழ் வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம்.

தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலைத் துறை புதிய அறிமுகம்.

1997-ல் உயர்கல்வித் துறை புதிதாக அறிமுகம்.

1998-ல் நெடுஞ்சாலைத் துறைக்கு அமைச்சகம்.

அதே 1998-ல் தகவல் தொழில்நுட்பத் துறை அறிமுகம்.

1997-ல் கிராமப்புற மாணவர்களுக்குத் தொழிற் கல்வியில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு. (மேசையைத் தட்டும் ஒலி). அதிலே நண்பர் மணி சொன்னதைப்போல, இருக்கின்ற குறைபாடுகளைக் களைவதற்காக சில முயற்சிகளை அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்றது.

1997-ல் சேலத்திலே பெரியார் பல்கலைக்கழகம்.

சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.

சென்னை மருத்துவக்கல்லூரி நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக நிலை உயர்த்தப்பட்டது.

1997-ல் 100 சமத்துவபுரங்கள் அமைக்க 35 கோடி ரூபாய் ஒதுக்கீடு. இதுவரை 16 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. வருகிற ஆண்டில் 17.5 கோடி ரூபாய் செலவில் மேலும் 50 சமத்துவபுரங்கள். பெரியார் நினைவு சமத்துவபுரங்களாக இவை எல்லாம் விளங்கும்.

1997 முதல் கடந்த இரண்டாண்டுகளில் தூர்வாரும் பணிகளுக்கு மாத்திரம் 58 கோடி ரூபாய், வெள்ளச் சேதங்களைத் தடுக்கவும், விவசாயிகள் பயனுறவுமான திட்டம், 1997-ல் பராந்தக சோழன் காலத்திலே என்று சொன்னாரே நம்முடைய பரிதி இளம்வழுதி,

அதைப்போல அந்தக் காலத்திலிருந்து தூர் வாரப்படாத இந்த ஆறுகள், வாய்க்கால்கள் எல்லாம் 58 கோடி ரூபாய்ச் செலவில் தூர் வாரப்பட்டன.

1997-98-ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். ஓர் உறுப்பினருக்கு ரூ. 25 இலட்சம். 1998-99-ல் அது 35 இலட்சம். இந்த ஆண்டு 50 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி).

1997-98-ல் நமக்கு நாமே திட்டம். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட இங்கே பாராட்டினாரே, அந்த நமக்கு நாமே திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் தனி ஒதுக்கீடு. 1998-99-ல் 10 கோடி ரூபாய், வரும் ஆண்டிற்கும் 10 கோடி ரூபாய்.

1997-98-ல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிமுகம். அதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு 52 கோடி ரூபாய். 1998-99-ல் 75 கோடி ரூபாய். வரும் ஆண்டிலும் 75 கோடி ரூபாய்.

1998 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத் துறை அறிமுகம். 8-10-1998-ல் தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழு அமைப்பு. 1998-ல் World Tel நிறுவன உதவியோடு தமிழகம் முழுவதும் 13,000 சமுதாய இணைய மையங்கள் — Community Internet Centres அமைக்கும் திட்டம்—ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற நிலையில். (மேசையைத் தட்டும் ஒலி).

1998-99-ல் Mini Bus திட்டம். அது நல்லமுறையில் செயல்படுகின்றது என்றாலும், நீதிமன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பால் எல்லா இடங்களிலும் செயல்பட முடியாத சூழ்நிலை.

இந்த ஆண்டு 1999-ல் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் சென்னையிலே தொடங்கப்பட்டு, ஆறு மாநகராட்சி மன்றங்களிலும் — சென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி, நெல்லை என்று எல்லா மாநகராட்சி மன்றங்களிலும் இது ஆரம்பிக்கப்பட்டது, கடந்த மாதம்தான் என்றாலும்கூட, இந்த ஒருவார காலத்தில், ஒரேநாளில், துறையினுடைய அமைச்சர் நேரு அவர்கள் நேரில் சென்றிருந்து இது ஆரம்பிக்கப்பட்டு, 6,000 மகளிர் இந்த சிறு வணிகக் கடன் திட்டத்தால் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கடன் வாங்கும்போதே ஒரு ரூபாய் வட்டி—அவர்கள் வேறு யாரிடமாவது வாங்கினால் 10% அல்லது 15% வட்டி தரவேண்டும். வெறும் ஒரு ரூபாய் வட்டிக்கு, 100 ரூபாய் வாங்கினால் 99 ரூபாய் கொடுப்பார்கள். மறுநாள் 100 ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மறுபடியும் கடன் வாங்கலாம் என்கின்ற



அளவுக்கு, அந்தக் கடனை வாங்கி, சிறு சிறு தொழிலை ஆரம்பிக்கலாம் என்கின்ற அளவுக்கு, ஒரு மகத்தான திட்டம். இவ்வளவும் 1969 முதல் இன்றுவரையில்—இந்த எளியோனால் (மேசையைத் தட்டும் ஒலி)—இந்த எளியோன் ஏற்றுக்கொண்ட பொறுப்பால்—தமிழகத்தில் வழக்கமான வளர்ச்சித் திட்டங்களன்னியில், புதியதாக சமுதாயத் திட்டங்களாக, பொருளாதார ஏற்றங்களுக்கான திட்டங்களாக அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை, இந்த 12 ஆவது நிதிநிலை அறிக்கையைப் படித்து, அதற்கான விவாதத்திற்குப் பதிலைக் கூறுகின்ற நேரத்தில் நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பகல் 12-00

இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களையும் நினைவுக் கூரவேண்டும். ஏனென்றால் கடந்த நான்கைந்து நாட்களில் நிதிநிலை அறிக்கை என்ற ஒன்று இங்கே வைக்கப்பட்டதே பலபேருக்கு மறந்துபோய்விட்டது. நான்கூட எண்ணினேன். தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதி பெற்று, மீண்டும் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு மறுபடியும் உறுப்பினர்களைப் பேசச் சொல்லலாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் இவ்வளவு சங்கடங்களுக்கு இடையிலும்கூட தங்களுடைய கடமையை ஆற்றவேண்டும் என்று எண்ணிய கண்ணியம் மிகுந்த உறுப்பினர்கள் அந்தக் கடமையை ஆற்றியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் பேசிய பேச்சுகளைப் படித்துப் பார்த்து நான் உணர்ந்துள்ள காரணத்தினால், இந்த அறிக்கையிலே என்னென்ன திட்டங்களைச் சொல்லியிருக்கிறோம் என்பதை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

எந்தத் திட்டங்களும் இல்லை என்று நம்முடைய நண்பர் உறுப்பினர் அழகிரி அவர்கள் ஒரு பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்.

450 கோடி ரூபாய் செலவில் 208 பாலங்கள் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

20 கோடி ரூபாய் செலவில் காரனோடை பாலம்.

12 கோடி ரூபாய் செலவில் கரூர் பாலம்.

43 கோடி ரூபாய் செலவில் தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரையில் சென்னை புறவழிச் சாலை.

36 கோடி ரூபாய் செலவில் மதுரை புறவழிச் சாலை.

92 கோடி ரூபாய் செலவில் கோவை புறவழிச் சாலை.

212 கோடி ரூபாய் செலவில் சென்னை மாநகரத்தில் ஆரச் சாலைகளை மேம்படுத்தும் பணி.

256 கோடி ரூபாய் செலவில் நபார்டு உதவியோடு ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்.

500 முதல் 1,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை. 1000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எஞ்சிய 301 கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை.

சாலைப் பராமரிப்புக்காக 270 கோடி ரூபாய்.

75,850 எக்டேர் பரப்பில் 96.73 கோடி ரூபாய் செலவில் காடு வளர்ப்பும் பணி.

50 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணி.

மேலும் இந்த ஆண்டு.

219 கோடி ரூபாய் செலவில் பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்.

8.94 கோடி ரூபாய் செலவில் நிலையூர் கால்வாய்த் திட்டம்.

16.79 கோடி ரூபாய் செலவில் மிருகண்டா நதித் திட்டம்.

23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த் தேக்கத் திட்டம்.

6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முக்கொம்பு பலப்படுத்தும் திட்டம்.

9.5 கோடி ரூபாய் செலவில் மாம்பழத்துறையார் திட்டம்.

26.52 கோடி ரூபாய் செலவில் 18 ஆம் கால்வாய்த் திட்டம்.

14.8 கோடி ரூபாய் செலவில் மீனவர்களுக்கு நாலாயிரம் வீடுகள் கட்டும் திட்டம்.

10 ஆயிரம் எக்டேரில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கப் புதிய திட்டம்.

40.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோட்டக் கலை உற்பத்திப் பொருட்களைச் சேமித்து வைக்க குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள்.

சென்னையில், கூவம் அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, தூர் வாரும் மிகப் பெரும் திட்டம்.



150 கோடி ரூபாய் செலவில் 10 நகராட்சிகளில் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த பொன் விழா ஆண்டு சிறப்புத் திட்டம்.

6,300 ஊரகக் குடியிருப்புகளுக்கு 450 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்யும் திட்டம்.

1,200 அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி பயிற்றுவிக்கும் திட்டம்.

உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் Tamil Virtual University அமைக்கும் திட்டம்.

14 வயது வரை அனைத்து சிறார்களுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கும் திட்டம்.

வாழ்வொளித் திட்டம்.

ஒரு இலட்சம் பேருக்கு இலவச கண் உள் ஆடி (Intra ocular Lens) வழங்குகின்ற திட்டம்.

தமிழக வரலாற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சி அமைக்கும் திட்டம்.

52.6 கோடி ரூபாய் செலவில் தீப்பிடிக்காத கல்நார் கூரை வீடுகள் 42,089 குடிசை வாழ் மக்களுக்குக் கட்டும் திட்டம். டெல்லியிலே தீப்பிடித்து எரிந்த பிறகு, டெல்லியிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து, இந்தத் திட்டத்தைப்பற்றி, நம்முடைய அதிகாரிகளிடத்திலே பேசி, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற இடத்தையும் பார்வையிட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றால், இந்தத் திட்டத்தின் பெருமையை நீங்கள் அறிந்து கொள்ளலாம் (மேசையைத் தட்டும் ஒலி) 52.6 கோடி ரூபாய் செலவில் தீப்பிடிக்காத கல்நார் கூரை வீடுகள் 42,089 குடிசை வாழ் மக்களுக்குக் கட்டும் திட்டம்.

**மனிதக் கழிவுகளை மனிதன் அகற்றும் இழிவைப் போக்கும் திட்டத்தின் தொடர்ச்சி.**

**நெசவாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்வு.**

தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை வரைய தனிக் குழு. இந்தக் திட்டத்தில் புதுக்கோட்டையைச் சேர்க்கவில்லை என்று தம்பி திருநாவுக்கரசும், கன்னியாகுமரியைச் சேர்க்கவில்லை என்று திரு. மணி அவர்களும் சொன்னார்கள். இரண்டு

மாவட்டங்களும் இதிலே சேர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையை அடுத்த ஒக்கியம்-துரைப்பாக்கத்தில் 37.5 கோடி ரூபாய் செலவில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் உருவாக்கும் திட்டம்.

சென்னையிலும், ஏனைய நகரங்களிலும் 6 கோடி ரூபாய் செலவில் குடிசையிலே வாழும் 30,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம்.

வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் இவற்றை ஒருசேர பள்ளியிலே வழங்க புதிய திட்டம்.

பிற்பகல் 12-05

தொடக்கப் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை இந்த ஆண்டு உருவாக்கும் திட்டம்.

மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளில் ஊக்குவிக்க புதிய சிறப்புத் திட்டம்.

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று 50 இலட்சம் ரூபாய் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படட செயல். (மேசையைத் தட்டும் ஒலி) இவை எல்லாம் அடங்கியுள்ளதுதான், 'எதுவுமே இல்லை' இந்த நிதிநிலை அறிக்கையிலே என்று வர்ணிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இருக்கின்றவை.

எடுத்த எடுப்பிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, பத்திரிகையாளர்கள் கேட்டபோது, 'உருப்படியாக ஒன்றும் கிடையாது' என்று அவர் சொன்னது பத்திரிகையிலே வந்தது; படித்துப் பார்த்தேன். அவர் என்னைவிட மூத்தவர் அல்ல என்றாலும்கூட தோற்றத்திற்கு என்னைவிட மூத்தவராகத்தான் தெரிவார். (சிரிப்பு) இந்த அவையிலே நல்ல அனுபவம் உள்ளவர். உருப்படியாக தெரியாவிட்டாலும்கூட, நாம் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், நான் இதில் ஏதோ கட்சியோ, அணியோ சேர்ப்பதாக யாரும் கருதக்கூடாது. நம்முடைய ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்திக்கொள்ள மாற்றார் தயாராக இருக்கின்றார்கள். எனவே, ஒவ்வொரு சொல்லையும் நாம் அளந்து சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன். சொல் ஒன்றுதான் கீழே உதிர்ந்தால் மறுபடியும் எடுத்து வாயிலே போட்டுக்கொள்ள முடியாது, பல் உதிர்ந்தால்கூட



மாற்றுப் பல் வைத்துக்கொள்ளலாம். ஆனால் சொல் உதிர்ந்தால் அதற்காக ஒரு மாற்றுச் சொல்லை வைத்துக்கொள்ள முடியாது. எனவே தோழமைக் கட்சிக் கூட்டணியிலே இருக்கின்ற எல்லோரும், எல்லா தொண்டர்களும், செயல் வீரர்களும், அவரவர்களும் மனம் சுணங்குகின்ற அளவிற்கான வார்த்தைகள் வெளிப்படாமல் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அப்படி வெளிப்பட்ட காரணத்தால் கடந்த காலத்திலே நாடாளுமன்றத் தேர்தலிலே நமக்கு ஏற்பட்ட அனுபவம், தொண்டர்களுடைய சோர்வினால் ஏற்பட்ட விளைவு என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அதனால்தான் இதைச் சொல்கிறேன் அல்லாமல் வேறல்ல

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி 'Business Standard' 10 ஆம் தேதி எழுதும்போது, அந்தப் பத்திரிகையில்—ஒரு நாளேடு அதிலே குறிப்பிடுகிறது — மாநிலங்களின் திட்ட நிதி ஒதுக்கீடு அளவை அதிகரிப்பதற்கு, 'Pant gets tough on hike in State Plan size' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் பின்வரும் கருத்தை Business Standard' அறிவிக்கிறது.

" Tamil Nadu has obtained a 17 per cent increase in Plan size for 1999-2000 over 1998-99". அதாவது, தமிழ்நாடு 1998-99 ஆம் ஆண்டைவிட 1999-2000 ஆண்டு திட்ட ஒதுக்கீட்டிற்கு 17 விழுக்காடு கூடுதலாகப் பெற்றுள்ளது.

"Yojana Bhavan sources said they were impressed by the fiscal management of the Tamil Nadu Government..."

நிதி ஆதாரங்களைக் கண்டறிந்து திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றுவதில் தமிழ்நாட்டின் திறமை பாராட்டத்தக்க முறையிலே உள்ளதாக (மேசையைத் தட்டும் ஒலி) திட்டக் குழு அலுவலகம் கருதுகிறது.

Yojana Bhavan என்றால் திட்டக் குழு அலுவலகம், அதற்கு இந்தியிலே உள்ள சொல் அது. இதை 'Business Standard' பத்திரிகை குறிப்பிடுகிறது.

Business Line' பத்திரிகையில், "40% of the Budgetary allocation in Tamil Nadu will go towards strengthening the economic infrastructure; 35% towards social sectors and the rest towards agriculture and rural development. The State expects a 6% average in State Development Product in 1997-98 and 1998-99".

தமிழ்நாட்டின் நிதி ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு பொருளாதாரக் கட்டமைப்பை பலப்படுத்தவும், 35 விழுக்காடு சமூக மேம்பாட்டுத் துறைகளுக்கும், எஞ்சியவை வேளாண்மை வளர்ச்சி, கிராம வளர்ச்சி ஆகிய துறைகளின் மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது. 1997-98, 1998-99 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சராசரி உற்பத்தி விகிதம் 6 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று 'Business Line' கூறியுள்ளது.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே விவாதத்தைத் தொடங்கி வைத்த என்னுடைய நண்பர், சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, வறுமைக்கோட்டைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்களே, வறுமைக்கோட்டினுடைய அளவு குறைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்களே. எங்கே இந்த விவரம் உங்களுக்குக் கிடைத்தது என்றவொரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். தமிழகத்தில் 1996-97 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை தற்போதுதானே வெளிவந்திருக்கிறது. அப்படியிருக்க 1997-98 ஆம் ஆண்டிற்கான வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் மக்கள்தொகையின் விவரங்களை அரசு எவ்வாறு கண்டுபிடித்து வழங்கியுள்ளது என்று கேட்டார். நான் அவருக்குத் தருகின்ற விளக்கம்—அவர் பதிலாக எடுத்துககொள்ளக்கூடாது, விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

Evaluation and Applied Research Department என்ற ஒரு துறை இருககிறது, அவருக்கும் தெரியும். அதாவது, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை.

பிற்பகல் 12 10

தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து அது வெளியிடுகிறது. அண்மையில் 1996-97ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை அத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது, திரு. ஞானசேகரன் அவர்கள் கூறியதைப்போல. 1997-98ஆம் ஆண்டிற்கு மாநில பொருளாதாரத்தில முக்கிய துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விரிவான ஆய்வுப் பணிகளில் அந்தத் துறை இப்போது ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக வருவாய், விவசாயம், வேலைவாய்ப்பு, சமூக நலம் போன்ற துறைகளின் செயலபாட்டினை ஆராய்ந்து அதற்கான வரைவு அறிக்கை (Draft Report) தயார் செய்யப்பட்டுவிட்டது.



Draft Report அந்த வரைவு அறிக்கையிலிருந்து எடுத்த விவரங்களதான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துத் துறைகளுக்குமான வரைவு ஆய்வுகளையும் மே மாத இறுதிக்குள் முடித்து ஜூன், ஜூலையில் வெளியிட இத்துறை திட்டமிட்டிருக்கிறது.

சமூக நலம் தொடர்பான ஆய்வில் மத்திய திட்டக் குழுவின் ஆய்வு முறைப்படி தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் National Sample Survey Organisation 50-வது சுற்றின் விவரங்களையும், மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, தனி நபர் வருமானம் போன்ற விவரங்களையும் கொண்டு தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் மொத்த மக்கள் தொகையின் விழுக்காடு கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வோர் தொகை கிராமப் பகுதிகளில் 1993-94-ல் 32.48 விழுக்காடாக இருந்து, 1997-98-ல் 24.72 விழுக்காடாகவும், நகரப் பகுதிகளில் 39.77 விழுக்காடாக இருந்து 32.70 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. மொத்தத்தில் தமிழகத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் தொகை 1993-94 ஆம் ஆண்டில் 35.03 விழுக்காடாகவும் 1996-97 ஆம் ஆண்டில் 30.73 விழுக்காடாகவும் இருந்து 1997-98-ல் 27.58 என்ற விழுக்காடாகக் குறைந்துள்ளது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு அன்றைக்கும் தெரிவித்தேன், இன்றைக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஞானசேகரன் அவர்கள் இன்னொன்றையும் கேட்டார். மூலதனக் கணக்கிலே திட்டச் செலவு குறைந்துவிட்டதா என்ற ஒரு பிரச்சினையை எழுப்பினார். 1998-99 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை குறைந்ததற்கு, மூலதனச் செலவுத் திட்டங்களில் செலவு குறைந்ததுதான் காரணம் எனற ஒரு பிரச்சினையை அவர் எழுப்பினார். 1998-99 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 876.67 கோடி ரூபாயிலிருந்து 1998-99 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 235.73 கோடியாக, அதாவது 640.94 கோடி ரூபாய் குறைந்துள்ளது. உண்மை. இதில் மூலதனச் செலவில் ஏற்பட்டுள்ள குறைவு 404 கோடி ரூபாய். இதற்கான முக்கிய காரணங்கள், விவசாயிகளுக்கு

இலவச மின்சாரம் வழங்கியதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அரசின் பங்குத் தொகையை கூடுதல் மானியமாக வருவாய்க் கணக்கில் மாற்றி அமைத்ததால் மூலதனக் கணக்கில் 314 கோடி ரூபாய் குறைந்துள்ளது. இது தவிர, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படவுள்ள சாலைத் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் இதுவரை கிடைக்காததால், அந்தத் திட்டத்திற்காக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட 70 கோடி ரூபாய் என்பது திருத்த மதிப்பீட்டில் 18 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.

கல்வி, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், சமூகப் பாதுகாப்பு நலன் போன்ற மற்ற இனங்களில் மூலதனச் செலவிற்கு திருத்திய மதிப்பீட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வருவாய்க் கணக்கிலே பற்றாக்குறை 23 கோடி ரூபாய் குறைந்துள்ளது. பொதுக் கணக்கிலே உபரி 359 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக ஒட்டுமொத்தப் பற்றாக்குறை திருத்திய மதிப்பீட்டில் 640.94 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது என்பதை நான் விளக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 12-15

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வினுடைய தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் திருத்த மதிப்பீட்டில் குறைவதற்கு என்ன காரணம், வரவு கணக்கில், என்ற ஒரு வினா எழுப்பினார். அவர் அதை ஒரு தாக்குதல் கணையாகத் தொடுக்காமல் ஒரு விளக்கம் பெறுவதற்காகக் கேட்டார். வருவாய் கணக்கில் 1998-99-ல் திட்ட மதிப்பீடு 15,039 கோடி ரூபாய் என்று கடந்த ஆண்டு குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அது திருத்த மதிப்பீட்டில் 14,198 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது என்றும், அதற்கு முக்கிய காரணம், மத்திய வரிகளின் பங்கும் மாநிலத்தின் சொந்த வரி வருவாயும் 1998-99 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் குறைந்துவிட்டதே, என்ன காரணம் என்றும் அவர் கேட்டார். 1997-98 ஆம் ஆண்டின் கணக்கின்படி மத்திய வரிகளின் பங்காக நமது மாநிலத்திற்கு ரூபாய் 2,728 கோடி ரூபாய் கிடைத்தது. 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய வரிகளின் பங்கு ரூ. 2,920 கோடியாக இருக்குமென்று கடந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டில் நாம்



குறிப்பிட்டிருந்தோம். நமது மாநிலத்தின் நிதிநிலை அறிக்கை கடந்த ஆண்டு, மத்திய அரசு நிதிநிலை அறிக்கை அளிப்பதற்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டதால், அந்தச் சமயத்தில் மத்திய அரசும், மத்திய திட்டக் குழுவும் தெரிவித்தபடி மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்தன. ஆனால், மத்திய அரசு அதன் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது இன்னும் குறைத்து மாநில அரசின் பங்கு ரூபாய் 2,413 கோடியாகக் குறைத்து மதிப்பிட்டது. இவ்வாண்டு மத்திய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையின்படி நமது மாநிலத்திற்கு 1998-99-ல் ரூ. 2,408 கோடி மத்திய வரிகளில் நமது மாநிலத்தின் பங்காக மத்திய அரசு தெரிவித்திருந்தது. மத்திய அரசின் வரி வசூல் குறைவும், தாமாகவே முன்வந்து வருமானத்தைத் தெரிவிக்கும் திட்டத்திலும், VDIS, மாநில அரசின் பங்கு முழுமையாக கடந்த ஆண்டிலேயே அளிக்கப்பட்டதே இக்குறைவுக்குக் காரணம். கடந்த ஆண்டிலே அளித்துவிட்டார்கள். அதனால், இந்த ஆண்டு அவர்கள் அளிக்கவில்லை. அது இந்தக் குறைவுக்கு ஒரு காரணம். மாநில சொந்த வரி வருவாய் 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 10,024 கோடியாக மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், திருத்திய மதிப்பீட்டிலே 9,625 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கியமான காரணம், விற்பனை வரியின் குறைவான வசூலாகும். வரிச் சலுகைகள் வழங்கியவை, மாநிலத்தில் மோட்டார் வண்டிகள், ஜவுளி தொழில் ஆகிய தொழில்களில் நிலவும் மந்த நிலை ஆகியவற்றின் காரணமாக விற்பனை வரி, நுழைவு வரி வசூல் குறைந்துள்ள காரணத்தால் திருத்திய மதிப்பீட்டில் குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டு நிலவரி தள்ளுபடி, கேளிக்கை வரி குறைப்பு ஆகியவற்றின் காரணமாக 1998-99 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் வரவுகள் குறைவாகவே இருக்குமெனக் கருதப்படுகிறது.

இன்னொன்றையும் கேட்டார்கள். செலவுக் கணக்கிலே குறைவு ஏன் என்று திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள். அதைப் பார்க்கும்போது, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்களை மத்திய அரசு நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் நடப்ப நிதியாண்டில் அவர்களுக்குத் திருத்திய ஊதியம் வழங்கப்படவில்லை. தற்போது முடிவெடுக்கப்பட்டு, வரும் நிதியாண்டில்தான் அவர்களுக்குத் திருத்திய ஊதியம் வழங்கப்படும். ஆகவே, அதற்கான செலவினத்தில் நடப்பு நிதியாண்டில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

221073
D
V211,31 N 99
NC19.673

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை இந்த ஆண்டு 1,000 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவருக்கு நான அளித்த விளக்கத்தைப்போல, முந்தைய ஆண்டுகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கூடுதலாக வழங்கப்பட்ட உதவித் தொகையைச் சரிக்கட்டியதால், 1998-99 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் ரூ 500 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசோடு இணைந்து செயல்படுத்தும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு மிகவும் குறைந்துள்ளது. இதனால், இத்திட்டங்களுக்கு தேவைப்படும் மாநில அரசின் பங்கும் குறைந்துள்ளது.

இந்த பட்ஜெட் விவகாரங்கள், இதிலே தொகையைப் பற்றிய கணக்குகள், புள்ளிவிவரங்கள், இவை பற்றி 5, 6 பேருக்குத்தான் இதிலே அதிக கவலை, அக்கறை அதைப் பற்றிய விவாதங்கள். இங்கேகூட நேற்றும் இன்றும் நானும் திரு. சொக்கர் அவர்களும் இந்த விஷயங்களை அடிக்கடி பரிமாறிக் கொண்டிருக்கிறோம். நானும், நிதித் துறைச் செயலாளர் அவர்களிடத்திலே இதைப்பற்றி விளக்கம் கேட்கிறேன். அந்த விளக்கத்தை அவருக்குச் சொல்கிறேன், அதிலே அவர் ஆறுதல அடைகிறார், ஒத்துக்கொள்கிறார். இதற்காகத்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த பட்ஜெட் என்றால் என்ன, திட்டம் என்றால் என்ன, டெல்லிக்குச் செல்கிறோம், 5 ஆயிரம் கோடிக்குத் திட்ட ஒதுக்கீட்டிற்கு டெல்லி தந்துவிட்டது என்றதும், உடனே ஆஹா 5 ஆயிரம் கோடி கையிலே நான் வாங்கி வந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு பாராட்டுகிறார்கள். அது அல்ல 5 ஆயிரம் கோடி செலவு செய்துகொள்ள ஒப்புதல்தான், 5 ஆயிரம் கோடி தந்துவிடுவதில்லை. அதற்கு என்ன resource இருக்கிறது, என்ன அடிப்படையிருக்கிறது, அவர்களிடத்திலே நிதி ஆதாரம் இருக்கிறது என்பதைக் கேட்டு, அவர்கள் அதற்குமேல் ஒதுக்குகின்ற மானியங்கள், கடன் தொகை இவையெல்லாம் சேர்த்துத்தான் 5 ஆயிரம் கோடி. முழுமையாக 5 ஆயிரம் கோடி அல்ல அது. அதைப்போல பல நுணுக்கங்கள் பட்ஜெட் விவகாரத்திலே இருக்கிற காரணத்தால், சட்டமன்றத்திலே உள்ள அக்கறை உள்ள உறுப்பினர்களுக்கு, பட்ஜெட்டை படித்துவிட்டுப் பேச வேண்டும், பட்ஜெட்டிலே இருக்கின்ற விவரங்களைப் புரிந்துகொண்டு பேச வேண்டும், நாமும் ஒரு காலத்திலே ஆட்சி பொறுப்புக்கு வரக்கூடும்.



பிற்பகல் 12-20

அப்போது வருகிற நேரத்தில் அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும். எனவே, நாம் இப்போதே நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்ற அந்த அக்கறையோடு இருக்கின்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் இதற்காக ஒரு பயிற்சி நடத்த வேண்டுமென்ற விருப்பத்தை நான் ஏற்கெனவே வெளியிட்டு இருக்கிறேன். அதை எப்பொழுது வைத்துக்கொள்ளலாம் என்று நண்பர் சொக்கரும் மற்றவர்களும் என்னிடத்திலே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நேற்றையதினம்கூட நிதித் துறைச் செயலாளரிடத்திலே அதுபற்றிப் பேசி இருக்கிறேன். யார் யாருக்கு விருப்பம் இருக்கிறதோ, அவர்களுடைய பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு எந்தத் தேதியிலே அந்த நிகழ்வை வைத்துக்கொள்ளலாம் என்று விரும்பினால், அதன்படி நண்பர் சொக்கர் அவர்களை—எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு, அவரையே — அந்தக் காரியத்திற்காக Convenor-ஆக நியமிக்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர் அனுமதிப்பார் என்று கருதுகின்றேன்; (குறுக்கீடு) அனுமதி தருகின்றார். திரு. சொக்கரே Convenor-ஆக இருந்து அந்தக் கூட்டத்தைக் கூட்டி, யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்ற பட்டியலை நிதித் துறைச் செயலாளரிடம் தந்தால், ஒரு நாள் அதற்காக ஒதுக்கி இராஜாஜி மண்டபத்தில் அதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டி, யார் யாருக்கு பட்ஜெட்டிலே என்னென்ன சந்தேகங்கள் வருகிறதோ—Technical Points கணக்கு வழக்குகள், அதிலே யார் யாருக்கு என்ன சந்தேகங்கள் வருகிறதோ,— அவற்றை எல்லாம் கேட்டு, அதற்கு நிதித் துறைச் செயலாளர் பதில் சொல்வார்.

நிதித் துறைச் செயலாளரைவிட இன்னும் விஷயம் தெரிந்த நம்முடைய அப்துல் லத்தீப் போன்றவர்களும் உங்களுக்கு விளக்கம் அளிப்பார்கள்; இப்படி அனைவரும் விளக்கம் அளிக்கின்ற வகையிலும், நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் எப்போதுமே பட்ஜெட்டிலே பேசும்போது ஆழ்ந்த அனுபவத்தோடு பேசக்கூடியவர்; அவர்கள் எல்லாம் கலந்து கொண்டு மற்றவர்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையிலும் இந்த ஆலோசனைக் கூட்டம், விவரம் அறிகின்ற கூட்டம், விளக்கம் தருகின்ற கூட்டம் நடைபெறும் ஒரு தேதியை நீங்களே நிர்ணயித்து, நிதித் துறைச் செயலாளர் அவர்களோடு கலந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு மெத்த மகிழ்ச்சியை நான்

தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தப் பயிற்சி வகுப்பிலே நான் மாணவராகத்தான் இருக்க விரும்புகிறேன்; Convenor-ஆக இருக்க விரும்பவில்லை. ஆகவே, Convenor-ஆக நிதித் துறைச் செயலாளர் அவர்களே இருந்து, நான் மாணவனாக அங்கு பயிற்சி பெற நீங்கள் வாய்ப்பு கொடுத்தால் போதுமானது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாணவர்கள் கழகங்களுக்கு அமைப்பாளர்கள் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் அவர்களே, அடுத்து, மானிய உதவிகள்—இதைத்தான் நம்முடைய சுப்பராயன் அவர்களுக்கு, சுப்பராயன் அவர்களுக்கு மாத்திரமல்ல, — சொக்கரே கூட ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்; படித்துப் பார்த்தேன். — மானிய உதவிகளை அளித்ததில் இந்த அரசு மிகவும் ஆடிப் போய் இருக்கிறது; என்ன திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று இந்த மானியங்களைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். இந்த மானியங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதறகாகவே மத்தியிலே ஒரு சர்க்கார் இப்போது வந்திருக்கிறது. அதற்கு ஏதோ ஒரு வகையிலே உதவிகரமாக நீங்கள் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் நான் கேட்கிறேன், இந்த மானியத்திலே எதைக் குறைக்கலாம்? இதைத்தான் தொங்கு சதை என்றார் நமமுடைய சுப்பராயன் அவர்கள்: இந்தத் தொங்கு சதையிலே எந்தச் சதையை கழிக்கலாம என்பதை நான் படித்துக் காட்டுகிறேன்; தயவுசெய்து சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள் படித்து விடுகிறேன்.

பொது விநியோகத் திட்டத்திற்காக உதவித்தொகை நிதியொதுக்கம் ஆயிரம் கோடி ரூபாய்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டண இழப்பீட்டை ஓரளவு சரிக்கட்ட மானியம் 250 கோடி ரூபாய். இஃதன்னியில் மின் வாரியத்திற்கு 1900 கோடி ரூபாய் இலவச மின்சாரத்துக்காக ஆகிறது. அதிலே அரசு கொடுக்கின்ற மானியம் 250 கோடி ரூபாய்.

சத்துணவுக்கு ஏற்படுகின்ற செலவுக்கு, மாத்திரம் 532 கோடி ரூபாய்.

நிதி உதவி பெறும் அரசுசாரா தொடக்கப் பள்ளிகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கு மானியம 947 கோடி ரூபாய்.

அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் 192.15 கோடி ரூபாய்.



அரசு உதவி பெறும் தனியார் பல்தொழில் பயிற்சி பயிலகங்களுக்கு மானியம் 22.77 கோடி ரூபாய். மருந்துகளுக்காக ஒதுக்கீடு 115 கோடி ரூபாய்.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய்.

கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி மானியம் 72 கோடி ரூபாய்.

மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண அனுமதி 80 கோடி ரூபாய்.

மாணவர்களுக்குச் சீருடைகள் 56 கோடி ரூபாய்.

மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் 25 கோடி ரூபாய்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்திற்கு 70 கோடி ரூபாய்.

முதியோர் உதவித் தொகை மற்றும் பிற ஓய்வூதியங்கள் 141 கோடி ரூபாய். இன்றைக்கு டில்லியிலே அறிவித்து இருக்கிறார்களே, முதியோர்களுக்கெல்லாம் 10 கிலோ அரிசி என்று; அதை ஏற்கெனவே தமிழ்நாட்டிலே நாம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம்; அந்தத் திட்டத்திற்காக 141 கோடி ரூபாய்.

சிறார்களுக்கு, சத்துணவு சாப்பிடும் சிறார்களுக்கு, வாரம் ஒரு முட்டை வழங்குவதற்கு 35 கோடி ரூபாய்.

பிற்பகல் 12-25

| | |
|---|---|
| தொழில் மானியங்கள் | 50.85 கோடி ரூபாய் |
| தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு இழப்பீட்டு மானியம் — அவர்கள் அதிக விலை கொள்முதலுக்கு கொடுக்க வேண்டுமென்பதால், அந்தப் போராட்டத்தைத் தடுக்க இழப்பீட்டு மானியம் தந்தது | 15.00 கோடி ரூபாய் |
| கதர் தள்ளுபடி மற்றும் தமிழ்நாடு கதர் மற்றும் கைத்தொழில் வாரியத்திற்கான மானியம் | 17.75 கோடி ரூபாய் |

| | |
|---|---|
| வேளாண் மற்றும் கால்நடை பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள் | 67.00 கோடி ரூபாய் |
| இலவச வீட்டுமனைக்கான ஒதுக்கீடு | 36.68 கோடி ரூபாய் |
| படிப்புதவித் தொகை | 85.14 கோடி ரூபாய் |

எனவே, இந்த இனங்களுக்கான மொத்த ஒதுக்கீடு சுமார் 5,500 கோடி ரூபாய்.

இதிலே, எந்த இனத்தை மானியம் வழங்காமல் நடத்தலாம் என்பதைச் சொன்னால், அந்த தொங்கு சதையை உடனே வெட்டியெறிய நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) சொல்லிவிட்டு நீங்கள் வெளியே போக முடியுமா என்பதை மாத்திரம் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

கிராம மக்களுக்கான திட்டங்கள் எதுவும் இல்லை என்று மெத்த வருத்தத்தோடு, ஆதங்கத்தோடு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிலவற்றைப் பாராட்டிவிட்டு, ஆனால் கிராம மக்களைத் தொடக்கூடிய எந்தத் திட்டமும் இல்லை; அவர்களை வாழ வைக்கக்கூடிய திட்டம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் 65 விழுக்காடு ஊரகப் பகுதிகளில் வாழ்ந்து வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய நலனைக் கருதி அரசு பல்வேறு துறைகளின் வாயிலாகச் செயல்படுத்தும் திட்டங்களுக்காக 3,755 கோடி ரூபாயை வரும் ஆண்டில் செலவிடவிருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மை, மீனளம், கால்நடை போன்ற துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்த 1,051 கோடி ரூபாயும், கைத்தறி மற்றும் துணி துறையின்கீழ் திட்டங்களைச் செயல்படுத்த 153 கோடி ரூபாயும், கதர் மற்றும் கிராமத் தொழில்களில் 21 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (EAS), ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT), இந்திரா வீட்டு வசதித் திட்டம் (IAY) போன்ற மத்திய அரசும், மாநில அரசும்



ஒருங்கிணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கும், மாநில அரசு மாத்திரம் செயல்படுத்தும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கும் ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கும் நிதிப் பகிர்வு போன்றவற்றிற்கும் 1,538 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

கிராமப் பகுதிகள் பயன் அடையும் வகையில் பாசன வசதித் திட்டத்திற்காக வரும் ஆண்டு 335 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

இதேபோல் நபார்டு வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப்படும், ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு இணையத்தின் மூலம் சாலைகளுக்காகவும், கிராமச் சாலைப் பணிகளுக்காகவும் வரும் ஆண்டில் 327 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் 450 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 6300 குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு வன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 200 கிராமங்களின் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் 97 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஆக மொத்தம் ரூ. 3,755 கோடியை பல்வேறு திட்டங்களுக்கும் வருமாண்டில் ஊரகப் பகுதி மக்களுக்காக இந்த அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது.

இதே அடிப்படையில் நகர்ப் பகுதிகளில் செயல்படுத்தும் திட்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால்; அரசு 1,286 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துறைகளின் வாயிலாக வரும் நிதியாண்டில் பல திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது.

மொத்தத்தில் இந்த வகையிலே அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடான 5,041 கோடி ரூபாயில் 75 விழுக்காடு கிராமப் பகுதி மக்களின் நலனுக்காக செலவிடப்படவிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை தவிர, அரசு சமூக நலன், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், கல்வி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், நுகர்பொருள் வழங்கல் போன்ற துறைகளில் செயல்படுத்தும் திட்டங்களின் பெரும்பாலான பலன்கள் ஊரகப் பகுதி மக்களுக்குத்தான் செல்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

வேலைவாய்ப்பைக் குறித்து ஞானசேகரன் அவர்களும், சுப்பராயன் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி சில விவரங்களைச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை (Evaluation and Applied Research Department) இயக்குநரின் ஆய்வின்படி கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சுமார் 11 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4.22 இலட்சம் வேலைவாய்ப்பு வேளாண்மைத் துறையிலும், 6.78 இலட்சம் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு, தொழில் மற்றும் சேவைத் துறைகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு நம் நாட்டைச் சேர்ந்த மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை அதிக அளவில் பெறுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை அரசு உருவாக்கி வருகிறது. அரசின் இந்த முயற்சிகளால் தொழில்களுக்கும் கட்டமைப்புப் பணிகளுக்கும் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு முன்னேறியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 48,497 கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. இம்முதலீடுகளால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும். உதாரணமாக, மஹிந்தரா மோட்டார் வண்டிகள் துணை பாகங்கள் தொழிற்சாலை அமைப்பதால் 3,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், இவற்றைச் சார்ந்த தொழில்களில் 10,000 பேருக்கு வேலைவாயப்பும் உருவாகும். திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் 500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், அதைச் சார்ந்த தொழில்களில் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். 'World Tel' நிறுவனத்துடன் அமைக்கப்படவிருக்கும் இணைய மையங்களால் சுமார் 1.50 இலட்சம் பேருக்கு நேரடியாகவும் இவற்றைச் சார்ந்த தொழில்களிலும் வேலைவாய்ப்பு உருவாகும்.



கடந்த 2 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் மூலம் 4 இலட்சம் பேருக்கு ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை தவிர, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களின்கீழ் 1,902 இலட்சம் மனித நாட்கள் (Man Days) வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, மகளிர் சிறு கடன் உதவி திட்டத்தின் மூலம் கார்ப்பரேஷன்களில் மாத்திரம் இதுவரை 6,000 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றார்கள். மேலும், எல்லா நகரங்களுக்கும், மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தும்போது இலட்சக்கணக்கான பெண்களுக்கு இந்த வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதிலே நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் கூறிய கருத்து, தொடர்ந்து அவர் சொல்லிக்கொண்டே வருகிறார், பத்திரிகையிலும் அறிக்கை விடுகிறார். நேற்றைக்கும் இங்கே அழுத்தம்திருத்தமாகச் சொன்னார். 'இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம்' ஒன்றை அமைக்கவேண்டுமென்று கேட்டு, கடைசியாக குறைந்தபட்சம் அதற்காக ஒரு Committee--யாவது போடுங்களேன் என்று சொன்னார். Committee போடுவதும், பிரச்சினையின் தலையிலே ஒரு கல்லைப் போடுவதும் ஒன்றுதான் என்று பேராசிரியர் கல்கி ஒருமுறை சொன்னார். (சிரிப்பு) அதனால் அப்படிப்பட்ட Committee அல்ல, உள்ளபடியே அதை ஆராய்ந்து, நல்ல கருத்தைச் சொல்லி, அந்த இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனத்தை அமைப்பதற்கான ஒரு Committee-ஐ இந்த அரசு நிச்சயமாக அமைக்கும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூடப்பட்ட தொழிற்சாலைகள்பற்றி இங்கே வேதனையோடு பேசப்பட்டது. நாள் அவர்களுடைய கவலையோடு என்னுடைய கவலையையும் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனாலும், இதற்கான காரணங்கள் என்ன? அரசா, அல்லது தனியாரா? தொழிலாளர்களா? வேறு என்ன நிலை? என்பதைப் பற்றியெல்லாம் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பல நேரங்களிலே இங்கே விவரமாக கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். கடந்த 3 ஆண்டுகளில் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அதனால் 23 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால்,

அதே மூன்றாண்டுகளில் 5,743 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு 98,883 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதை நினைத்து அதை மறந்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய கஷ்டத்தையும் போக்கவேண்டும். மேற்கு வங்கத்திலே மாதம் 500 ரூபாய், மூடப்பட்ட ஆலைகளிலுள்ள தொழிலாளர்களுக்குத் தரப்படுவதாக பேராசிரியர் தீரன் அவர்கள் நேற்றையதினம் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி விசாரித்து, எப்படி அது வழங்கப்படுகிறது என்பதை நான் அறிந்துகொள்ள இருக்கின்றேன். சுப்பராயன் அவர்களும் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள் என்று கருதுகின்றேன். மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்கு மாத்திரம் மேற்கு வங்கத்தை ஒப்பிட்டுக் காட்டுகின்றவர்கள், பேருந்துக் கட்டணத்திற்கு ஒப்பிட்டு காட்டக் கூடாதா? (சிரிப்பு) 25 காசு, 30 காசு வசூலிக்கிறார்கள் மற்ற மாநிலங்களில். இங்கே 18 காசு வசூலித்து, இன்னும் அதிகமாக பேருந்துகளை வாங்க முடியாத பிரச்சினைக்கு ஆட்பட்டிருக்கிறோம். இங்கே உட்கார்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், எங்களுக்கு இரண்டு பேருந்துகள் போதாது. இன்னும் ஒரு பேருந்து கொடுங்கள் என்று யாராவது கேட்டால் போதும், இந்தப் பக்கத்திலே உள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் மேசை உடைகின்ற அளவுக்கு மேசையைத் தட்டுகின்றார்கள். (சிரிப்பு) ஆனால் ஒரு காசு, இரண்டு காசு பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இப்படியெல்லாம் பீடிகை போடுவதால் ஒருவேளை உயர்த்தப்போகிறோம் என்று யாரும் அச்சப்படத் தேவையில்லை. நான் பேருந்து கட்டணத்தை உயர்த்துவதாகவும், இல்லை, தற்காலிகமாக, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

நாமும்கூட பண்டிகைக் காலங்களிலே இந்தத் தொழிலாளர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம். பண உதவியும் செய்து வருகின்றோம். இருந்தாலும், மேற்கு வங்கத்திலே எந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன, தனியார் தொழிற்சாலையா, அரசுத் தொழிற்சாலையா என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதைப்பற்றி எல்லாம் அறிந்த பிறகு, அதைப்பற்றி கூறலாம் என்று இருக்கின்றேன்.

பிற்பகல் 12-35

அரசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே, அரக்கோணம் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 1½ இலட்சம், 2 இலட்சம் ரூபாய்



என்று எல்லா தொழிலாளர்களுக்குத் தரப்பட்டு, அவர்கள் தாங்களாகவே பணியிலிருந்து ஒதுங்கிக்கொண்டு, அந்த அரக்கோணம் தொழிற்சாலை இப்போது ஏலம் விடப்பட்டு அந்த நிலத்தை வேறு ஏதாவது தொழில் வளாகத்திற்குக் கொடுக்கலாம் என்கின்ற எண்ணத்தோடு ஏலம் விடுகின்ற நேரத்திலேகூட அ.தி.மு.க.-வைச் சேர்ந்த ஒரு தொழிற் சங்கத் தலைவர் அதற்கும் தடை பெறுவதற்காக நீதிமன்றம் சென்றிருக்கிறார். அதற்கும் இடைக்காலத் தடை கிடைத்திருக்கின்றது. எனவே, தொழிலாளர்களுடைய பிரச்சினையை இந்த அரசு நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரப்பரைப்பற்றி இங்கே பேசப்பட்டது. அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழில் நசிந்து போவதை நம்முடைய மணி அவர்களும் மோசஸ் அவர்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள். மோசஸ் அவர்கள் எப்போதும் மென்மையாகப் பேசக்கூடியவர்கள். இன்றைக்கு வரவில்லையா? (குறுக்கீடு) பிரச்சினைகளை எழுப்புகின்றவர்கள் பதில் சொல்லும்போது வந்திருந்தால் அவர்களுக்கான விளக்கங்கள் கிடைக்கும். இரப்பர் தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலே நலிவடைகின்ற நிலையிலே இருப்பதை நம்முடைய மணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அரசு இரப்பர் கழகத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில், 2,199 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள். அதிலே பால் வெட்டும் தொழிலாளர்கள் 1,427 பேர், களப் பணியாளர்கள் 506 பேர், தொழில்கூடத் தொழிலாளர்கள் 128 பேர், மற்றவர்கள் 138 பேர். இவர்கள் தவிர அரசு இரப்பர் கழகத்திலே மொத்தம் 323 பணியாளர்கள் இருக்கிறார்கள்.

இரப்பர் விலை கடந்த இரண்டு ஆண்டுகளாக இறங்குமுகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு முக்கியமான காரணம், வெளிநாடுகளிலிருந்து இரப்பர் இங்கே ஏற்றுமதி செய்யப்படுவது ஒன்று. மேலும் பாலியூரித்தேன், ஒரு முறை உபயோகிக்கப்பட்ட டயர் ஆகியவற்றை இறக்குமதி செய்வதாலும், இயற்கையான இரப்பருடைய விலை குறைய நேரிடுகிறது. அரசு இரப்பர் கழகம் 1996-97-ல் 2,591 டன் இரப்பரும், 1997-98-ல் 2,692 டன் இரப்பரும், 1998-99-ல் 2,978 டன் இரப்பரும் உற்பத்தி செய்திருக்கின்றது. குறைவான உற்பத்தியை ஒன்றும் செய்யவில்லை. மேலும், மேலும் அதிகமாகத்தான் உற்பத்தியைச் செய்திருக்கின்றது. உற்பத்தி அதிகரித்த போதிலும், 1996-97 ஆம் ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் டன் இரப்பர் இங்கே இறக்குமதி செய்யப்பட்டுவிட்ட காரணத்தால்

இரப்பர் விலை மிகவும் குறைந்துவிட்டது. நாம் அந்த இறக்குமதியை நிறுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் காரணமாக இப்போது இரப்பர் இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கின்றது. என்றாலும்கூட, கேரள மாநிலத்தில் State Trading Corporation தன் கையிருப்பான 50 ஆயிரம் டன் இரப்பரை, சந்தையிலே மலிவாக விற்கத் தொடங்கிவிட்ட காரணத்தால், இறக்குமதியைத் தடை செய்தும்கூட இங்கே உள்ள இரப்பர் விலை அதிகரிக்கவில்லை என்ற செய்தியையும் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பர் தொழில் பூங்கா அமைக்க நான் முன் நின்று பணியாற்றுவேன் என்று இதே அவையிலே மணி அவர்களுக்கு உறுதியளித்திருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற் பூங்கா அமைக்க, தோவாளை வட்டம் செண்பகராமன்புதூரில் 200 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இரப்பர் தொழிற் பூங்காவிற்கான சாத்தியக் கூறு அறிக்கை கோட்டயத்திலே உள்ள மத்திய அரசு நிறுவனமான இரப்பர் கழகத்தால் தயார் செய்யப்பட்டு, அது வெகு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த இரப்பர் தொழிற் பூங்காவில் சுமார் 100 இரப்பர் தொழிற்சாலைகள் அமைய உள்ளன என்பதை நான் மணி அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இது இரண்டு கட்டத்திலே நிறைவேற்றப்படவுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் தொழிற் பூங்காவிற்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுத்தர உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவே, ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற இரப்பர் தொழிற் பூங்கா கன்னியாகுமரி மாவட்டத்தில் விரைவில் அமைய உள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 12-40

கைத்தறியாளர்களுடைய நிலையைப் பற்றி இங்கே சொன்னார்கள். அதிலும், நம்முடைய ஞானசேகரன் அவர்கள், அரிச்சந்திரா மயான காண்டத்திலே சந்திரமதி புலம்புவதைப்போல, 'கைத்தறியாளர்கள் கதறுகிறார்கள்; அவர்களெல்லாம் சோற்றுக்கு இல்லாமல் திண்டாடுகிறார்கள்; பிச்சை எடுக்கிறார்கள்' என்றெல்லாம் அவர் பேசியதைப் படித்துப் பார்த்ததைவிட நேரிலே அதைக் கேட்டதை, காதிலே கேட்டதை, உருக உருகப் பேசினார். அதைப்போலவே,



பலரும் கைத்தறியாளர்களுக்கு இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்பதைப்போன்ற கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறி இருக்கின்றார்கள்.

கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்களுக்கு 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் காப்பீட்டுத் தொகையை இந்த அரசு ரூ. 15,000-இல் இருந்து ரூ. 20,000 ஆக 1996-97 ஆம் ஆண்டில் உயர்த்தியது. வயது உச்சவரம்பை 58-லிருந்து 60 ஆக உயர்த்தியது. நடப்பாண்டில் இந்தத் தொகை ரூ. 35,000 ஆக உயர்த்தப்பட்டது. மேலும், வரும் நிதியாண்டில், இந்தத் தொகை ரூ. 40,000 ஆக உயர்த்தப்படும் என நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது, கைத்தறியாளர்களுக்காக. இதுதவிர, இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களில் 60 வயதுவரை பணியாற்றி, ஓய்வு பெற்ற உறுப்பினர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வழங்கும் ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

கடந்த ஆட்சியில் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆண்டில் 100 நாட்களுக்கு மாத்திரமே 20 விழுக்காடு தள்ளுபடி வழங்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல், ஆண்டில் கைத்தறிப் பொருட்களுக்கு ரூ. 41 கோடி மட்டும் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கைத்தறியாளர்களுக்கு 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதும் வழங்கி வருகிறது. மேலும், முந்தைய ஆண்டுகளில் வழங்கப்படாத ரிபேட் - தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையை ரூ. 43 கோடியாக வழங்கவும் இந்த அரசு அனுமதித்தது.

அகில இந்திய அளவில் துணிச் சந்தையிலே ஏற்பட்ட சுணக்கம் காரணமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் விற்பனை மந்தமானதைத் தொடர்ந்து 31-3-1998 ஆம் தேதியில் சுமார் ரூ. 365 கோடி அளவிற்கு சரக்கு தேக்கம் ஏற்பட்டது. இதனையும் நெசவாளர்களின் இதரப் பிரச்சினைகளையும் அறிந்த அரசு, அலுவலர்கள் மற்றும் நெசவாளர் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவை அமைத்தது. இந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பல்வேறு

சிறப்புச் சலுகைகளை சட்டப்பேரவையில் நான் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க முடியாது. இதன்படி, கைத்தறித் துணி வகைகளின் சரக்கு தேக்கத்தைத் தடுத்து, விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 31-3-1998 ஆம் தேதியில் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு 1-5-1998 முதல் 31-10-1998 வரை 6 மாத காலத்திற்கு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால், மொத்தம் 202.17 கோடி ரூபாய் மதிப்பிற்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. எனினும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 31-10-1998 ஆம் தேதியில் லுங்கி ரகம் மாத்திரம் ரூ. 16.04 கோடி மதிப்பிற்கு, இருப்பாக இருந்தது. லுங்கித் துணித் தேக்கத்தைக் கருதி, லுங்கி ரகங்களுக்கு மட்டும் 31-3-1999 வரை 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியை நீடித்து வழங்க அரசு ஆணையிட்டது. இதன்மூலம் 28-2-1999 வரை ரூ. 9.34 கோடி அளவிற்கு லுங்கி விற்பனை செய்யபபட்டிருக்கிறது.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை அரசு ஆண்டுதோறும் செயல்படுத்துகிறது. 1999 பொங்கல் பண்டிகைக்கு 77,10,000 சேலைகளும், 70,42,000 வேட்டிகளும் குறித்த காலத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இதன் வாயிலாக, 30,000 கைத்தறிகள் பயன்படுத்தப்பட்டு, ஒரு இலட்சம் கைத்தறி நெசவாளாகள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெற்றார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, மாநில அரசு உற்பத்திக்குரிய பொருட்களை ஒதுக்கீடு செய்தல் சட்டம் (Reservation Articles for Protection Act, 1985) செயல்படுத்தி, அமலாக்கப் பிரிவை ஏற்படுத்தி, சேலம், திருச்செங்கோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைகளினால் கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளார்களே தவிர, பசி பட்டினியால் யாரும் பதைக்கப் பதைக்க உயிர் விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

பிற்பகல் 12-45

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம்பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய பழனிசாமி அவர்களும் சொன்னார்கள். மற்றவர்களும் இங்கே



இதைப்பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே கல்வித் தகுதியை ஏன் எட்டாவது என்பதை பத்தாவது என்று மாற்றினீர்கள் என்று கேட்டார்கள், அதை 1989 ஆம் ஆண்டு அறிவித்தபோது 5,000 ரூபாய்தான். திருமண உதவியாக, நிதியாக அரசு வழங்கியது. அதற்குப் பிறகு நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் இதை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதிலே சான்றிதழ் வாங்குவது பெரும் சுமையாக இருக்கிறது. அதை வாங்கப் போகின்ற இடத்தில்—எதிர்க்கட்சித் தலைவரே இங்கே சொன்னார்—எது எதற்கு என்னென்ன ரேட் என்று, அப்படி சில ரேட்டுகளை அடிமட்டத்தில் இருக்கின்றவர்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், கொடுத்தால்தான் கிடைக்கும் என்கின்ற ஒரு சந்தேகத்தோடு கொடுத்து அந்தச் சான்றிதழ்களைப் பெற வேண்டிய அவல நிலை அந்தப் பெண்களுக்கு இருக்கிறது. அந்தப் பெண்களைப் பெற்றவர்களுக்கு இருக்கிறது. 10,000 ரூபாய் என்றால் ரூ. 2,000 ரூபாய் போனால் என்ன, 8,000 ரூபாயாவது கிடைக்கின்றதே என்கின்ற எண்ணத்தோடு 2,000 ரூபாய் தர வேண்டியிருக்கிறது. சில இடங்களில் பாதிக்குப் பாதிகூட அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. இந்தச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அதையும் கூறுபவர்கள் நீங்கள்தான். எம்.எல்.ஏ-க்கள்தான் அதைப்பற்றி கடிதங்கள் எழுதுகிறார்கள். இதைப் பற்றி பல இடங்களில் விசாரித்தபோது இதிலே ஏற்படுகின்ற குறைபாடுகளை எப்படி நீக்குவது என்று எண்ணிய நேரத்திலேதான், பத்தாவது வரையில் படித்து, தேர்வுகூடப் பெற வேண்டியதில்லை. அதிலே தேர்ச்சி பெறத் தேவையில்லை. பத்தாவது படித்து பரிட்சை எழுதி அதில் தேர்வாகாவிட்டாலும், பத்தாவது வரையிலே படித்ததற்கான Certificate தரப்படும். இயல்பாகவே அந்த Certificate தானாகத் தரப்படும். அந்த Certificate-ஐ வைத்துக்கொண்டு அவர்களுக்கு இந்தத் தொகையை வழங்கலாம். இப்படி வழங்குகின்ற நேரத்திலே வேறு எந்த விதியையும் தளர்த்தவில்லை, எடுத்துவிடவில்லை, எல்லா விதிகளும் இருக்கின்றன. வருமான வரம்பு. இந்த வருமானத்திற்குக்கீழே உள்ளவர்களுக்குத்தான் வழங்கப்படும்; அதிலே ஏழைப் பெண்கள் யாரும் விடுபட்டுப்போய்விட மாட்டார்கள். அதே 70 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அடுத்த ஆண்டு பாருங்கள், இந்த 70 கோடி ரூபாயிலே 70,000 பெண்கள் திருமண உதவி பெற்றிருக்கிறார்களா, இல்லையா என்பதை அடுத்த ஆண்டு பாருங்கள். அப்படிப் பெற்றிராவிட்டால் என்னைக் கேளுங்கள். 'எட்டாவது வரையிலே', என்று மாற்றிக்கொள்ளக்கூட நான் தயாராக இருக்கின்றேன். அந்த அளவிலே அவர்களுக்குப் போய்ச் சேர

வேண்டிய பணம் 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் போல' என்று ஆகிவிடக்கூடாது, என்பதற்காகத்தான், நெல்லுக்கே போய்ச் சேர வேண்டுமென்பதற்காக 'பத்தாவது வரையிலே' என்று இந்தத் திட்டம் இப்போது வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தேசியத் தலைவர்கள், தேசத்தினுடைய விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள், மொழிக்காகப் பாடுபட்டவர்கள், பேரறிஞர்கள் இவர்களை எல்லாம் கௌரவிக்கின்ற அரசு இந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டினோம். மருதுபாண்டியருக்கு நினைவகம் அமைத்தோம். பூலித்தேவனுக்கு மாளிகை கட்டினோம். சுந்தரலிங்கம் நகர் உருவாக்கினோம். விசுவநாததாஸ் நினைவு இல்லம், சுபாஷ் சந்திரபோஸ் சிலை, தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம், பெரியார் நினைவு சமத்துவபுரம், காமராஜர் நினைவகம், காமராஜர் உள்நாட்டு விமான முனையம், இராஜாஜி நினைவகம், ஜீவானந்தம் நினைவகம், பக்தவச்சலம் நினைவகம், கக்கன் சிலை, தியாகிகள் மணிமண்டபம், சிப்பாயக் கலகத்திற்கு நினைவுத்தூண், நாமக்கல் கவிஞர் மாளிகை, பொன் விழா நினைவுச் சின்னம், தியாகிகள் மணிமண்டப முகப்பில் சங்கரலிங்கம் மற்றும் பாஷ்யம் ஆகியோர் சிலைகள். அதை நீங்கள் யாரும் பாராட்டிக்கூடப் பேசவில்லையே. த.ம.கா.-விலே பேசியவர்கள் யாரும் சங்கரலிங்கத்திற்கு சிலை, பாஷ்யத்திற்கு சிலை, இதை யாரும பாராட்டிப் பேசாதது வருத்தத்திற்குரியது. இவ்வளவு சீக்கிரம் அவர்களை மறந்துவிடக்கூடாது.

கட்டபொம்மனுக்கு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒரு விழாவிலே கேட்டுக்கொண்டதற்கிணங்க, நினைவூட்டியதற்கிணங்க, கயத்தாற்றிலேயே கட்டபொம்மனுக்கு புகழாஞ்சலி—இந்த ஆண்டு 200-வது ஆண்டை நினைவுபடுத்துகின்ற வகையிலே புகழாஞ்சலி. அதைப்போல அதற்கு அடுத்த ஆண்டு மருதுபாண்டியருக்கு சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலே நினைவாஞ்சலி. காமராஜருடைய மணிமண்டபம் என்ன ஆயிற்று என்று நமமுடைய அப்பாவு அவர்கள் கேட்டார்கள். நம்முடைய டாக்டர் இராமன் அவர்களும கேட்டார்கள். 19-4-1998 அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற ஜீவானந்தம் மணிமண்டபத் திறப்பு விழாவிலே பேசும்போது கன்னியாகுமரி கடற்கரையிலே காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜர் மணிமண்டபம் கட்டப்படும என்று அறிவித்திருந்தேன். இந்த அறிவிப்பையொட்டி,



அதற்கான ஏற்பாடுகள் உடனடியாக எடுக்கப்பட்டன. எப்போதும் என்னுடைய அறிவிப்புகள் அறிவிப்புகளாக நின்று விடுவதில்லை; உடனடியாக அமலுக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-50

காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடம்—மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் 27-9-1996 ஆம் நாளிட்ட ஆணையின்படி, கடற்கரைப் பாதுகாப்பு விதிகளின்படி, கடற்கரையிலே இருந்து 500 மீட்டர் தொலைவுவரை கட்டடம் கட்டுவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியாகும். எனவே, மத்திய அரசின் அனுமதி பெற தொடர்புடைய துறையிடமிருந்து விவரங்களைப் பெற்று மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறைக்கு 7-8-1998 அன்று அனுப்பப்பட்டது. சில விஷயங்களில் மத்திய அரசினுடைய அனுமதிப் பெற வேண்டியிருக்கும்.

நான் 1969 இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, இந்தக் கோட்டை எப்படி இருந்தது என்று ஒருமுறை நீங்கள் மனக் கண்ணால் பார்த்துக் கொள்ளலாம். கோட்டை முழுவதும் கள்ளிக் காடு, பாம்பு, பல்லி என்கின்ற அளவுக்குப் பயங்கரமான காடு முளைத்திருந்தது. எதிரே இப்படி சோலைவனமாக இல்லை. அதிகாரிகளைக் கூப்பிட்டு, 'இதையெல்லாம் சரி செய்யுங்கள்; இந்த மரங்களை எல்லாம் வெட்டுங்கள்; புதர்களையெல்லாம் அழியுங்கள்' என்றேன். அதிகாரிகள் கை பிசைந்து நின்றார்கள். என்ன என்று கேட்டேன். இதெல்லாம் உங்கள் உத்தரவிலே இல்லை; மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டும், இராணுவத்தைக் கேட்க வேண்டும் என்றார்கள். உடனே மத்திய சர்க்காருக்கு எழுதினேன். அப்போது, திரு. கிருஷ்ணா Minister of State for Defence ஆக இருந்தார். அவர் உடனடியாக எனக்குக் கடிதம் எழுதி, நான் வந்து நேரடியாகப் பார்த்துவிட்டு உத்தரவு போடுகிறேன் என்றார். அவர் வந்து பார்த்துவிட்டு போய், 3 மாதங்கள் கழித்து, இந்தப் புதர்களை எல்லாம் அழிக்கலாம் என்று அரசுக்கு உத்தரவு கொடுத்தார். மாநில சுயாட்சி கேட்பதற்கு, வந்த ஆத்திரத்திலே அது ஒரு காரணம். (சிரிப்பு) இருக்கிற புதர்களையும், கள்ளிக் காட்டையும் அழிப்பதற்கே மத்திய சர்க்காரிடத்திலே உத்தரவு கேட்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. வனத் துறைக்கு 7-8-1998 அன்று அனுப்பப்பட்டது. மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை 7-10-1998 நாளிட்ட கடிதத்தின் மூலம் சில விவரங்களை நம்மிடமிருந்து கோரியது. அந்த விவரங்கள் அனைத்தும் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசின் 21-1-1999 சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் ஒப்புதலோடு

அன்று மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் நினைவூட்டுக் கடிதம் 22-2-1999 அன்றும் அனுப்பப்பட்டது. காமராஜர் மணிமண்டபம் கன்னியாகுமரி கடற்கரையில் அமைப்பது தொடர்பாக முழுவிவரங்களும் பத்திரிகைகளுக்குச் செய்திக் குறிப்பாக 7-1-1999 அன்று, செய்தித் துறை அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு, 22-2-1999 அன்று மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் இணை இயக்குநரிடமிருந்து வந்துள்ள பதிலில், "The undersigned is directed to refer to the above and inform you that the construction of the proposed Memorial in CRZ 1 area is not permissible, as per the provisions of the CRZ Notification 1991 as amended from time to time. Therefore, we regret our inability to consider the proposal. You may identify a suitable site for the memorial in conformity with the provisions of the Notification." அதாவது அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்ட கடற்கரை "ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பகுதி அறிவிக்கை 1991-இல் உள்ள அம்சங்களின்படி, கடற்கரை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பகுதி-I இல் கருதப்பட்டுள்ள நினைவகம் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கருத்துருவைப் பரிசீலனை செய்வதற்கு இயலவில்லை என்பதற்கு வருந்துகிறோம். அறிவிக்கையில் சொல்லப்பட்டுள்ள அம்சங்களுக்கேற்ப நினைவகம் அமைக்கத்தக்க இடத்தை தாங்கள் தேர்வு செய்து கொள்ளலாம். இந்த இடம் முடியாது; நாகர்கோவிலிலே, கன்னியாகுமரியிலே வேறு எங்காவது இடம் பாருங்கள்; அந்த இடம் முடியாது". எந்த இடம் வேண்டுமென்று அங்குள்ள காங்கிரஸ் நண்பர்களும் மற்ற தோழர்களும் போராடி வருகினறார்களோ, அந்த இடம் முடியாது என்று மத்திய அரசு இந்தக் கடிதம் மூலமாக அறிவித்தது இவ்வளவு நினைவூட்டுக் கடிதங்களுக்குப் பிறகும்.

அதுமாத்திரமல்ல; தில்லையாடி வள்ளியம்மைக்கு ஒரு தபால் தலை வெளியிட வேண்டுமென்று எழுதப்பட்ட கடிதத்திற்கு, 'அதுவும் முடியாது, மத்திய அரசின் அஞ்சல் துறை விதிமுறைகளில் பொருந்தி வரவில்லை என்று பதில் வந்துவிட்டது'. தில்லையாடி வள்ளியம்மாள் மத்திய அரசின் அஞ்சல் துறையினுடைய விதிமுறைகளிலே பொருந்தி வரவில்லையாம்! அதனால் இது முடியாது என்று எழுதி விட்டார்கள். பிறகு நான் 1-3-1999 அன்று பிரதமருக்கு, இந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டும் என்று மறுபடியும் கடிதம் எழுதி இருந்தேன். அதுபோலவே, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு



அஞ்சல்தலை வெளியிட வேண்டுமென்றும் எழுதியிருந்தேன். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் — தாடியில்லாத பெரியார் என்று அழைக்கப்பட்ட — அந்தக் காரணத்தினாலோரே, என்னவோ அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. யார், யாருக்கோ அஞ்சல் தலை வெளியிடப்படுகிறது. நான் யாரையும் இதனால் தாழ்த்தியோ, இறக்கியோ பேச விரும்பவில்லை. எல்லோருக்கும் வெளியிடலாம். ஆனால், ஓமந்தூராருக்கு வெளியிட, காந்தியடிகளோடு தென்னாப்பிரிக்கப் போராட்டத்திலே இணைந்து பாடுபட்ட தில்லையாடி வள்ளியம்மைக்குத் தபால் தலை வெளியிட, பெருந்தலைவர் காமராஜருக்கு கடற்கரை ஓரத்திலே மணிமண்டபம் எழுப்ப மத்திய அரசிடமிருந்து வந்துள்ள பதில்களைத்தான் உங்கள் முன்னிலையிலே நான் வைத்திருக்கிறேன். எனவே இது இந்த அரசினுடைய குற்றம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-55

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் வளாகம்பற்றிப் பேசும்போது, நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள்—அதை தொண்டமான் நினைவு மாளிகை என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது—குறைந்த விலைக்கு வாங்கிவிட்டோம் என்று சொன்னார்கள். அப்போது 35 இலட்சம், 40 இலட்சம் என்றால், இப்போதுள்ள பண மதிப்பீட்டிற்கு அது எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியும். அதனால் மதிப்பைக் குறைத்து வாங்கிவிடவில்லை. இருவருக்கும் திருப்தியாகத்தான் அது வாங்கப்பட்டது. இடையில் நம்முடைய அருமை நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் முன்னின்றுதான், அந்தக் குடும்பத்தாருடன் பேசி அரசுக்கு அந்த இடத்தை பெறுவதற்கான முயற்சிகளிலே அப்போது ஈடுபட்டார். அதற்குப் பிறகு, அங்கே இராஜகோபால் தொண்டமானுடைய பெயர் அந்த மாளிகைக்கு வைக்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மாளிகை முகப்பிலே அவருடைய சிலை வைக்கப்பட வேண்டுமென்று திருநாவுக்கரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, விரைவிலே சிலை வைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மனிதக் கழிவுகளை அகற்றுகின்றவர்கள் பற்றி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. அதுபற்றிக் கூட இங்கே அன்பில் பொய்யாமொழி பேசும்போது, நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் குறுக்கிட்டு, ஏற்கெனவே உள்ள திட்டம்தான், அதற்கு என்ன நிதி ஒதுக்கியிருக்கிறார்களா என்றெல்லாம் கேட்டார்கள். ஒரு நல்ல

திட்டத்தை வரவேற்கிற நேரத்திலே அதற்கு சிறு ஊனம் வருகின்ற அளவிற்குப் பேசுவது முறையாக இருக்க முடியாது. இருந்தாலும்கூட நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே, இது மத்திய சர்க்கார் அறிவித்து, பல மாநில அரசுகளால் பின்பற்றப்படாமல், ஏற்றுக்கொள்ளப்படாமல் அப்படியே இருக்கின்ற திட்டம். நம்முடைய மாநிலம்தான் 1989-ல், இந்த ஆட்சி இருந்தபோது இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று, அதற்கான Survey எல்லாம் செய்யத் தொடங்கியது. அதைப்பற்றிய விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன: உள்ளாட்சி அமைப்புகளிலே பணிபுரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சாலைகளைப் பெருக்குதல் போன்ற மாற்றுப் பணிகள் வழங்கப்படும். மாற்றுப் பணிகள் செய்ய விருப்பம் இல்லாதவர்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியாத பணியாளர்களுக்கும் THADCO நிறுவனம் சொந்தமாக வியாபாரம் அல்லது தொழில் செய்ய அவர்களுக்கு உதவிட முன்வரும். துப்புரவுப் பணியாளர்களுக்கோ அலலது அவர்களுடைய குடும்பத்தார்களுக்கோ, அவர்கள் விரும்பும் தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்திற்கு ஓராண்டுவரை, மாதம் ஒன்றுக்கு ரூ. 350 உதவித் தொகையாகவும் அளிககப்படும். வியாபாரம் அல்லது சுய தொழில் தொடங்க 50,000 ரூபாய்வரை நிதியுதவி அளிக்கப்படும். இதில் மானியம் 50 விழுக்காடு, (அதிகபட்சம்) 10,000 ரூபாய், விளிம்புத் தொகை (Margin money), கடன் 15 விழுக்காடு, (இதற்கு வட்டி 4 விழுக்காடு), மீதி 35 விழுக்காடு வங்கிக் கடனாக வழங்கப்படும். 1989-90-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 35,561 துப்புரவுப் பணியாளர்கள் மனிதக் கழிவை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். ஏற்கெனவே கொஞ்சம் கொஞ்சமாகப் பணியமர்ததப்பட்ட 15,000, 16,000 போக மீதமுள்ள 18,000 அல்லது 20,000 துப்புரவுப் பணியாளர்களுக்கு THADCO நிறுவனத்தின் மூலம் உதவிட 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம், 1 கோடியே 7 இலட்சம ரூபாயும் இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொளகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுவதன் மூலம் தமிழ்நாட்டில் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் கொடுமை ஒழிக்கப்படுகிறது என்ற நல்ல செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத தட்டும் ஒலி)



உணவு உற்பத்தி வளர்ச்சியைப்பற்றி கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. இதிலே மொத்த உற்பத்தி வளர்ச்சி 1997-98 ஆம் ஆண்டின் அளவான 6.31 விழுக்காட்டோடு ஒப்பிடும்போது 1998-99 ஆம் ஆண்டில் 6.78 விழுக்காட்டை எட்டும் நிலையிலே உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 98 இலட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் மகிழ்ச்சியோடு குறிப்பிடப்பட்டிருந்தது. இதுபற்றிப் பேசிய நம்முடைய சுப்பராயன் அவர்கள், இதை நான் பாராட்டுகிறேன், ஆனால் இந்த வளர்ச்சிக்கு, இந்த விளைவுக்கு 98 இலட்சம் டன் உங்களுக்குக் கிடைப்பதற்கு உதவியாக இருந்தவர்களையெல்லாம் மறந்துவிட்டீர்களே என்றார். அவர்கள் எல்லாம் இந்த பட்ஜெட்டிலே இடம் பெறவில்லையே என்று மிகுந்த வேதனையோடு அவர் அன்றைக்கு பேசியிருக்கின்றார்.

பிற்பகல் 1-00

நான் சுப்பராயன் அவர்களுக்கு மாத்திரமல்ல, விவசாயிகளுக்காக கவலை தெரிவிப்பது இயல்பானது. அவர்களும் தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஆதாரமாக இருப்பவர்கள் தொழிலாளர்கள், பொதுவான பாட்டாளி மக்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பவர்கள் என்பதை நான் நிச்சயமாக மறுக்கமாட்டேன். ஆனால், விவசாயிகள் நலனுக்காக எதுவுமே இல்லை என்று பழனிசாமி அவர்கள்கூடச் சொன்னார்கள். “உலகத்தையெல்லாம் பார்க்கிற கலைஞர், இந்தியாவிற்கே அரசியல் நடத்துகிற கலைஞர், ஏன்தான் அந்த விவசாயிகளை மறந்துவிட்டார்களோ தெரியவில்லையே” என்று சொன்னார். எங்கள் வீட்டிலே கேட்பார்கள், “ஊர் எல்லாம் சுற்றுகிறீர்கள், வீட்டைக் கவனிப்பதில்லை” என்று. (சிரிப்பு) அதுமாதிரி நம்முடைய பழனிசாமி ‘‘உலகத்தையெல்லாம் பார்க்கிற கலைஞர் விவசாயிகளை கவனிக்கவில்லையே’’ என்று சொன்னார். எப்படி அவர்களை கவனிக்கிறோம் என்பதைக் கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், அதை விவசாயிகளிடத்திலேயும் சொல்ல வேண்டும். இப்போது, விவசாயிகளிடம்போய், கையிலே 100 ரூபாய் கொடுத்தால்தான் அவர்களைக் கவனிப்பதாக அர்த்தமா? அதை சுப்பராயன் விரும்புவாரா? அது தொங்கும் சதை ஆயிற்றே, ஒத்துக்கொள்வாரா? (சிரிப்பு)

அவர்களுக்கு அடிப்படையிலே பொருளாதார ரீதியாக வசதிகளைப் பெருக்குவதன் மூலம் அவர்களுக்கு உதவிட வேண்டும். இப்போது பாசன தண்ணீர் கிடைப்பதை அதிகரிக்கச் செய்ய ஆற்றுப் படுகைகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் குளங்கள் ஆகியவற்றை ரூ. 58 கோடி செலவில் தூர்வாருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வரும் ஆண்டில் 50 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதாரம் நிலைப்படுத்தும் திட்டம் மொத்தம் 1,140 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் இதுவரை 344 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 174 பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. பாசனத்திற்காக கடந்த 3 ஆண்டுகளில் 17,4.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் நிதியாண்டிற்கு 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுடைய நலன் கருதி தரிசு நில மேம்பாட்டிற்கு, வரலாற்றில் இடம் பெறும் திட்டம் ஒன்று, வரும் நிதியாண்டிலேயே தொடங்கப்பட்டு 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளது. தரிசு நில மேம்பாட்டு ஆணையம் (Waste Land Development Authority) ஒன்றையும் அரசு அமைக்கும் என நிதிநிலை அறிக்கையிலேயே கூறியிருக்கிறேன்.

தோட்டக்கலை உற்பத்திப் பொருள்கள் உபரியாக இருக்கும் காலத்தில் உழவர்கள் அவற்றைச் சேமித்து வைத்து நியாயமான விலை பெற ஏதுவாக குளிர்பதன சேமிப்புக் கிடங்கு கட்டும் திட்டம் 40.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு உள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உரத்திற்கான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. பருத்திக்கான கொள்முதல் வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மேலும் சொட்டு நீர்ப் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் விசை உழவுக் கருவிகள், இழுவைகள் மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது, இந்த ஆண்டிலே



விவசாயிகளுக்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் அரசுக்கு 44 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது.

விவசாயிகளுக்கு அரசு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் 1996-97 ஆம் ஆண்டில் 6,678 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்பட்டு, அதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1,321 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் 7,196 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்பட்டு 1,580 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு 7,586 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 58 காசு என்ற வீதத்தில் தமிழ்நாடு மினசார வாரியத்திற்கு 1,945.19 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இவ்வாறு ஏற்பட்ட மொத்த இழப்பு 4,747 கோடி ரூபாய் என்பதை நான் ஞாபகப்படுத்துகின்றேன்.

தமிழ்நாட்டில் விதிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை நாட்டிலேயே மிகவும் குறைவானது ஆகும். இது 1962 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படவே இல்லை. பெரிய, நடுத்தர மற்றும் சிறு பாசனங்கள் மூலம் அரசுக்கு இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் மாத்திரமே வரவு கிடைக்கும். ஆனால், இந்தப் பாசனத் திட்டங்களைப் பராமரிக்கும் செலவு 37 கோடி ரூபாய். 37 கோடி ரூபாய் செலவழித்துவிட்டு, 10 கோடி ரூபாய்தான் வரியாகப் பெறுகிறோம். இந்த வகையிலும் விவசாயிகள்தான் பயன் அடைகின்றார்கள். இது தவிர, ஆண்டில் உணவு தானிய உற்பத்தி, தரிசு நில மேம்பாடு போன்ற பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 48 கோடி உதவித் தொகையாக வழங்கி, அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

பிற்பகல் 1-05

கிராமங்களுக்கு இணைப்புச் சாலை, ஊரகக் குடிநீர்த் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்றவை எல்லாம் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி தீட்டப்படும் திட்டங்கள்தான். தமிழகத்திலே 1993-லேயிருந்து 1995 வரை, 6.6 விழுக்காடாக உயர்ந்த விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி, 1996-லேயிருந்து 1998 வரை 26.8 விழுக்காடாக விவசாயிகளுடைய கூலி உயர்ந்துள்ளது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலைப்புள்ளிக் குறியீடு (Price Index), அவர்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலைப்புள்ளி குறியீடுகளைவிட (Terms of Trade) 20 விழுக்காடு உயர்ந்துள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் கடன்

பாக்கிகளை வசூல் செய்வதில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இந்த விவாதத்தில் அவையின் பல உறுப்பினர்கள் விவசாயிகளுடைய அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அவ்வாறு செய்வதற்கு நபார்டு வங்கி ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே அதற்குப் பதிலாகத் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆந்திராவிலே இருப்பதைப்போல செய்யக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவரும் கேட்டார். பழனிசாமி அவர்களும் கேட்டார்கள். மற்றவர்களும் கேட்டிருக்கின்றார்கள். இந்த மாநிலத்தில் தஞ்சையில் மாத்திரம் 60,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை கிடையாது என்றும், இந்தச் சலுகை மாநிலம் முழுமைக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த [illegible] மாநிலம் முழுவதும் இயங்கிவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் 11,21,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் விவசாயம் மற்றும் விவசாய சார்புடைய குறுகிய கால மற்றும மத்திய காலக் கடன்களைப் பெற்றுள்ளார்கள். இவர்களில் நிலுவையிலே உள்ள கடன்களை முழுவதையும் வட்டி மற்றும் அபராத வட்டியோடு நடப்பு கூட்டுறவு ஆண்டில் திருப்பிச் செலுத்துவோருக்கு—திருப்பிச் செலுத்தவேண்டும். செலுத்திய பிறகு வேறு கேட்கக்கூடாது. அதையெல்லாம் adjust பண்ணிக் கொள்வோம். உங்களுக்குத் தெரியும். அங்கே போய் திருப்பிச் செலுத்துவோருக்கு — அவர்களது நடப்புக் கடனில் 6.25 விழுக்காடு தொகையை, ஊக்கத்தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும ஒலி)

உதாரணமாக, ரூ. 5,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ. 312.50 ஊக்கத்தொகை வழங்கப்படும். ரூ. 10,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ. 625 ஊக்கத்தொகை வழங்கப்படும். ரூ. 25,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ. 1,562 ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்தக் கணக்கைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நடப்பு ஆண்டில் ஏற்கெனவே செலுத்தியவர்களுக்கு இந்தத் தொகை ஈடுசெய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றோடு பல திட்டங்களை அறிவித்தேன். நேற்றையதினம் பொதுப்பணித் துறை அமைச்சர் என்னிடத்திலே



பேசிக்கொண்டிருந்தபோது ஒன்றைச் சொன்னார். இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ள தொகையில் 'டெண்டர்' விட்டதில் அதைவிடக் கொஞ்சம் குறைவான செலவுதான். தஞ்சை போன்ற இடங்களில், திருச்சி போன்ற இடங்களில் ஆகும் என்று தெரிகிறது. ரூ. 10, 12 கோடி மிச்சம் ஏற்படும் என்று தெரிகின்றது என்றார். அப்படியானால் வேறு மாவட்டங்களுக்கு அதைத் திருப்பு என்று பொதுப்பணித் துறை அமைச்சரிடம் — திருப்புங்கள் என்று சொன்னேன். அவையிலே சொல்லக் கூடாது திருப்பு என்று. அதன்படி கீழ்பவானி ஆற்றுப் பாசனப் பகுதியிலே உள்ள பாசனக் கால்வாய்கள் நீண்டகாலமாகத் தூர் வாரப்படாமலும், பழுதடைந்து கட்டுமானப் பகுதிகள் சீர் செய்யப்படாமலும் இருப்பதால் கடைமடைக்கும் மற்றும் அதன் பாசனப் பகுதிகளுக்கும் போதிய நீர் கிடைக்கவில்லை. இக்குறையைப் போக்க வேண்டுமென்று திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் நேற்றைய தினம் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். இந்த மிச்ச ரூபாயை என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தபோது அதற்கு ஒரு கிராக்கி வந்துவிட்டது. அதனபடி அந்தக் குறையைப் போக்க இந்த ஆண்டு முதல் தவணையாக ரூ. 10 கோடி அதற்காக ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதைப்போலவே நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பாசனத்திற்குப் பயன்படும் தாமிரபரணி, குமரி மாவட்டத்திலே பாயும் கோதையாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளிலே உள்ள கால்வாய்களை இந்த ஆண்டே சீர் செய்து தூர் வாரித்தரப்பட வேண்டுமென்று பொதுப்பணித் துறை அமைச்சருக்கு வேண்டுகோளாக விடுத்திருக்கிறேன். அவர் எழுதிக் கொடுக்கும்போது 'உத்தரவிட்டிருக்கிறேன்' என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். பொதுப்பணித் துறை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். உலக வங்கி நிதியிலிருந்து இப்பணிக்குப் போதிய நிதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வரிகளைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மேலும் இந்த வரி மாற்றம் பற்றிய சில அறிவிப்புகளை இங்கே வழங்க நான் முன்வருகின்றேன்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் பகுதி 'டி' வரிசை எண் 67-லே உள்ள, எந்த அட்டவணையிலும் இடம் பெறாத பிற பொருட்கள் அவற்றுக்கு ஈடான பொருட்கள் இடம் பெறும் பகுதிகளில் சேர்க்கப்படும் என்று அறிவித்திருந்தேன். இதுபற்றி சிறு விளக்கம் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக, என்னென்ன இனங்களுக்கு

11 விழுக்காடு வரியிலேயிருந்து வரி விலக்கு, வரி குறைப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் உதாரணங்களோடு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

பருத்தியினால் செய்யப்பட்ட கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், கரும்புச் சக்கை போன்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகர்பத்தி, வெப்ப அளவி, லேக்டோஸ் IP/BP காலி gas சிலிண்டர், அனைத்து வகை கம்பித் தடுப்புகள் (Grills) காகித நாப்கின்கள், சாவிக் கொத்துககள், போட்டோ ஆல்பங்கள், இரும்பு அல்லாத மற்றும் கலப்பு உலோகங்களின் கழிவுகள், கண்ணாடிப் புட்டிகளில், சாஷேய்களில், கேன்களில் அடைக்கப்பட்ட தண்ணீர், Distilled Water, செயற்கை எலும்புகள், எலும்பு சிமெண்டு, Abdominal Belt, knee cap போன்ற பொருள்களுக்கு விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பழுதடைந்த (Condemned) கோணிப் பைகள், அனைத்து வகை கொசு வலைகள், நாப்தலின் உருண்டைகள், சணலினால் செய்யப்பட்ட மேஜை விரிப்பு, மிதியடி, கைவினைப் பொருட்கள், உடற்பயிற்சிக்கான பொருள்கள் மற்றும் உபகரணங்கள், குழந்தைகள் பயன்படுத்தும் விளையாட்டுச் சாதனங்கள், ஓட்ஸ், பாத்திரங்களை சுத்தப்படுத்தும் பொடிகள், வேர்க்கடலை, எள், பொரி, வறுகடலை, — எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வறுகடலை, (குறுக்கீடு) நிறைய சாப்பிட்டிருக்கிறீர்களா? இப்போது முடியாது போல இருக்கிறதே? வேர்கடலை, எள், பொரி, வறுகடலை மற்றும் பட்டாணி, பருப்பு வகையினால் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், வணிகச் சின்னமிடப்பட்ட சுண்டைக்காய் வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல் போன்ற காய்கறி வத்தல்கள், செம்மண்/சிகப்பு சரளைக் கற்கள், ஆகிய பொருட்களுக்கு 11 விழுக்காடு வரியிலிருந்து 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வணிகச் சின்னம் இல்லாத சுண்டைக்காய் வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல போன்ற காய்கறி வத்தல்கள் ஆகியவற்றிற்கு 11 விழுக்காடு வரியிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



அட்டவணைப்படுத்தும், கணக்கிடும் இயந்திரங்களுக்கு (மின்னணு அல்லாதவை—பிரிவு ஜி. வரிசை எண் 18) 20 விழுக்காடு வரியிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நடுத்தர அடர்த்தி இழை அட்டை, எம்டிஎஃப். போர்டுக்கு வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் மேற்கண்ட பொருட்கள் 16 விழுக்காட்டில் நீடிக்கும் வகையில் அட்டவணையில் குறிப்பாகச் சேர்க்கப்படுகிறது.

தமிழ் தினசரி நாட்காட்டிக்கு, வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது -- ரத்னவேலுக்காக.

பழைய புட்டிகள் வியாபாரம் செய்யும் சிறு வணிகர்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கோரப்பட்டது. அவர்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை விலக்கி, அந்த புட்டிகளை வாங்கிப் பயன்படுத்துவோருக்குக் கொள்முதல் வரியாக அது மாற்றி அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு (குறுக்கீடு) இப்போதிருக்கிற அதே விழுக்காடுதான். இந்த அளவோடு இந்த வரி மாற்றங்களை வெளியிடுவதோடு...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் பேசி முடிக்கவே இல்லை, கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வரிக்கு வரி இந்த வரவு செலவுத் திட்டத்தைப் படித்து அருமையான உரைகளை, கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் (குறுக்கீடு) நன்றியினைத் தெரிவித்து, அண்ணா வாழ்க, என்று கூறி என் உரையை முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிகவும் தவறான முன் மாதிரியை இப்போது சட்டமன்றத்திலே ஏற்படுத்துகிறீர்கள். நான் கூப்பிடுகிற உறுப்பினர்தான் எழுந்து நிற்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கன்னியாகுமரி கடற்கரை அருகே 500 மீட்டர் தூரத்திற்கு அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் கட்ட வேண்டுமென்று

இருக்கின்றது. ஆனால், தினந்தோறும் அங்கு கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜருடைய மணிமண்டபத்தை உடனடியாகக் கட்டுவதற்கு, நம்முடைய அண்ணா சமாதி, நம்முடைய எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதி எல்லாம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருப்பதுபோன்று விரைவிலேயே, அந்த அஸ்தி வைக்கப்பட்டிருக்கின்ற இடத்திலேயே, நீங்கள் மணிமண்டபத்தைக் கட்டி, உங்கள் திருக்கரங்களினாலேயே திறந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்:

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களைவிட நான் நிச்சயமாக 15 வருடம் இளையவன்தான். ஆனால் அவருடைய அரசியல் அனுபவம் என்பது எல்லா அரசியல்வாதிகளும் பின்பறறக்கூடிய ஒரு நல்ல அனுபவம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மறக்கவில்லை. ஆனால் அதேநேரத்தில் சென்ற தேர்தலில் நாம எல்லாம் கூட்டணியாக இருந்தோம். ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்கிறேன். நம்முடைய கலைஞர் அவர்களைப் பற்றியோ, அவர்கள்மீது இருககின்ற மரியாதையைப் பற்றியோ நாங்கள் எந்தக் காலத்திலேயும் ஒன்றும் குறைத்து மதிப்பிடுகிறவர்கள் அல்ல. குறைவான வார்த்தைகளையும் நாங்கள் பேசமாட்டோம். ஆனால், அதேநேரத்தில் எதிர்க்கடசி என்கின்ற முறையில் இந்த நாட்டில், கன்னியாகுமரியிலிருந்து சென்னைவரை ஏராளமான கோரிக்கைகள், புகார்கள் எங்களுக்கு வநதுகொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம அவையிலே சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை என்கின்ற முறையில் சொல்கிறோம். அதேநேரத்திலே, இந்த பட்ஜெட்டிலே எல்லாம்கூட, நான் ஒன்றும் பெரிய பொருளாதார நிபுணர் கிடையாது, பல நல்ல அறிஞர்களை வைத்துப் படித்து, — ஒரு மாணவனைப்போல படித்து, எனக்குத் தெரிந்ததை இங்கே வந்து நான் சொல்கிறேன். ஆகவே, அதைத் தயவுசெய்து நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து நிறகக்கூடாது, யாராவது ஒன்றிரண்டு பேர் எனறால பரவாயில்லை.



**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Please permit us to ask clarifications.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. I am not allowing. I cannot make an exception for you.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை என்பது முக்கியமான ஒன்று, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள். எங்களுடைய Privilege-ல் நீங்கள் தலையிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** There are ten Members rising. Why should I give you the privilege?

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சத்தம் போடக்கூடாது. நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் இப்போது தாமரைக்கனி மாதிரி ஆரம்பித்துவிட்டீர்கள். 10 பேர் கையைத் தூக்குகிறார்கள். நான் அனுமதி தரமுடியாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மைக்கைப் போட்டால் சத்தம் போட வேண்டியதில்லை. மைக் இல்லையென்பதால் சத்தமாகத்தானே பேச வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** நீங்கள் அனுமதி கொடுக்கவில்லை என்பது ரெக்கார்டு ஆகட்டும். அதற்குப் பிறகு நான் உட்கார்ந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. ஆர். சொக்கர்:** மகிழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் செவ்வாய்க்கிழமை (30-3-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

V211,31'N99 ,199.67.3



## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

100. 1997ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி மதிப்பீடுகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஏற்பளித்தல் குறித்த பண வரையறைகள் விதிகளில், திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 10-12-1997ஆம் நாளிட்ட 301ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

101. 1997-98ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

102. 1997-98ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

41. 1999-2000 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

42. 1999-2000 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

43. 1998-99ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

44. 1998-99ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

45. 1998-99ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

221073

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.